928

A Descriptive Catalogue of the

# TAMIL MEDICAL MANUSCRIPTS

*in the*

Thanjavur Maharaja Serfoji's Saraswathi Mahal Library,

Thanjavur.

DR. S. VENKATARAJAN, L. I. M. (Regd.)

*Pandit, Saraswathi Mahal.*

Vol. IV.

[Pub]lished under the authority of the Administrative Committee

BY

Sri. O. A. NARAYANASWAMY, B. A., B. L.,

*The Honorary Secretary,*

T. M. S. S. M. Library, Thanjavur.

1965.

தஞ்சை சரபோஜி ஸரஸ்வதி மகால் நூல்நிலையத்

# தமிழ் சுவடிகளின் தொகுப்பு

(நான்காம் பாகம்)

## (வைத்யப் பகுதி)


தொகுப்பாசிரியர் :

**Dr. S. வெங்கட்டராஜன்,** L. I. M. (Regd.)

*ஸரஸ்வதி மகால், தஞ்சை.*



தஞ்சை ஸரஸ்வதி மகால் நூல்நிலையத்தினருக்காகக்

கௌரவக் காரியதரிசி

ஸ்ரீ O. A. நாராயணஸ்வாமி, B. A., B. L.,

*அவர்களால் வெளியிடப்பட்டது.*

அச்சகம் :

உக்கடை ஸ்ரீ அம்பாள் அச்சகம், தஞ்சை.

சகம் : 1887.] 1965. [விலை : ரூ. 2-50.

# முன்னுரை.

புகழ்பெற்ற சரபோஜி மன்னர் அரும் பாடுபட்டு ஆராய்ந்து சேகரித்துள்ள வைத்ய சுவடிகள் தொகுப்பு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து இங்கு மேலும் சேகரிக்கப்பட்டுள்ள வைத்ய சுவடிகள் தொகுப்பை இதில் வெளியிடுகிறோம்.

சரபோஜி மன்னர் துவக்கிய பெரும் பணியை தொடர்ந்து ஏற்று, இச்சுவடிகளை ஆராய்ச்சிசெய்து, யாவருக்கும் உதவும்வகையில் மலிவுப் பதிப்புகளாக வெளியிட, மத்திய அரசினர் மான்யம் கொடுத்துதவ முன் வந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அப்போதைக்கப்போது சேகரித்து சேர்த்துவரும் வைத்ய சுவடிகளின் விவரமான தொகுப்பைத் தொடர்ந்து வெளியிட்டுவர உதவிவரும் சென்னை அரசினருக்கு நூல்நிலைய நிர்வாகக் குழுவின் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

தஞ்சாவூர்,
15-3-'65.

**O. A. நாராயணஸ்வாமி,**
*Honorary Secretary,*
T. M. S S. M. Library, Thanjavur.

# முகவுரை.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில் சேக ரிக்கப்பட்டுள்ள வைத்தியச் சுவடிகளின்தொகுப்பு முன் னாள் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ L. உலகநாத பிள்ளை அவர்க ளினால் 1928-ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. அதற்குப் பின்னர் சுமார் 250 சுவடிகள்வரை வைத்யசாஸ்திரத்தில் மட்டும் சேர்ந்துள்ளன. அவற்றுள் தற்போது 66 சுவடிகளின் குறிப்பு இத்தொகுப்பில் இடம்பெறு கின்றன. இச்சுவடிகள் 120 முதல் 152 வரை தஞ்சை அரண்மனையைச்சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி மாடிக் மூலமாகவும், 154 முதல் 282 வரை தஞ்சை அரண்மனை வைத்யர் ஸ்ரீ காதர் பாக்ஷா சாயபுவினிடமிருந்தும் வாங்கப்பட்டவைகளாகும்.

பொதுவாக, நம் நாட்டில் ஸம்ஸ்கிருத சுவடிகள் பல காப்பாற்றப்பட்டதைப்போல், தமிழ் சுவடிகளை ஓரிடத்தில் காப்பாற்ற இயலவில்லை. தற்போதும், பற் பல வைத்யர்களிடத்திலும், ஏனையோர்களிடத்திலும் தானும் பிரயோசனத்தை யடையாமலும், பிறர்க்குக் கொடுக்காமலும் இருந்து பல தமிழ்நூல்கள் நசித்து வருகின்றன. பொதுவான ஸ்தாபனங்களிலும் அவைக ளெல்லாவற்றையும் சேகரம்செய்ய இயலவில்லை. அவை

கள் அவ்விடம் வராததற்குப் பொருளாதாரக் குறைவு, பரந்த மனப்பான்மையின்மை, சுயநலம் முதலானவை சில காரணங்களாகும். இதனாலேயே நமது அறிவுச் செல்வமும் அழிவடைய ஏதுவாகின்றது. ஒருவரிடத்தில் முன்னோர் காலத்திய பல நூல்கள் இருப்பினும், ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, கிரந்தம் முதலான லிபியிலுள்ள நூல்களைக் கொடுக்க முன்வருவார்கள். ஆனால் தமிழ் சுவடிகளைத் தருவதற்கு உடனே மனம் வருவதில்லை. ஆகவே, தமிழ் சுவடிகள் அவர்களிடமே இன்றளவும் இருந்து, சிதிலமாகி வருகின்றன. இதனைக் கண்ணுறும் அன்பர்களிடத்தில் ஏதேனும் சுவடிகள் இருந்தால் அவற்றை ஸரஸ்வதி மஹால்போன்ற பொது ஸ்தாபனங்களிடம் தானாகவே மனமுவந்து அளித்தால் அந்த நூல்கள் தக்க பாதுகாப்பைப்பெறும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவ்வாறு, நம்முடைய கல்விச் செல்வமும் விருத்தியடையும். பொது ஸ்தாபனத்தாரும் ஓரளவு பொருள்கொடுத்து வாங்குவதன் மூலம் ஜனங்களுக்கு ஊக்கம்கொடுத்து அவற்றைச் சேர்க்க இயலும்.

இப்பிரசுரத்தில் முதலில் கொடுக்கப்பட்டிருக்கும் நெம்பர், வைத்ய நூல்களின் தொடர் எண்ணிக்கையாகும். அடுத்து காணப்படுவது சுவடியின் நெம்பராகும். ஒரு சுவடியில் 4 அல்லது 5 நூல்கள் இருந்தால் அவைகளைக் குறிக்க A, B, C என்ற தொடர் எண்கள் கொடுத்து பிறைக்குறிகள் இடப்பட்டுள்ளன. சுவடியின்

ஆரம்பத்தில், அச்சுவடியிலுள்ள முக்ய விஷயங்களைத் தலையங்கமாகக் கொடுக்கப்பட்டிருப்பது, அவற்றின் பயனை அதிகரிக்கும். இம்மாதிரியே மற்ற வைத்யச் சுவடிகளின் தொகுப்பும் விரைவில் வெளிவரும்.

இதனைப் பதிப்பித்து வெளியிட அனுமதியளித்த தஞ்சை ஸரஸ்வதி மஹால் கௌரவக் காரியதரிசி ஸ்ரீமான் *O. A* நாராயணஸ்வாமி அவர்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் நன்றி உரித்தாகும். குறுகிய காலத்திற்குள் இதனை வெளியிட நேரிட்டதால் 66 சுவடிகளே தொகுக்க இயன்றது.

"கலைப் பொருட்டால் வாங்காது உலகெனின்
விலைப் பொருட்டால் நூல் பதிப்பார் இல்"

தஞ்சை,
15-3-'65

**Dr. வெங்கட்டராஜன்,**
L. I. M. (Regd.)

# பொருளடக்க அகராதி.

★ ★ ★


| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 1. | அகஸ்தியர் பாடல் பன்னிரண்டு | 120 (a) | 1 |
| 2. | ,, வகாரம் இருநூறு | 120 (b) | 2 |
| 3. | ,, கலைஞான சூத்திரம் | 120 (f) | 7 |
| 4. | ,, காவ்யச் சுருக்கம் | 120 (c) | 4 |
| 5. | ,, சூத்திரம் பத்து | 120 (h) | 18 |
| 6 | ,, சூத்திரம் பதிநான்கு | 121 (i) | 19 |
| 7. | ,, சூத்திரம் 32 | 129 (b) | 44 |
| 8. | ,, குழம்பு முதலியன | 159 (b) | 93 |
| 9. | ,, குருநாடி | 175 | 128 |
| 10. | ,, குருமுப்பு 50 | 185 (a) | 150 |
| 11. | ,, சுவாமி தீட்சாவிதி | 160 | 97 |
| 12. | ,, திரட்டு (வாதத்திற்கு) | 170 (d) | 121 |
| 13. | ,, திருநடனம் 48 | 186 (h) | 164 |
| 14. | ,, பச்சை பதினாறு | 185 (b) | 152 |
| 15. | ,, பற்பமுறை 205 | 124 (d) | 30 |
| 16. | ,, புஷ்பமாலிகை 50 | 126 (a) | 38 |
| 17. | ,, பூரண ஸூத்ரம் 12 | 186 (d) | 160 |
| 18. | அகஸ்திய மகரிஷி அருளிச்செய்த காவ்யம் 1000க்குச் சூத்திரம் பதினாறு | 138 | 55 |
| 19. | அகஸ்தியர் மகாநாராயண பூரண ஸூத்ரம் பதினாறு | 138 (b) | 56 |
| 20. | அகஸ்தியர் மூலிகை வர்மம் | 179 | 134 |

| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 21. | அகஸ்தியர் வகாரம் முப்பது | 121 (g) | 17 |
| 22. | ,, சுவாமி வைத்யம் ஐம்பது (சில காண்டம்) | 121 (f) | 15 |
| 23. | அகஸ்தியர் வல்லாதி பதினெட்டு | 162 (d) | 104 |
| 24. | அசுவகந்தி சூரணம் | — | 29 |
| 25. | அய்யநாயனர் மதி வெண்பா | 135 | 52 |
| 26. | அழுகணிச்சித்தர் பாடல் | 149 | 72 |
| 27. | அறுசுவை ரஸவர்க்கம் | 176 | 129 |
| 28. | ஆணிக் கோர்வைக்குச் சூத்திரம் மூன்று | 169 (a) | 115 |
| 29. | ஆணிக் கோர்வை அகவல் | 169 (b) | 117 |
| 30 | இலக்கின பாவபலன் | 155 (c) | 84 |
| 31. | இரத்தினச் சுருக்கம் 360 | 163 (a) | 106 |
| 32. | உத்திர கீதை | 144 | 66 |
| 33. | ஊர்வசி ரத்னச் சுருக்கம் | 148 | 71 |
| 34. | ஒட்டிய நூல் | 155 | 82 |
| 35. | கவுபாலர் ஆணிக் கோர்வை 51 | 169 (c) | 118 |
| 36. | கருவூரார் வாதகற்ப அஞ்சனம் 32 | 230 (a) | 47 |
| 37. | கஸ்தூரியின் குணம் | — | 122 |
| 38. | கழற்சி எண்ணெய் | — | 168 |
| 39. | காவ்யத்திற்குச் சுருக்கம் 16 | 186 (a) | 155 |
| 40. | காலாகாலமறிந்து மருந்துகொடுக்க | | 89 |
| 41. | குணவாகடம் (மேகம் 20-க்கு) | 127 | 40 |
| 42. | குணவாகடம் | 172 | 123 |
| 43. | குணவாகடத்திரட்டு | 171 | 122 |
| 44. | குதிரை வாகடம் | 152 | 77 |
| 45. | குழந்தை மாத்திரை | — | 146 |

| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 46. | கெர்ப்பகோளம் 16 | 131 | 48 |
| 47. | கொங்கணர் ஞானபிண்ட உற்பத்தி | 120 (e) | 6 |
| 48. | கொங்கணர் நாயனர் பிற்காண்டம் | 183 | 140 |
| 49. | கொங்கணர் வைத்யம் 45 | 183 (b) | 142 |
| 50. | கெளரீ பஞ்சாங்கம் | 124 (a) | 25 |
| 51. | சங்கராச்சாரியார் நாதாந்த விளக்கம் | 186 (i) | 165 |
| 52 | சங்கராச்சாரியார் நாதாந்த சாரம் | 186 (j) | 166 |
| 53. | சட்டை முனிவர் ஞானம் 100 | 187 | 168 |
| 54 | சட்ரஸ நிகண்டு | 182 | 139 |
| 55. | சதுரக்கோணமாலை | 142 (h) | 62 |
| 56. | சர நூல் சாஸ்திரம் | 134 | 50 |
| 57 | சல்லியநூல் | 155 (a) | 81 |
| 58 | சீதள சஞ்சீவித் தைலம் முதலியன 21 மேகத்திற்கும் | 121 (c) | 11 |
| 59. | சுருக்கம் 12 | 186 (c) | 161 |
| 60. | சுரகிதானம் | — | 89 |
| 61. | சுவாசகாசத்திற்கு நசியமிட | — | 90 |
| 62. | சூதக வாயுவிற்கு அரத்தைச் சூரணம் | — | 95 |
| 63. | சூதக வாயுவிற்கு லேகியம் | — | 92 |
| 64. | சொக்குப் பொடி | — | 43 |
| 65. | சொர்ணலோகச் செந்தூரம் | — | 91 |
| 66. | ஞானத்தாழிசை | 142 (d) | 64 |

| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 67. | ஞான வெட்டியான் கதை | 150 (c) | 75 |
| 68. | தத்துவ விளக்கம் | 142 | 61 |
| 69. | தந்தக்குறி யறிதல் | | 155 |
| 70. | தன்வந்தரி சிந்தாமணி | 186 | 154 |
| 71. | தாது லெட்சணம் | — | 41 |
| 72 | திரட்டு வாகடம் (ரஸ ஔஷதங்கள்) | 167 | 113 |
| 73. | திரட்டு வாகடம் | 186 (g) | 163 |
| 74. | திரவங்களின் பேதங்களும் குணமும் | 156 (a) | 86 |
| 75. | திருமந்திரம் | 161 | 98 |
| 76. | திருமந்திரம் | 168 | 115 |
| 77. | திருமந்திரம் | 170 (c) | 121 |
| 78. | திருமூலர் வர்க்கம் கடப்பிள்ளை ஏகாட்சரம் சூரணம் 37 | 141 | 60 |
| 79. | திருமூலர் தீட்சை பத்து | 183 (c) | 144 |
| 80. | திருமூலர் சுவாமி சூத்திரம் | — | 145 |
| 81. | திருலோக மண்டூரச் செந்தூரம் | — | 22 |
| 82. | தெட்சிணாமூர்த்திக் கருமானச் சுருக்கம் நாற்பத்தெட்டு | 121 (e) | 14 |
| 83. | நடுக்கல் ஜ்வரத்திற்கு அரிதாரச் செந்தூரம் | — | 114 |
| 84. | நந்தீசர் பரிவாசி | 136 | 52 |
| 85. | நந்திக்கும்மி | 140 | 59 |
| 86. | நயன சாஸ்திரம் | 173 | 124 |
| 87. | நாடி சாஸ்திரம் (வால்மீகர்) | 124 (b) | 26 |
| 88. | நாதப்பத்து | 142 (c) | 63 |

| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 89. | நாலாயிரத்து நானூற்று நாற்பத் தெட்டு வியாதி பிரிவு | 162 (b) | 102 |
| 90. | பஞ்சாதி மாத்திரை | — | 125 |
| 91. | பதார்த்த குணம் | 181 | 138 |
| 92. | பதார்த்தகுணம் | 186 (b) | 156 |
| 93. | பலதிரட்டு | 125 | 31 |
| 94. | பலதிரட்டு | 125 (d) | 37 |
| 95. | பலதிரட்டு | 133 | 50 |
| 96. | பலதிரட்டு | 146 | 69 |
| 97. | பலதிரட்டு | 159 (c) | 95 |
| 98. | பலதிரட்டு | 162 (c) | 103 |
| 99. | பலதிரட்டு வைத்தியம் | 186 (k) | 167 |
| 100. | பலவகை | 162 (e) | 105 |
| 101. | பரிபாஷை ஐம்பது | 147 | 70 |
| 102. | பித்தரோகப் பெயர் வெண்பா | 170 (b) | 120 |
| 103. | பிரும்மமுனி ஸூத்ரம் 360 | 162 (a) | 100 |
| 104. | புண்ணாக்குச் சித்தர் பாடல் (ஐயநீர்) | 137 | 53 |
| 105. | பூரணச் சாத்திரம் | 186 (a) | 158 |
| 106. | போகர் சுவாமி சுருக்கம் 8 | 129 (a) | 43 |
| 107. | போக நாதர் சூத்திரம் | 186 (f) | 162 |
| 108. | மச்சமுனி வாத சூத்திரச் சுருக்கம் 15 | 121 (d) | 13 |
| 109. | மச்சமுனி ஞானம் இருபத்தைந்து | 120 (d) | 5 |
| 110. | மலைவாகடம் (கோரக்கர்) | 125 (a) | 32 |
| 111. | மருந்து சாப்பிட நாளறிதல் | — | 106 |
| 112. | மஞ்சட்காமாலைக் குடிநீர் | — | 123 |

| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 113. | மனோன்மணி | 150 (a) | 73 |
| 114. | மூலிகை பல மருந்தின் குணங்கள் | — | 135 |
| 115 | மேகசஞ்சீவி எண்ணெய் | 121 (a) | 9 |
| 116. | மேகசஞ்சீவி எண்ணெய்க்கு அட்டவணை | 121 (b) | 10 |
| 117. | மேகமிருவதற்கும் குணவாகடம் | 127 | 211 |
| 118. | யூகிமுனி வைத்திய சிந்தாமணி | 164 | 108 |
| 119. | ரஸச் செந்தூரம் | — | 132 |
| 120. | ரஸௌஷத மருந்துகள் | 177 | 131 |
| 121. | ராமதேவர் பலதிரட்டு வைத்யம் 80 | 125 (b) | 34 |
| 122. | ராமதேவர் அட்டாங்க யோக பட்சணி | 125 (c) | 36 |
| 123. | ரெத்தமேகம் தந்த மேகத்திற்கு | — | 92 |
| 124. | ரோமரிஷி பதினாறு | 145 | 68 |
| 125. | வலிப்புக்கு | — | 146 |
| 126. | வாகடத்திரட்டு | 180 | 136 |
| 127. | வாகடத்திரட்டு | 151 | 76 |
| 128. | வாதம் முப்பத்தொன்று | 143 | 65 |
| 129. | வாதம் எண்பதற்கும் எண்ணெய் | 154 | 79 |
| 130. | வாதம் எண்பதற்கும் வெண்பா | 170 (a) | 119 |
| 131. | வாத ராக்ஷஸ மாத்திரை | — | 137 |
| 132. | வால்மீகர் உறுப்புச் சூத்திரம் | 178 | 133 |
| 133. | வைத்ய அட்டவணை | 158 | 90 |
| 134. | ,, | 159 (a) | 91 |
| 135. | ,, | 174 | 126 |

| தொடர் எண். | சுவடியின் விபரம். | சுவடி நெ. | பக்கம். |
|---|---|---|---|
| 136. | வைத்ய அட்டவணை | 124 (c) | 27 |
| 137. | ,, | 123 (a) | 23 |
| 138. | ,, | 128 | 42 |
| 139. | ,, | 132 | 49 |
| 140. | வைத்ய சிந்தாமணி | 157 | 88 |
| 141. | வைத்யத் திரட்டு | 139 | 57 |
| 142. | ,, | 122 | 21 |
| 143. | ,, | 184 | 148 |
| 144. | லோகச் செந்தூரம் | — | 114 |
| 145. | லிங்கக்கட்டு செம்பு | — | 151 |

தஞ்சை ஸரஸ்வதி மஹால்

# தமிழ்ச் சுவடிகளின்

## 4-வது தொகுப்பு.

( வைத்தியப் பகுதி. )

## 184. *No* 120. வைத்தியத்திரட்டு

ஏடுகள் 112; 7 lines in a page.

இந்தச் சுவடியில் ஏடுகள் முன் பின்னாக இருக்கின்றன. கீழ்கண்ட நூல்கள் அடங்கியிருக்கின்றன கடைசி 3 ஏடுகள் முறிந்திருக்கின்றன.

## (*a*) அகஸ்தியர் பாடல் 12.

ரஸவாத முறைகளடங்கியது.

Beginning:

தாயான உன்மனையாள் பாதம் போற்றி
சாஸ்திரமோ ஆயிரத்தி யிருநூற்றுக்குள்
தோயாத கருவேரண்டு மில்லை சொல்லு
லடக்கமா யுரைத்தேனே வழலையொண்டு

காயாகு மதைக்குறுக்கி யிறுநூறு சொன்னேன்
கனிபோலே யின்னலுப் பனிரெண்டுக்குள்
வாயாகச் சொல்லுகிறேன் வகாரமாற்க
மதியிரவி யண்டபிண்டம் வளமை கேளே (க)

End :

தானென்ற அண்டபிண்ட மங்குறவைச் செய்யத்
தவம் வேணுஞ் சிவம் வேணுந் தயவு வேணுந்
வானென்ற ஆதியா முப்பைக்காண
மதிவேணு விதிவேணு வாசம்வேணும்
நானென்ற ஆணவத்தை யகலவேணும்
நலமான சிவயோகம் நாடவேணும்
தேனென்ற சரக்குருவைக் காக்கவேணு
சித்தியாம் பனிரெண்டுஞ் சிறக்க முத்தே (12)

## 185. (b) அகஸ்தியர் வகாரம் இருநூறு

இதில் பிண்டச்சுன்னம், சுன்னத்திராவகம், குரு பற்பம், நீர் உப்பு அஞ்சனம், காரசாரம், உபரஸம் சாரணை, அஞ்சனக் குளிகை, சூடன் மணி, தாமிர வேதை, சவுக்காரம், துருசுச் சுன்னம், வெள்ளி முறை, கருநெல்லி கல்பம், சதுரகிரியில் சோதி விருக்ஷம், தேசி நீர் வழலை கொங்கு கல்பம், சவுக்காரம் எண்ணெய் வாங்க, திரிகூடமலை, ரோமவேங்கை, கெந்தக தைல வாலை, வெடியுப்பு நீர், திருகுகள்ளி, அன்னபேதி இவை களின் உப்பு, முதலானவைகள் காணப்படுகின்றன. பசியில்லாதிருக்க முறைகளும் உள்ளன.

Beginning :

ஆதியா மனக்கோலஞ் செய்யுநாளி
லாதிமூல தேவரிஷி கூட்டமாச்சு
வேதியனு மாயோனுந் தானுநின்று
விமலனார் விசுவனுக்கு வார்த்தையீந்தார்
நீதிபெறச் சாருதியில் தெக்ஷிணாய
நிலையான சாற்பொதிகைக் கிரியில்சென்றேன்
ஆதியொரு காரணத்தால் பரைதானீன்ற
அடகந்தா னம்பலமா மருளைப்பாரே. (1)

End :

பாட்டெல்லாம் பார்த்தாலே வாதந்தோயும்
பாராட்டா லொன்றுமில்லை ஞானமில்லை
ஆட்டெலாங் கருவெல்லாந் தெரிந்துபோகும்
அப்பனே சாத்திரத்தைப் பாரு பாரு
நாடெல்லாம் பொன்னே யாகும்
நாட்டாதே வழலையுட கருவையப்பா
தேடலாம் உப்புவே கல்லானைக்குச்
சேரலா மிரவியுட னிருந்துதானே (201)

இருந்தாலே இரவிதனைக் கட்டவேணும்
எடுத்தவொரு அண்டத்தி லேறவேணும்
வந்தாலே கருரெண்டு மறியவேணு
மகத்தான குக்குடத்தை யறியவேணும்
சந்திரனல் ரவியொன்றாய் முடிக்கவேணும்
சார்சாத்த நீர்தனையே காணவேணும்
கொத்தான பூரணமே சாரமாகும்
கூட்டுகின்ற ரவிகோடா கோடிமுத்தே. (205)

குரு செயம்.

## 186. (c) அகஸ்தீசர் காவ்யச் சுருக்கம்

ராசயோகம் பதினாறு.

இதில் ரேசகம், பூரகம், கும்பகம் முதலான ச்வாஸ பந்தன முறைகள் புலஸ்தியருக்கு உபதேசம் செய்யப் பட்ட வகையில் எழுதப்பட்டுள்ளது.

Beginning:

ஆதிமறை சாஸ்திரங்கள் பிறந்தவாறும்
அடிமுடியும் நடுவாகிப் பொருளுமாகி
வேதியனு மால்சிவனு மென்றவாறு
வேதமுத லாகமங்கள் பிறந்தவாறும்
சாதிபல தொழில்முறைக ளானவாறும்
தன்னுள்ளே அஷ்டாங்கஞ் செய்யும்வாறு
ஓதியமா லவரவர்கள் செய்தவாறு
ஓங்கார மூலகண பதியே காப்பு (1)

End:

காணப்பா காவியத்துக் காகவிந்த
கருப்பொருளை பதினாறில் கருதிச்சொன்னேன்
வீணப்பா யென்று சொல்லி யிந்தநூலை
வெளியிலே விட்டாக்காயியென் மேலாணை
ஆணையப்பா முக்காலு மாணையாணை
அருந்துணர்ந்த ஞானிகளை யடுத்துச்சேரு
பானமப்பா உன்றிரிந்தார் பதத்தைப் போற்றி
பதினாறு சிவசூத்திரப் பொருள்தான்முத்தே (10)

ஸ்ரீ ராமஜெயம்.

# 187. (*d*) மச்சமுனி ஞானம் இருபத்தைந்து

ஏடுகள் 3; 5 lines in a page.

இதில் ஷடாதாரங்கள், மயில் பச்சைக் குரு, பிராணாயாம நிலை முதலியவைகள் கூறப்பட்டிருப்பினும் மச்சமுனி கடைக்காண்டம், கொங்கணவர் கடைக்காண்டம் முதலியவைகளைப் பார்க்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.

Beginning:

முக்திதரும் வேதாந்தக் கடலே போத்தி
முதலான பூரணனே தாயே போத்தி
அத்திமுக ஞறுமுகன் தன்னைப்பெற்ற
ஆனந்த ஆரமுதே ஆயிபோத்தி
யொத்தொ(ழி)லும் யெற்றிசையு மீன்ருய்போத்தி
யிறைவன்முதல் மூவருக்கு மரசேபோத்தி
பத்தியுள்ள மனந்தோரு மரைந்தாய் போத்தி
பராபரிஉன் பாதமலர்க் காப்பதாமே (1)

End:

வீரமுள்ள பேருடனே சேர்ந்திடாதே
வேதாந்த மவருடனே கூறிடாதே
பாரமுள்ள மனதறிந்து குறிப்புக்கண்டு
பாங்கான சக்கிரமுங் கிரமமுங் கண்டு
ஆரமென்ற பிராணயவருளைச் சொல்லி
அஷ்டாங்கத் தொழில் முறையும் குறிப்பும் [சொல்லி
சாரமுள்ள பேரணியுங் கருணைகாட்டி
சாயுச்சிய மோக்ஷசாருதி முற்றே. (5)

சிவாய நம.

# 188. (உ) கொங்கணர் ஞான பிண்ட உற்பத்தி 24.

ஏடுகள் 4½ ; 6 lines in a page.

கொங்கணர் சுந்தரானந்தருக்கு தேக உற்பத்தியை உபதேசம் செய்வதைப்போலக் காணப்படுகிறது. கடைசி 6 செய்யுட்களுக்கும் 'கொங்கணர் சுவாமி சூட்ச தரிசனம்" என்ற பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Beginning :

ஒன்ருன கயிலாசம் பரம்பரையாய் வந்த
உத்தசிவ மூலக்குரு பதத்தைப் போற்றி
நன்ருன காலாங்கி ரெழுவர் பாதம்போத்தி
நலம்பெரிய போகருட பதத்தைப்போத்திக்
கன்ருன சடஞ்சனித்த வுற்பனத்தைச் சொல்வோம்
கருதிக்கொள் கருத்தில்கேள் காமனீந்த
பன்ருன பிருதிவிந்த நாதத்துள்ளே
பரிவான சுக்கிலமாஞ் சலந்தான் கேளே (1)

* * * * *

கேளப்பா புருவமைய்யம் மதியின்வீடுக்
கெடியான விந்துவிட மூலம்மூலம்
ஆளப்பா சிரசிலே நாதங் காந்தி
அவ்வளவு மனத்தினுட ஆறுதலமாச்சு
நீளப்பா அதின்மேலே அறிவின் மூலம்
நேராக வெளியொன்று ஒளிதானென்று
சூளப்பா காந்தியொன்று ரவிதானென்று
சொல்லடங்கா நாதமொன்று சொற்ப
மொன்றே (17)

நிலைத்துநில்லு சுழுனையைக் கட்டினன்றாய்
நேராகத் துவாரத்தில் வளிச்சென்றாற்போல்
மிலைக்குறடா வேருசுற்றி தங்கம்போற்கம்பி
யெழும்புமப்பா வளிச்சென்றே பிரகாசிக்குந்
துலைக்குளியால் நிலைக்கவந்து அமிர்தமுண்ணுஞ்
சோதியாம் பராபரத்தின் செயலெனை
றலைத்துவிட்டு ஆதியந்த மல்லாதிடத்தே
அமர்ந்துபேர் கட்டிநின்ற புடந்தான்காணே (6)

குருவே துணை.

Colophon:

கரவருஷம் பங்குனி மாதம் 16உ செவ்வாய்க்கிழமை தினம் துரைசாமியன் புஸ்தகம் வெங்கிட்டராமிய்யன் யெழுதி முடிந்தது.

---

## 195. (l) அகஸ்தியர் கலைஞான ஸூத்திரம் இருநூறு.

ஏடுகள் 31; 8 lines in page.

இதில் பூரண நவதுருவம், வங்கபற்பம், ரஸமணி, நீர்மேல் நெருப்புக் கல்பம், பஞ்சாக்ஷரம், மாறல் சக்கிரம் விந்துத் தம்பனம், அஞ்சனம் முதலானவைகள் கூறப் பட்டிருக்கின்றன. கடைசி 3 ஏடுகள் முறிந்துள்ளன.

Beginning:

எட்டெட்டா மாதியிலே கலைஞான் சூட்ச
மென்றேழு மிருநான்கில் நாலுமொன்றாய்

விட்டகுறை யுலகமதி லறியாமல் கமல
வெளிதோணக் குருநூலில் மூலஞ்சொல்ல
அட்டபுறி யட்டமதில் அரைகளாறு
மைங்கரனே முன்னின்றவ னடியைப்போத்தித்
திட்டமுடன் சூத்திரமா யுரைக்கஆதி
தேவிபரி பூரணியே முதலாங்காப்பே. (1)

★ ★ ★ ★ ★

உருமைவைத்து யிந்நூலில் கருவேயெல்லாம்
ஒளியாமல் வெளித்தோணச் சொல்லிவிட்டேன்
உருமைவைத்து அறிவுமுத லில்லார்க்கெல்லாம்
ஒளிவிளக்காம் பறித்தகட்டின் செயலைச்சொன்
னேன்
உருமைவைத்துப் பெண்ணோடே சையோகத்தி
லுத்திசிவ யோகத்தி மதின்கருவைச் சொன்னேன்
ஒருமைவைத்துப் பலநூலைப் பார்த்தாலுந்தான்
உனக்குமிந்த நூலைப்போல் கிட்டாதென்றே
(168)

ஆமப்பா நந்திகுரு வாசனன்றாள்
அருளினார் திருமூலர் தனக்குநேராய்
ஓமம்பா அவருமிதைப் போகருக்குச் சொன்னார்
உடனிருந்துப் போகருமே கருவூரார்க்குச்
நாமப்பா நாலுபேரறிந்த மூலம் [சொன்னார்
ரகசியமாய்ச் சொன்னகருப் போகாதந்தைக்
காமப்பா ஊட்டிக்கடுங் கானலான
கருவிக் கருவைச் சொன்னார் காணே. (182)

## 196. *No.* 121. வைத்திய நூல் திரட்டு.

## (*a*) மேகசஞ்சீவி எண்ணெய்.

ஏடுகள் 6; 4 lines in a page.

இதில் மேகசஞ்சீவி எண்ணெய் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. மிகவும் கைகண்ட முறையாகத் தோன்றுகிறது.

ஓம் நமோஸ்து கணபதி துணை.

Beginnig:

வெள்ளி மாமலர் வீற்றிருந் தாளுவோன்
கள்ள மாயைக் கயற்றில்சிக் காதவன்
உள்ளே மேவி யுகந்தழுகின்ற தோர்
வெள்ளை யானை முகப்பதம் போற்றுவோம்.

வாக்கி லுன்னையே வைத்தனன் முன்னையே
நோக்கி யென்னையே னுன்னருள் சொன்னையே
சாக்கியுன் னையே தாங்குமெ னன்னையே
பாக்கிற நின்னையே பாக்கியமே பாக்கியமே (2)

Beginning:

### மேகசஞ்சீவி எண்ணெய்.

ஆதி விநாயகன் துணை.

அருகு திருநெல்லி யாதண்டை நால்வேம்புத்
திருகு கள்ளிசதிர் கள்ளிதிரு நெருஞ்சி
வெட்டி விளாமிச்சம் வெள்வேளை விச்வாச்சி
குட்டிவி ளாவிளாக் கோவை. (1)

நன்னாரி பூந்தி நாகமிரு வேளையர்
பொன்னாங்கனி வரப்பூலாப் பூலானு மின்னுவே
ஈரிலவுத்தாழை யிருகொத்தா னுயிரஞ்சி
யோரிலைத்தா மரைபசளை யொதி (2)

* * * * *

இடித்தவகை நிறைசெய் தெண்ணெய்விடு ஒட்டிரெட்டி
பிடித்துக் கணபதிதாள் பூசனைசெய்யடு தடுத்து
வைப்பாய்க் கதிர்புடமாய் மண்டலமே யூறியபின்
அப்பா சஞ்சீவி யிதென்றே யறி. (23)

அறிவா யிருவத்தோ ராகிய மேகமதிற்
பிறியா துழனு மூலும் பெருநோய்கள்—குருவாகும்
சுத்தனே சேனுவிலை சொல்லத் துகையாமோ
அத்தனைக் கத்தனைச் செம் பொன்னும் (24)

## 197. (b) மேகசஞ்சீவி எண்ணெய்க்கு அட்டவணை.

ஏடுகள் 8 ; 4 lines in a page.

இதில் மேகசஞ்சீவி எண்ணெய் செய்முறையை வசனமாகக் கூறப்பட்டுள்ளது.

Beginnig :

அருகுவேர் ஆதண்டைவேர் வேம்புவேர்
அருநெல்லிவேர் மலைவேம்புவேர் ஆனைநெருஞ்சிவேர்
கீழாநெல்லிவேர் நிலவேம்புவேர் திருகுக்கள்ளிவேர்
நெல்லிவேர் சிவனார்வேம்புவேர் கொடிக்கள்ளிவேர்

* * * * *

ஆக வெண்பா 21-க்கு. மூலிகை வகை 311. எண்ணெய் 312. இந்த மேகசஞ்சீவி வேர் வகையிற் வகைக்கு 1 பலம், கடைச்சரக்கு வகைக்கு ½ பலம் இவை ரெண்டையுங் கூட்டி நான் நினைத்தகாரியம் சித்திக்கும்படி மகாகணபதியைத் தியானம் பண்ணிக் கொண்டு இவ்வகையை இடித்து, நிறைகண்டு, ஒட்டி ரெட்டியாக ஆமணக்கெண்ணெய் விட்டுப் பிள்ளையார் பிடித்துவைத்துப் பூஜை, செய்து ஒரு மண்டலம் சூரிய புடம் வைத்துச் சாப்பிட இருபத்தோரு மேகத்தின் விளைவாகிய சகல நோய்களுக்கும் குருவாகிய மேக சஞ்சீவி யெண்ணெய் என்றவாறு.

End :

இந்த மேகசஞ்சீவி யெண்ணெய் நிறைக்கு நிறை பசும்பொன்னென்றவாறு.

முற்றும்.

Colophon :

வேதவியாஸ வாகடமுறை கனகசபைப் பிள்ளை எழுதி முகிந்தது. முற்றும்

மகாகணபதி துணை.

## 198. (e) இருவத்தோரு மேகத்திற்கும் சீதளசஞ்சீவித் தைலம் முதலியன.

ஏடுகள் 37 ; 4 lines in a page.

இதில் வெண்ணொச்சிக் கல்பம், கருநொச்சி கல்பம், சிவனார்வேம்பு கல்பம், ரஸவாதம், வெள்ளி செய்தல்,

(28-வது ஏடு இல்லை), செம்பு வெளுக்க முறை இரும்பு, செர்பாக முறை, கெந்தக சுத்தி, மூலவாயுவுக்குப் பிரண்டை கிஷாயம், காமாலைக்கு மருந்துகள், வெட்டைக்கு மருந்துகள் முதலானவைகள் காணப்படுகின்றன. இடையிடையே ஏடுகள் பல காணப்படவில்லை. அச்சிடப்படவில்லை.

Beginning;

பொன்னாங்கண்ணி யோரிலைத்தாமரை
வெண்பூளை ச்சிறுக்கீரை நெருஞ்சிவன்னிய
மின்னாற் துருஞ்சி பழம்பாசி யெலிமிச்சம்
பருத்தி வறட்சுண் டிலவும்
நன்னாரி துத்திமுசுக்கை மிளகீர்
நற்சீரகம் பொன்முசுட்டை
இன்னாவரை யீர்வகை யோர்பலம்பால்
இழைத்தெண் ணெயிற்விட் டெரிசெய்திறக்கே (1)

* * * * *

## வெட்டைக்கு

கள்ளிக்கொழுந்து 1 பலம்
கருமிளகு ஒன்பது கால்பலம் அதாவது $2\frac{1}{4}$ பலம்
ஒருதலை உள்ளி

இவைகளையரைத்து உருண்டை செய்து, ஒரு உருண்டையை நாலுஉருண்டை செய்து, 3 உருண்டையை வைத்துக் கொண்டு ஒரு உருண்டையை பின்னாலெரிந்து போட்டு, சூரியனை மனதில் தியானித்துக் கொண்டு முதல் உருண்டையைத் தின்ன உடனே ஒரு விடயம் தின்னெறக்கவும். இரண்டாமுருண்டை தின்ன

உடனே ஒரு விடயம் தின்னெறக்கவும். மூன்ருமுருண்டை தின்ற உடனே ஒரு விடயம் தின்னெறக்கவம். மூன்று விசையானவுடன், ஒரு படி மோர்குடிக்கவும் வயிறு பேதிக்குந் தீருமென்றவாறு ஏடு 44.

End :

ஓம் நமஸ்து நமோ நாராயணு கனகசபை
ஓம் குரு நமச்சிவாய நமோ வெண்பா
ஓம் சிவா நமசிவாய குரு வாகடம்

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்
சிறப்பிலுபதேசஞ் செப்பினேன்—அறப்பெரிய [தோன்
பஞ்சத்திலன்னம் பகுந்தோன் பயன்றீத்தோ
னஞ்சும் பிதா வென்றறி.

துற்சனரும் பொன்னுக் துடியுந் தரகதமு
மச்சமர் வாழ்கின்ற ஆநிறைவு—மிச்சையுடன்
கண்டித்த வெள்ளுங் கரும்பு மிளநீறுங்
தெண் டித்தாற் குண்டு.

---

## 189. (*f*) மச்சமுனியார் வாத சூத்திரச் சுருக்கம் பதினைந்து

ஏடுகள் 2 ; 7 lines in a page.

Beginning :

ஆதிவே தாந்தமனேன் மணியே காப்பு
அறிதான முப்பாழின் வெளியே காப்பு

சோதியிலே முளைத் தெழுந்த சுடரே காப்பு
வாதமென்று பேர்படைத்த பொருளுக் கெல்லாம்
வகையாகச் சுருக்கமது பதினைந்துக்குள்
நீதியுடன் சொல்லுகிறேன் நெறியுள்ளோற்கு
நிலையாக நாதவித்தை கருதிப் பூணே. (க)

End :

ஒன்ருக மனந்தன்னை நிறுத்த வேணும்
ஒருமனதா யிருபதத்தைக் காக்க வேணும்
பன்ருகப் பிரணயாமம் செய்ய வேணும்
பராபரமாம் தெரிசனை (?) யைப் பார்க்கவே [ணும்
முத்தாக மச்சமுனி பதினைந்துக்குள்
முறையோடே வாதத்தைச் சொல்லிப்போட் [டேன்
முத்தான கருவறிந்தா லவந்தான் வாதி
முறை கெட்டால் மடையரவர் வீணந்தானே.
(12)

## 190. (g) தெட்சிணமூர்த்திக் கருமானச் சுருக்கம் நாற்பத்தெட்டு.

ஏடுகள் 8 ; 7 lines in a page.

இதில் பிண்டம், அய்ங்கோலம், கருவெடுக்க நண்டு முதலானவைகளுடன், பொன் விளையும் விபரமும் காணப்படுகிறது.

Beginning :

வாதமென்ற நூல்களெல்லா மொடுங்கி யொன்றில்
மாட்டிடவே சிவன்மைந்தன் கணபதியின் காப்பு

நாதமென்ற உமையவளும் பரமசிவனுங் காப்பு
நாதாந்த மனோன்மணித்தாய் பாதங் காப்பு
வேதமென்ற பொருள்களெல்லா மொடுக்கமாகி
வேதாந்த சுரும்பாயி வடுகன் காப்பு
ஆதியந்த மாகிநின்ற வொடுக்க மெல்லா
அடிமுடி யிலொடுங்கினது தானுமாமே (1)

End :

கூட்டுகிற கருவறிந்து கூட்டவேணும்
கூட்டாட்டால் குலையுண்டு திரியவேணும்
மாட்டுகிற இனமருந்து மாட்டவேணும்
மடக்குவழி யறிந்தல்லோ மடக்கவேணும்
நாட்டுகிற வித்தெல்லாம் பாம்புநஞ்சு
நலமான கருவிதுதானன்றாய்ப் பாரு
பூட்டுகிற பூட்டெல்லா மிதுதானென்று
புகழ்ந்திட வுள்கருகூத் திரந்தான்முற்றே (48)

தட்சிணாமூர்த்திக் கருமானச் சுருக்கம் எழுதி முற்றும்.

துரைசாமிய்யன் புஸ்தகத்தைக் கர வருஷம் பங்குனி மாதம் 17உ புதன் கிழமை தின வெங்கிட்டராமய்யன் கையெழுத்து.

## 191. (h) அகஸ்த்தியச் சுவாமி வைத்தியம் ஐம்பது. நிலகண்டம்.

ஏடுகள் 13; 6 lines in a page.

இதில் வாதிக்கேற்ற வைத்திய முறைகளுள்ளன. புலஸ்தியருக்கு உபதேசம் செய்வது போல் கூறப்பட்டுள்ளது வழலை, நீலகண்ட செந்தூரம், அரையாப்புக்கு மருந்து, வெள்ளீய பற்பம் (காந்தல், பித்தம், மேகம் பவுத்திரத்திற்கு) மால்தேவிக்கட்டு, கிரந்தி சூலைக்கு நத்தைச் சூரி எண்ணெய், தேங்காய் நெய், கரிப்பான் கல்பம், பாஷாணக் களங்கம், வெள்ளீய பற்பம், மூதண்டக் கஷாயம், சவுக்கார வைப்பு முதலான முறைகள் காணப்படுகின்றன.

Beginning :

நாடியதோ ரகண்டபரி பூரணமாய் நின்ற
நாதன்முதல் கணேசனோடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனரும் மென்னைப் பெற்ற
ஆத்தாளும் நாவுதன்னில் குடிகொண்டேதான்
பாடியதோர் வைத்தியமன் பதுந்தான் சொல்வேன்
பண்பான புலஸ்தியனே யிந்நூலோடே
தேடியதோர் பூரணசூத் திரத்திற் நன்றாய்
தீட்சையொரு கருக்குருவும் திறமிதாமே (1)

End :

தானான சவுக்கார மிதுதானப்பா சாதகமாய்
கருவென நூல்தோரும் ஒளித்தார் சித்தர்
வீணான பயகளுக்கு சொன்னயானால்
விண்ணிலிடி வந்துதலைத் தெரிக்கும்பாரு
ஊனான நாய்போலே திரிந்தலைவர் சொன்னேன்
உண்மையாய் மனதில்வைத்துக் கைமுறையாய்
செய்து

தேனை சவுக்காரம் சுண்ணும்பாக்கி
செயமாக யெட்டெட்டு கருவான சவுக்கார மகிமைதன்னை
விண்டாக்கால் சித்திடுவாய் நூல்கூடாதே
வேதாந்த ஞானியென்றால் வியானபாரு
தொண்டு செய்வாய் பதினாறு வருஷங்காறு
சோதித்துப் பின்புஅவர்க் கீவாய்ப்பா
சண்டமாருதம் போல வெளியதாக
சாத்தியதோர் வைத்தியமாம் பத்துமுத்தே(50)

## 192. (i) அகஸ்தியர் வகாரம் முப்பது.

ஏடுகள் 6 ; 7 lines in a page.

இதில் குருமுடிக்குங் காலம், அண்டபிண்ட விபரம், சிவன் சக்தி விளக்கம், சமாதி யோகம், சாபம், நூல் விபரம், கல்லு,வழலையுப்புப்பெற மூன்றுப்புக்கும் நிறம், ஆதி, நடு, முடி இவைகளின் விபரம், பஞ்சபூத உப்பு முதலான விஷயங்கள் உள்ளன.

Beginning :

ஆதிபரா பரத்தினுட கிருபை கூர்ந்து
அடிமுடியா மணக்கோலம் நந்திகாப்பு
நீதியாம் வாரணத்தின் முகவன்காப்பு
நிர்மலசதா சிவத்தின் வடிவேகாப்பு

பாதிமதி சடையணிந்த சிவன்றாள் காப்பு
பத்திமுத்தி சித்தி வயிரவனே காப்பு
ஓதியதோர் வாணியுட பாதங்காப்பு
ஓங்கார மூலவட்டத் தொளி காப்பாமே (1)

End :

ஆமப்பா யின்னீத்தால் துருசுவெள்ளை
அவ்வெள்ளைச் சுன்னத்தால் ரஸத்தை நீத்து
ஓமப்பா பரித்தகட்டில் பூசிப்பாரு
உத்தமனே சொர்ணமது சுண்ணைப்பாச்சு
நாமப்பா சொல்லு கிறோம் தாமிரத்தில் கொடுக்க
நாட்டோர்க்குப் பிழைப்பதற்கு வழியுமுண் [டாம்
காமப்பா யதையெடுத்து வெள்ளிக்கீயக்
கனகமாங் கருமூன்று பத்துமுத்தே. (30)

## 193. (*j*) அகஸ்தியர் சூத்திரம் பத்து.

ஏடுகள் 2 ; 7 lines in a page.

இதில் அண்டக்கல் சுன்னம், காரசாரம், குரு,முப்பு முடிக்கும் விதம், சோடசசெய நீர் முதலானவைகள் காணப்படுகின்றன.

Beginning :

பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பரிவாகச் சிவம்வேணும் தியானம் வேணும்

நேரப்பா வாசியென்ற யோகம் வேணும்
நேராக லெட்சியத்தை நிறுத்தவேணும்
காரப்பா குருபாதத்தைக் காக்க வேணும்
கைக்கெட்டாத் தொழில் முறையை யறியவே
சாரப்பா சாஸ்திரமும் சூத்திரமும் ரெண்டுஞ் [ணும்
சார்வாகப் பார்த்திருந்து வாதம்பாரே. (1)

End :

போமடா கரியோட்டி ஊதும்போது
பொன்போலக் கண்விட்டு ஆடுமாடும்
நாமடா கல்லுப்பைக் கட்டியூத
நல்லதொரு வைரமணி போலேயாகும்
நாமடா அனுபவத்தால் வெளியில் போட்டேன்
நாட்டாதே கள்ளரென்ற மனிதருக்குத்
தாமடா யிதுவெல்லா மறிந்துகொண்டு
தாரணியில் விள்ளாதே யடக்கமுற்றே (10)

Colophon :

ஹரி ஓம் சுபமஸ்து, ஸோமஸுந்தரம் கையெழுத்து தக்ஷிணமூர்த்தி துணையுண்டு,

## 194. (*k*) அகஸ்தியர் சூத்திரம் பதினான்கு.

ஏடுகள் 3 ; 7 lines in a page.

இதில் திராவகம் இறக்கும் முறை, சுன்னம் முதலானவை கூறப்பட்டுள்ளன. அகஸ்தியர் திருமூல

ருக்கு உபதேசம் செய்வதைப் போலுள்ளது. பரிபா
ஷையாகவுள்ளது.

Beginning:

பொன்னான திராவகமாம் குருமுறைக்குப்
புகலவில்லை பதினெண்பேர் சித்தாதியெல்லாம்
பன்னான சூடனொடு யவச்சாரஞ் சீனம்
பாரதனிற் பொதிவகையில் பலந்தானென்று
தன்னான சாரமது பலந்தா னென்கு
சாதகமாய் யிணங்கவே பலந்தானெட்டு
மின்னான மந்திரமோ படிநாலுக்குள்
(விளங்கவே படி) நாலுக்குள் மருந்தெல்லாம்
பொடித்துப்போடே. (1)

End:

கட்டியதோர் வில்லைதனை ரவியிற்போடு
காய்ந்த பின்பு சுன்னத்தின் னெரிந்துவாங்கு
ஆட்டியென்ன புரியஷ்டம் பூரணத்திலேடு
ஆனந்தரசாய்ச் சுழிமுனையில் நந்திமுதல்
பட்டதனால் பலனதிலே சூத்திரம் பதினால்
பலிக்குமடா வாதமொடு வாசியோகம்
விட்டகுடை (ற) பூரணத்தைப் பாடப்போயருள்
வேதாந்த வாதத்தை வெளிவிட்டேன் முற்றே.
(14)

அகஸ்தியர் பாதந்துணை. தேவஸேனாபதி ஸஹா
யம். சோமசுந்திரம் கையெழுத்து. நந்தன வருஷம்
சித்திரை 17உ முகிந்தது. முற்றும்.

## 199. (*d*) வைத்தியத்திரட்டு.

(பற்பமுறைகளும், ரஸௌஷதங்களும்)

ஏடுகள் 41 ; 4 lines in a page,

இதில் முதலேடு காணப்படாமையால் நூல்இன்னது என்று கூற இயலவில்லை. செய்யுள் ரூபமாக வுள்ளது, தாமிரசுத்தி, பற்பம், தங்கபற்ப முறை, தங்கச்செந்தூரம், வெள்ளி பற்பம், வெள்ளிச் செந்தூரமுறைகள், வெங்கல பற்பம், சிந்தூரம், அயச் செந்தூரம், பித்தளை பற்பம், காரீய பற்ப சிந்தூர முறைகள், அரிதார பற்பம்,சூத பற்பம், பவழப் பற்பம், வஜ்ர பற்பம், மரகத பற்பம், மாணிக்கப் பற்பம், புஷ்பராகம் வைடூரியம் முதலானவைகள் முதல் 40 செய்யுட்களுள் கூறப்பட்டுள்ளன. பின்னர் ஆநிரஸச் செந்தூரம், பாலரசச் செந்தூரம்,ஆனந்தவைரவன்,அக்னிகுமாரன்,அப்பிரக செந்தூரம், மேகநாரயணச் செந்தூரம், பூபதி முறை சிந்தாமணி முறை, பூர்ணசந்திரோதய முறை, வாத ராக்ஷஸ முறை, சுய மக்கினி குமாரன் முதலான மருந்துகள் உள்ளன. மண்டூரச் செந்தூரம், திரிலோக மண்டூரச் செந்தூரம் முதலானவைகளும் காணப்படுகின்றன.

Beginning :

சாய்ப்பாயே வொவ்வொன்றி லுருக்கி முக்காத்
தானுருக்கிச் சாய்க்கவுள்ள நிறம் பேதி.......
காய்ப்பேறி வலுவேறி நவலோகங்கள்
கலங்கமத்து நிஜமான சுத்தியாகும்

வாய்ப்பாய்ச்செந் தூரமாம் பற்பமாகும்
வறுப்பதற்காங் களங்குகாரங் குரு.......
தீய்ப்பா யவுஷதங்கட் கெல்லாமாகும்
செய்திடுவாய் சுத்தி சுத்தி முறையிதா ......

End :

## திரிலோக மண்டூரச் செந்தூரம்.

பாருதிரிலோக மண்டூரஞ் சொல்வேன்
பழங்கிட்டங் காந்தமரப் பொடியிம் மூன்றும்
நேராக மூன்றுபலம் வகையொன்றுக்கும்
நிறையாகச் சுத்திசெய்து யெருக்கம்பாலில்
சீராக வோர்சாம மரைத்துருட்டித்
திறமாக வில்லைபிடித் தகலிலிட்டு
பேராக மேல்மூடிச் சீலைசெய்து
பெரியகுழி வெட்டியதற் புடத்தைப்போடே. (79)

போடெருக்கம் பால்கையாந் தகரைவீழி
பூளைசிறு கீரைபொன்னாங் காணியோடு
நீடியசென் னயுருவி யுசிலம்பட்டை
நீர்முள்ளி கத்தாழை யிவையோரொன்றில்
யீடாகப்புடம் பத்தா மிதுதப்பாம
லிப்படியே நூறுபுட மிணங்கப்போட்டு
தேடறிய வயிரவனைப் பூசைபண்ணித்
திரிகடுகில் பணந்தாக்கி யுண்டிடாயே. (80)

உண்டிடக் காமாலை பெருவயிறு சோகை
ஊது மகோதரம் கவுசை பாண்டுரோகம்
மிண்டிடக்கை கால்கடுப்பு வாதசூலை
மேகவெட்டை நீர்க்கடுப்புச் சன்னிசீதம்
கண்டிய மந்தாரசன்னி யண்டவாதம்
சயரோகம் வலிப்பிளைப்புச் சகலநோயும்
பண்டிதரே ரவிகண்ட பனிபோல் நீங்கும்
பண்பாகச் செய்தெடுத்து ஓத்துப்பாரே. (81)

## 200. நெ. 123. (a) வைத்திய அட்டவணை.

ஏடுகள் 91 ; 6 lines in a page.

முதல் ஏடு பாதி முறிந்திருக்கிறது. கையெழுத்து நன்றாக இல்லை. பிழைகள் அதிகம் இருக்கின்றன. இதில் நாக உருக்குக் கைமுறை, தாமிர உருக்கு முறை, தாளக குரு பற்பம், ரஸபற்பக் குரு முறை, லிங்க மைனம், வெள்ளீய வெள்ளி, ரசச்செந்தூரம், காரீயச் செந்தூரக் குரு, ரஸக் குளிகை, துருசுக்குரு, வெங்காரக் குரு, இரும்பு செம்பாக முறை. விஷேதம், மேகச்செம்பு இருட்டில் வாசிக்கமை, வெங்காரமணி, பாஷாணக் குளிகை, துருசுக்கரு,உடும்பு ரசக்குளிகை, பலாசக் குளி கை, கெந்தகத் தைலம், கெந்தக நெய்த்தைலம், லிங்க முருண்டை பிரயோகம், லிங்க மெழுகு, செம்பு ஊறல் எடுக்க, வெள்ளீய பற்பம், ரஸக் குளிகை, ஆட்டில் வேதை, கந்தக மைனம், லோக செம்பு, ரஸமணி, சகல

ஊறல், கடிக்குக் குஷ்ட குலாந்தகம், வேதை மாத்திரை, வாலை ரஸ முறை, கெவுன சித்தர் முறை, துய்யான் செய் விபரம், ஆடும் சரக்கு 64-ன் விபரம், மருதாணித் தைல வேதை, திருவெங்கச் செந்தூர வேதை, பேதி முறைகள், ரெங்காச்சாரி நாகக் குருமுறை, வீரமயனம், வில்வ ரஸ பற்பம், ரஸ மணி, துருசு சுன்னம், ஒன்பது கல் வல்லடி சித்தன் முறை, சுப்ரமண்ய பண்டாரமுறை. முதலியன உள்ளன. கடைசியில் 21 ஏடுகள் வெவ் வேறு முறைகள் அடங்கினவைகளாக இருக்கின்றன.

Beginning :

ரசவாலையாக சோற வயிரவ......
பன்னி வடைபழம், பாயஸம், நெய்........
ணிக்கொண்டு செய்யுரது- கைகண்ட முறை,
பாத்துனே விராளிவேர் கொண்டு வந்து .....
தயிலமிறக்கி அடுப்பிலே சட்டிவைத்து .....
அதிலே ஒரு செப்பு கிண்ணம்
அதிலே ரசம்பல அ விட்டு......
தைலத்தைச் சுறுக்குக் கொடுத்து.....யிறைலே
துருவி யிந்தப்படி பனிரண் ......

End :

சாவளேராம் சாதிலிங்க குரு. லிங்கக் குரு கட்டு முறை.

லிங்கம் விரா. 1. கொண்டுவந்து இரும்புக் கரண் டியில் வைத்துத் தேன் பலம் 1, முலைப்பால் பலம் 1, எருக்கம்பால் பலம் 1, மூன்றும் கலந்து, வீரம் விரா. ½,

பூனீர் விரா. ½, சூடம் விரா. ½, கோழி வெள்ளைக்காரம் பணவிடை 1, இதெல்லாம் பொடி பண்ணி அதனுடன் பசுவின் பால் பலம் 1, கலந்து ஒரு சாமம்வைக்கத் தெளிந்து சலமாயிருக்கும். அந்த சலத்தை இறுத்து இரும்புக் கரண்டி லிங்கத்துக்கு அது ஆகு மட்டும் சுருக்குக் கொடுக்க லிங்கங் கட்டும். கருவர்க்கு அந்த அடிவண்டலிலே ரண்டு அரைக்காசு காய்ச்சிக் காய்ச்சியதிற் தோய்த்து அந்த மருந்து காசுக்குப் பூசி மூணு விராட்டியில் மூணு புடம் போட வெட்டையாகும். அந்த தாம்ரம் 3, வெள்ளி 8, லிங்கம் 1, உருக்கி ஊதி உப்புச் செங்கல்லில் வைத்து 3 விராட்டியில் என்று புடம் போட்டு உருக்க மாத்து 4 எடைக்கெடை தங்கம்சேர்க்க மாத்து 7. இது கை கண்டது.

குறிப்பு:

மேற்கூறியதை யன்றி கடைசி 21 ஏடுகளில் லிங்கங் கட்டு, பாஷாணக் கட்டு, சங்கராச்சாரியார் முறை, கவுரீ பாஷாணக் கட்டு, தாமிர பற்பம், உப்புக்கட்டு, ரசக் கட்டு, பாஷாணக்கட்டு காசிநாதன் முறை முதலியவை காணப்படுகின்றன.

## 201. நெ. 124. (a) கௌரி பஞ்சாங்கம்.

ஏடுகள் 3; 10 lines in a page.

இதில் ஒவ்வோரு கிழமைகளிலும் ஒவ்வொரு நாழிகைகளிலும் ஏற்படும் பலன்கள் எழுதப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக் கிழமை

| பகல் | | இராத்திரி | |
|---|---|---|---|
| உத்யோகம் | $3\frac{1}{2}$ | சுகம் | $3\frac{1}{2}$ |
| கலகம் | $3\frac{1}{2}$ | அமிர்தம் | $3\frac{1}{2}$ |
| விஷம் | $3\frac{1}{2}$ | சோகம் | $3\frac{1}{2}$ |
| அமிர்தம் | $3\frac{1}{2}$ | ரோகம் | $3\frac{1}{2}$ |
| சுகம் | $3\frac{1}{2}$ | கலகம் | $3\frac{1}{2}$ |
| தனம் | $3\frac{1}{2}$ | லாபம் | $3\frac{1}{2}$ |
| சோரம் | $3\frac{1}{2}$ | உத்யோகம் | $3\frac{1}{2}$ |
| ரோகம் | $3\frac{1}{2}$ | தனம் | $4\frac{1}{2}$ |

End :

சனிக்கிழமை

| பகல் | | இராத்திரி | |
|---|---|---|---|
| விஷம் | $3\frac{3}{4}$ | விஷம் | $3\frac{3}{4}$ |
| சுகம் | $3\frac{3}{4}$ | உத்யோகம் | $3\frac{3}{4}$ |
| ரோகம் | $3\frac{3}{4}$ | சுகம் | $3\frac{3}{4}$ |
| உத்யோகம் | $3\frac{3}{4}$ | அம்ருதம் | $3\frac{5}{8}$ |
| அமிர்தம் | $3\frac{1}{2}$ | கலகம் | $2\frac{3}{4}$ |
| லாபம் | $3\frac{3}{4}$ | ரோகம் | $3\frac{3}{4}$ |
| தனம் | $3\frac{3}{4}$ | சோரம் | $3\frac{3}{4}$ |
| கலகம் | $3\frac{3}{4}$ | லாபம் | $3\frac{3}{4}$ |

## 202. (*b*) நாடிசாஸ்திரம் (வால்மீகர்)

ஏடுகள் 12 ; 15 lines in a page.

இதில் நாடிசாஸ்திரம் 60 செய்யுட்களில் கூறப்பட்டிருக்கிறது. மயிர், மாம்ஸம், எலும்பு, ரோமம், கண்கள் இவைகளின் நிறைகள், வாத, பித்த, கப நாடிக்

குறிகள், வாதநாடியின் நடையிலிருந்து அறிந்து கொள்ளும் இலக்ஷணங்கள், பட்சவாயுக் குறிகள், பற்பல ஜந்துக்களின் நடைகள் போல் கூடி நடந்தால் அதற்கான வியாதிக் குறிகளும், கடைசியில் நாடிகளிலிருந்து மரணக் குறிகளையும் அறியும் விதமும் கூறப்பட்டுள்ளது.

Biginning:

நாடிய கரியமுக னல்லபொற் பாதந்
தேடியென் மனத்துள் சிந்தை வைத்துநான்
கூடிய நற்புட னகுற்ற நன்மையும்
பாடிநானு லகத்திற் பகர்ந்த வாரதே (1)

அங்கை அரசினை யவனறு முகவன்
பங்கையப் பதந்தான் பதித்த சென்னிமே
லிங்கித நாற்றிசை யிணங்குஞ் சூத்திர
மிங்குநான் விளம்பிட யிணங்கு வாரதே (2)

End:

முற்குறி வால்மீகர் முனியுடன் றேதுக்கெல்லாம்
நற்குறி யிதுவழக்கம் பெறவுரைத்த வாறு
மெய்குறி யுலகிலுள்ளோர் விரும்பியே செய்வார் செய்வார்
எற்குறி மருந்தறிந்தறிந்து இயம்பல் தேவர்க்கு மாமே.

## 203. (c) வைத்திய அட்டவணை

ஏடுகள் 66; 13 வரிகள்

இதில் வசன ரூபமாக அநேக வைத்திய முறைகள் காணப்படுகின்றன. 13-வது ஏடு முதல் 79-வது ஏடு

வரை முறையாக இருக்கின்றன. இதில் சாதிலிங்கச் செந்தூரம், தாளக்கட்டு வகை, திரிகடுகாதி மாத்திரை, பாஷாணக் கட்டு, சுகபேதிக்கு ரெத்தினாதிக் குழம்பு, சவ்வீர செந்தூரம், மூலத்திற்கு மருந்துகள், குஷ்டத்திற்குச் சித்திரவல்லாதிச் சூரணம், ஆக்கிராணம் (நாசிகாபரணம்) சௌவீர மெழுகு, பீனசத்திரிகள், கிரந்தி எண்ணெய், ஜ்வராங்குசம், பீனசத் தைலம், மூல முளைக்கு கயறு, பவுத்திரத்திற்கு எண்ணெய், காந்தச் செந்தூரம் செய்வகை, க்ஷயம், காசத்திற்குத் துவாலை, கருங்கோழித் தைலம், விஷமுஷ்டித் தைலம், வலிப்பிற்குத் தைலம் மூலவாயு லேகியம், சஞ்சீவி நெய், அருகவேர் தைலம், பல்வலி எண்ணெய், அரக்கெண்ணெய், வரட்சிக்கு லேகியம், சூதகவாயு மருந்து, மேக எண்ணெய், தேத்தான் நெய், வீக்கத்திற்கு, நீரிழிவுக்குப்பரங்கிப்பட்டைப் பதங்கம், ரஸ முறிவுக்கு மருந்து, கெந்தக நெய், லிங்கக்கட்டு, குருபற்பம், ஆகாசகருடன் விஷமுறிவு விஷ மை முறை, புண்களிம்பு, ஆறாத புண்ணுக்குக் களிம்பு. சவ்வீரக் களிம்பு, கருவங்க பற்பம், லிங்கக்கட்டு, துருசு குரு, ரணக் கட்டு வகை, தாளக மாத்திரை, கெந்தக பற்பம், வெள்ளைப்பாஷாண பற்பம் முதலானவை உள்ளன.

Beginning :

பலத்துப்போஞ் சாதிலிங்கச் செந்தூரங்கேளு
பேசாதே சாம்பிராணி கூடனுந்தான்

பலத்துக்கு வகையொன்றாய் வாங்கிமைந்தா
பருத்தகல் வத்திலரைக்கும் போது

பலத்திரிகி மெழுகுபோல் பிடித்துக் கொள்ளும்
பின்வழித்துப் பத்துருண்டை யாகச்செய்து

குலத்தின் மேல் மெழுகுகொன்கை வசம்பூசிக்
குத்துமேல்ச் சீலைசெய்து கொளுத்த
நன்றாக வெந்துவது வாறினுக்கால்
நழுகாமல் மருநட்டு மெழுகுபூசு
குன்றாமல் வெந்துவது ஆறினுக்கால்
குணமான மெழுகதனைத் திரும்பப்பூசி
பாற்மகனே சீலைசுத்தி யெரித்திடாயே.

End:

## அச்வகந்தாதிச் சூரணம்.

சுக்கு 3 வீ. மிளகு 3 வீ. திப்பிலி, சாதிக்காய், சாதிப் பத்திரி, அதிமதுரம், குராசானி ஓமம், ஓமம், கிராம்பு, கடுகுரோகிணி, இவைகள் வகைக்கு 3 வீ. சீனிச்சர்க் கரை 23. அச்வகந்தாதிப் பொடி வீ 50. கடைசரக் கை இள வறுப்பாய் வறுத்துப் பொடி செய்து அதில் சீனிச்சர்க்கரைப் பொடியையும் கலந்து புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு வேளைக்கு ரெண்டு பழச் சாற்றில் வெருகடித்தூள் போட்டு 2 வேளையுங் கொடுக் கவும். இந்தப்படி நாள் 15 கொடுத்தால் சூதக வாயு, சூதகக் கட்டு, நீர்க்கட்டு, நீராமை, கெண்டை இவ்வள வும் கரையும்.

பத்தியம்:

கசப்பு, புளிப்பு, கரப்பான் பதார்த்தங்கள் தள்ளு படி.

## 204. (d) அகஸ்தியர் பற்பமுறை இருநூற்றைந்து.

ஏடுகள் 80 முதல் 139 வரை ; 12 lines in a page.

இதில் 176 செய்யுட்கள் இருக்கின்றன 4-வது செய்யுளில்

'அருந்தவே மருந்தை யிந்த இருநூற்றஞ்சா
லாட்லாஞ் சித்தரைப்போ லாடலாமே''

என்று கூறப்பட்டிருப்பதை நோக்கில் 205 செய்யுட்கள் இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிகிறது. இதில் அயபற்பம், காந்த செந்தூரம், தாம்பரபற்பம் முதலிய முறைகள் கூறப்பட்டுள்ளன. இது அச்சிடப் பட்டுள்ளது.

Beginning :

பூரணமா முள்மூலம் பொரியிற்சூடாம்
புகையெழும்பி மேகமதாஞ் சிரசிற் சூடாங்
காரணமாம் நீகேளு நகக்கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவினுல்சூலை ரோகம்
மாரணமாம் வாதத்தி லெழுந்த மேகம்
அதியதொரு பித்தவிதாகக் கிராணியாச்சு
காரணமாம் வாயினுல் குன்மமாச்சு
சார்ந்த சிலேற்பனங்கூடிற் சயமதாமே

End :

கிருமியென்ற கிருமியெல்லாம் கெதிகெட்டோடும்
வருமேயென வாய்வெல்லாம் மண்ணுய்போகும்

வாதமொடு மலக்கட்டுத் திரண்டவாய்வு
ஒருமித்த நோய்களெல்லா மோடிப்போகும்
மூலகத்திலிது சுறுக்கு வுறுதிபாரே (176)

## 205. பலத்திரட்டு

( ஏடுகள் 19; வரிகள் 13. )

இதில் முன் பின்னுக ஏடுகள் உள்ளன. இதில் நவச்சாரக் கட்டு, கரியுப்புச் செந்தூரம், பாஷாணம், லிங்கம், கெந்தகக் கட்டு வகைகள், கரியுப்புக்கட்டு, கெந்தக மாத்திரை, தாளக மாத்திரை, சுர மாத்திரை, நவச்சாரக்கட்டு முதலியவைகளுடன் பாம்பாட்டிச் சித்தர் பாடல் 4 ஏடுகளும் உள்ளன. வெடியுப்புச் செயநீர் பாஷாணக் கட்டு, பரங்கிப்பட்டைச் சூரண வகைகளும். உள்ளன. அச்சிடப்படவில்லை

Beginning ;

சித்தர் மூலியை அரைத்துத் தாம்பிரத் துட்டுக்குக் கவசம் செய்து சீலை செய்து முழப்புடம் வைக்கச் சுன்னமாகும். கேசரி நீரில் நாலு வராகனெடை கெந்தகத்தை நுணுக்கிப் போட்டு அதில் 4 சல்லியைப் போட்டு அடுப்பில் காய்ச்ச மெழுகாகும். அதைச் சீலை செய்து முழக்குழியில் கரி கொட்டி அதில் மருந்தை வைத்து மேல் கரி கொட்டிப் புடம் வைக்கவும். மறு நாள் ஆறி யெடுக்கச் சுன்னமாகும். பார்த்துக் கொள்ளவும். கைபாகமாய்ச் செய்யவும்.

End :

பூரணமாம் சுழினை நடுக் கமலமீதே
புகழ்பெரிய மூலகண பதியேகாப்பு
காரணமா யெனையாண்ட பரம்பொருளை போற்றி
றிகட்டாக வாதத்தில் லக்ஷத்தியுங்காப்பு
தாரணமாய் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்பாக ஆயிரத்திருநூறு சூத்திரம்
மாரணய்க் குறுக்கிட வைத்தேன் .......

.................................................................

## 206. நெ. 125. (*a*) மலை வாகடம் (கோரக்கர்).

அபூர்த்தி. (ஏடுகள் 14 ; ஓலைக்கு 9 வரிகள்.)

இதில் சிவந்தகள்ளி கற்பம், செந்நாயுருவி கற்பம், வெள்ளைச் சாறடைக் கற்பம், இரதக்கன்னி, சோதிப் புல்லுக் கற்பம் மூலம் இரசத்தைக் கட்டும் முறை, வள்ளியம்மனுக்குக் குமாரர் உபதேசம் பண்ணின மருந்து, திருக்குறுகுடி ஆறு திருப்பாற்கடல் ஆறு தாண்டினால் கல்தாமரைக் கற்பம், கருந்தாமரைக் கற்பம், கரும்பசளைக் கல்பம் இரத்தக் கத்தாழைக் கற்பம் கரும்பசளை கற்பம் (வெள்ளருகின் இலையைப் போன்றது) சிவந்த தேவதாளிக் கல்பம், சிவந்த புன் முருங்கைக் கல்பம், முண்டக விருட்ச கல்பம், இரஸக்கட்டு முறை, சிவந்த தும்பை கற்பம், சோதி வ்ருட்சம், சோதிப் பில்லு, கல் தாமரைக் கல்பம், அழுகண்ணி தொழுகண்ணி கற்பம, ஏரழிஞ்சில் கல்பம், பொற்றலை கையான் கற்பம் முதலானவைகள் காணப்படுகின்றன.

சரக்குகள் கிடைக்கக்கூடிய இடங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன.

Beginning:

சிவந்த கள்ளி கற்பம்

சிங்கு குளத்திற்குக் கீழ்புறத்தைலருகே பரமேச்வரன் கோவிலுண்டு அதைச்சுற்றியே ஏழு சுனையுண்டு தென்புறத்தில் ஒரு சுனையுண்டு. வடபுறத்திலொரு சுனையும் கீழ்புறத்தில் மூன்று சுனையும், உச்சியிலே ஒரு சுனையும் மேற்கே ஒரு சுனையும் உண்டு. அதிலே எல்லோரும் தீர்த்தமாடுவார்கள். தெற்குச் சுனையின் பக்கத்திலே ஒரு பேரில்லா மரமுண்டு, சிவந்த இலைக்கள்ளியுண்டு, அந்த சிவந்த இலைக்கள்ளி மின்வெட்டினைப் போலேயிருக்கும். அதன் பாலெழுவகை லோகமும் பேதிக்கும். அதன் பால பணவெடை கொண்டால் மூன்று லோகமும் தெரியும், பதினாயிரம் வருஷம் இருப்பான். இந்த கற்பத்தைக் கொண்டு அங்கே யொரு பத்தினிக் கோவிலுண்டு, அதிலே தவசு நாற்பது நாள் கிடந்தால் கற்பகோடி காலம் அழிவில்லை.

End:

ஏரழிஞ்சில் கல்பம்

அதுவுண்டானவிடம் கூடலூருக்குப் போறபாதையில் மேல் புறமாக நிற்கும் வழிபோற பேர்கள் திண்டியிருந்து போவார்கள். தாடக மலைக்குத் தென் சருகில் மகாதேவர் கோவிலுண்டு. அந்த சந்நிதியிலுமுண்டு அந்த வித்தை எடுக்கும்படி, வைக்கோல் பிரி அந்த மரத்தில் சுத்திச் சாணிப் பூசினால் பழுக்கிற காலம்

விழும் வித்து ஏறிப் பிரியில் சாணியில் போயிருக்கும். அதை எடுக்கக் காலம்—அதை எடுத்து வைத்து கொண்டு கழுஞ்சு பொடிபண்ணி உரி நல்லெண்ணெயில் போட்டு 7 நாள் நல்லெண்ணெயில் போட்டு 7 நாள் வெய்யிலி லெடுத்துத் திரியாக்கி விளக்கில் போட்டு அந்தத் தைலத் தை விட்டுத் திரிகொழுத்தித் தலை மண்டை ஓட்டில் மைப்பத்த வைத்து இந்த மை நகக்கண்ணிலும், உள் ளங்கையிலும், புறங்கையிலும் வட்டமாய் போட்டு, நெற் றியிலும் திலகமிடவும். சர்வ லோகமும், பாதாள லோகமுந் தெரியும். தன்னுரு பிறருக்குக் காணும விருக்கும்.

வேறு :—

கூடலூருக்குச் சமீபமாக பொற்பூத்தைவேளை நிற்கும். அதின் சாற்றை ரசத்தில் சுறுக்குக் கொடுக்க பதினைந்து நாழிகையில் ரசங்கட்டும். 30 நாழிகையில் செந்தூரமாம்.

## 207. (b) ராமதேவர் பலதிரட்டு வைத்தியம் என்பது.

ஏடுகள் 35 பூர்த்தி ; 11 lines in a page.

இதில் இரஸக்கட்டு, வீரமெழுகு, அஞ்சனம், வச்யத் திற்கு, பாஷாணக் கரு, பூர்ணாதி லேகியம், நவநீதக் குரு, அண்டக்கல் குரு, காரிய மெழுகு முதலான சிற்சில முறைகளுடன், யோக மார்க்கமும் கூறப்பட்டுள்ளன.

Beginning :

ஆதியிலே வாலைமனோன் மணித்தாய் கூவி
அழைத்திட்டு ஆதியந்தமறியச் சொன்னாள்
சோதியிலே கருவுருவை யூணிப்பாரு
சொல்லவொண்ணு வதிசயங்கள் தானே தோன் [றும்
நீதியிலே சதானந்தி யென்னைப் பெற்றாள்
நீள்திசையி லுள்ளசித்தர் மெச்சிக்கொள்ள
வாதியென வந்தோற்குத் திறவுகோல் போல்
வசனித்தேன் பத்துமொரு எட்டுரெண்டாய் (1)

★ ★ ★ ★ ★

End :

தானகக் கற்பமது கொள்ளும் போது
தயவாக நூலெடுத்துப் பார்க்கும் போது
தேனை மதியமிர்தம் கொள்ளும் போது
சிவபூசை குருபூசை செய்யும் போது
மானை அகம்போக்கி நீதானென்று
நன்மையுடன் மௌனமதா யிருக்கவேணும்
காணை சற்குருவைக் காணவேணு
குணமுடைய பூரணத்தை வணங்கிமுத்தே(82)

வணக்கமுள்ள யிந்த நூலை வெளியிடாதே
வஞ்சருடன் பேசாதே வாயாடாதே
இணக்கமுள்ள மாந்தருடன் கூடவேண்டா
மின்பமுள்ள வைத்திய நூலீயவேண்டா

மணக்கம்வர மதிதனிலே மனத்தை வைத்து
வைத்திய னூலெண்பதுவும் வகையாய்ப்
பார்த்து
தனக்குமிது பொருளெனவே வணங்கி போற்றிச்
சதாகாலங் குருபதத்திற் சார்வார் முத்தே

முற்றும். பரிபூரணம்.

## 208. (c) ராமதேவர் அஷ்டாங்க யோக பட்சணி.

ஏடுகள் 17 ; பக்கத்திற்கு 9 வரிகள்.

இதில் திகைப்பூடு கல்பம், ஆவிரைப் புல்லுருவி கற்பம், சிறியாநங்கைக் குழித் தைலம், மகாரஸ சுத்தி, அரிதாரச் செந்தூரம் முதலான முறைகள் காணப்படுகின்றன. பற்பல யோகமுறைகளும் உள்ளன.

Beginning :

ஆதியிலே வாலைமனோன் மணித்தாய் கூவி
அழைத்திட்டு ஆதியந்தமறியச் சொன்னாள்
சோதியிலே கருவுருவை பூணிப்பாரு
சொல்லவொண்ணு வதிசயங்கள் தானே தோன்
நீதியிலே சதானந்தி யென்னைப் பெற்றாள் [றும்
நீள்திசையி லுள்ளசித்தர் மெச்சிக்கொள்ள
வாதியென வந்தோற்குத் திறவுகோல்போல்
வசனித்தேன் பத்துமொரு எட்டுரெண்டாய் (1)

End :

எட்டும்ரெண்டு மறிந்தவர்க்கு மெய்தும் மெய்தும்
யில்லாட்டா லின்நூல்தான் கிட்டா கிட்டா
துஷ்டருட னொருனுளுங் கூடவேண்டாம்
துடியாக ஒருவரையும் பேசவேண்டாம்
திட்டமுட னின்நூல்தான் அன்பத்தொன்றும்
தீர்க்கமுட னதனிலேதா னிருந்துகொண்டு
அஷ்டாங்க யோகத்தைத் தினமும் பாரு
அருளான மனோன்மணிதான் காப்புமுத்தே. (51)

எழுதி முகிர்ந்தது முற்றும். பரிபூரணம்.

குறிப்பு :— இந்த சுவடியும், இதற்குமுன்னுள்ள "ராமதேவர் பலதிரட்டு வைத்யம் எண்பது" என்ற சுவடியும் ஒன்றுதான்.

## 209. (*d*) * பலதிரட்டு.

(ஏடுகள் 28 ; வரி 8)

ஏடுகள் சிற்சில இடங்களில் சிதைந்துள்ளன.

இதில் குரு, மாணக்கர் சம்வாதம் போலக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷடாதார சக்ர விளக்கம், பதிபசு பாசவிவரணம், மாணக்கரிலக்கணம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

கடைசியில் ஏடுகள் முறிந்துள்ளன.

* சுவடியின் பெயர் கூறப்படவில்லை.

Beginning :

.......முக்கண் ணுடையவனே சுரனே சிவன் .. ..
.......னவர்கம் பக்கமுயங்கிய வல்லபை.....
......ருத்தியாள திக்கில் மயேசுரி
மனோன் மணியார்பாதம் நான்மறவேன்......
த்தியுத்தாவம் புனைக்காளியோம ...
... ....தனையும்புத்தி யுடனுலகோர் முனி ....
பூறணமா லயனுமித் தனையோரறியப்.......

* * * * *

End :

என்னையளித் தப்பன்மா ணுக்கநீயாம்
உன்புதல்வ னைகுமெஞ் ஞானியாமே
யுன்னையொப்ப லின்னெருவ னுண்டோமண்மே
லுனக்குவமை யோபிறவியற் றுயப்பா
தன்னை யறிவித்தக்குரு தன்னைக்கண்டு
தான்டெளியான் பிறர்க்குரைப்பான் றவமென்
முன்னையமைத் திட்டபடி குருத்தெளியா [னைகு
முயற்சி பெற்றசீடர்தெளிந் திருப்பர்தாமே.
(100)

* * * * *

கடைசி இரு ஏடுகளும் சிதைந்துள்ளன.

## 210. *No.* (*a*) அகஸ்தியர் புஷ்பமாலிகை 50.

(ஏடுகள் 12; பக்கத்திற்கு 6 வரிகள்)

அகஸ்தியர் புலத்தியருக்கு உபதேசித்த மாதிரி கூறப்பட்டுள்ளன. இதில் வழலை, பூரச்சுன்னம், கர்ப்

பூரச்சுன்னம் முதலானவைகளுடன், யோகசித்திக்கானமுறைகளும், கூறப்பட்டுள்ளன.

Beginning :

ஆதியென்ற அண்டமெல்லாம் படைத்தசாமி
ஆனந்த போதமதாய் நின்றரூபி
சோதியென்ற நாதவிந்து மௌனமாகிச்
சொல்லடங்காப் பொருளாகிச் சூட்சமான
வேதிபரா சக்திமனோன் மணியின்பாதம்
விளங்கறிவால் பூசித்து மௌனமுற்று
மேதினியில் கும்பமுனி யென்றும்பேரு
மெஞ்ஞானச் சரவணனைப் போற்றினேனே.
(க)

End :

கண்டுகொள்வா யுலகத்திற் முப்புவென்ற
கருச் சொன்னே னுந்தனுக்காய் கண்டுபாரு
விண்டுகேள் மௌனத்தின் நின்றுகொண்டு
விளங்கவே மந்திரங்கள் செபித்தால் மைந்தா
சென்றுவஷ்ட கர்மமெல்லாம் சித்தியாச்சு
செப்புகிறேன் புலஸ்தியனே செம்மையாகத்
தண்டுமதி மேல்நோக்கிப் பிரகாசங்கொண்டு
தனித்துநின்று வோடுதுபார் சஞ்சீவியாமே.
(50)

சஞ்சீவி மார்க்கமப்பா சொல்லிவிட்டேன்
சற்குருவின் கிருபையினல் சாற்றினேன்பார்
சிரஞ்சீவியா யிருப்பாய் புஷ்பமாலே
சீக்கிரத்தில் சித்தியுண்டாம் செய்கைமெத்த

தஞ்சீவ ஞயுசுமே யுகர்ந்த மட்டும்
தற்பரு நந்தியரு ளாலேயெய்தும்
பொன்சீவன் வழலையுட மார்க்கம்சொல்லி
பேரின்ப மவுனத்தில் பிலத்துரைத்தேன்
யெஞ்சீவி கற்பமென்ற வகையுஞ் சொன்னேன்
யேகாந்த மௌனவிந்து விளங்குமுற்றே. (51)

கணபதே நம:

## 211. *No.* 127. மேகமிருவதுக்கும் குணவாகடம்.

ஏடுகள் 27 (10 முதல் 37 வரை) (ஏட்டுக்கு 7 வரிகள்)

1 முதல் 9 ஏடுகள் இல்லை.

இதில் மேக (நீரிழிவு) நோய்கள் வரக்காரணம், வகைகள் அதன் குறி குணங்கள் முதலானவைகளுடன் ஓரிரு சிகித்ஸை முறைகளும் உள்ளன. மூத்திரக் குறிகள் (நீர்க்குறி, எண்ணெய்க் குறிவகைகள்) இதில் காணப்படுகின்றன. கடைசியில் தாது லட்சணம் கூறப் பட்டுள்ளது.

Beginning:

வானுலவு மேகமென வந்தேமலவுடலிற்
ரூன்மருவு நாலைந்தின் சாதிகளை—நான் முனிவன்
வாதபித்த சேத்துமத் தொந்த வகையெல்லாம்
லோதினர்கள் வைத்தே வுகந்து. (1) [வாகடத்தே

வடகலை தெரிந்ததென்றி மலையமா முனிவன் சொன்ன
திடமுறு தமிழினாலே தெரிந்திந்த வகையை யோர்ந்தே
இடமுள மேகக்கூட்ட மிகல்செய்யுங் கிரிச்சிரங்கள்
அடவுட னறியவேண்டி யகிலமீ துரைக்கலுற்றேன். (2)

மேகநிதானம் முற்றும்.

* * * * *

## தாது லட்சணம்

End :

தலைவிரி தட்டை மொட்டை தவசிசந் யாசிப்பார்ப்பான்
முலைமலி வெறுங்குடங்கள் மூர்க்கரை விறகுக்கட்டு
மிலமலி யிதுநோயாளன் நாவிதன் குருடன் செக்கான்
பலரிவை யெதிரே காணப் பயனில்லைக் கருமந்தானே.
(106)

செய்யெழு செய்யவாடை சிவப்புடை வியாதியாளர்
மெய்தலைமயிர் களைந்தான் விரிதலை ஒற்றைக்கண்ணன்
..........................................................................
கையிலே கயிறுகாணக் காலனென் றுரைக்கலாமே.
(107)

குரோதன வருஷம் மகாராஜா

சுக்கிரவார அர்த்த மண்டல சமயத்தில் மேகநிதானம் எழுதி முகிந்தது முற்றும்.

ஆதிசைவ குலோத்தம திலகம் சிவசுப்ரமண்ய தேசிகர் ஸ்வஹஸ்தலிகிதம்,

## 212. *No.* 128. வைத்திய அட்டவணை.

(ஏடுகள் 2 முதல் 31 வரை)

பக்கத்திற்கு 5 வரிகள். சிதிலமாயிருக்கிறது.

இதில் மருந்து முறைகளுடன், வசியத்திற்கான மூலிகை வகைகளும், யோக முறைகளும், மந்திரங்களும் உள்ளன. ஜால முறைகளுய் உள்ளன.

Beginning :

பறியாப் போவிட்டு நீங்கவிட்டு நீங்க சிவாய நமே... சி வாய நம........ திரிபுர கணபதி சிக்கரெ மற்றர ரார.

பச்சை ஒணானை ஆதிவார நாளே அடித்துப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி எடுத்துப்போட்டுப் பாலைப் பிறைக்குத்திக் கடைந்து வெண்ணெயெடுத்துப் புதுச்சட்டியில் ஆதிவார நாள் நெட்டைப் பேய்மிரட்டி, கருசாலங்கண்ணி, சிறுக்கீரை, மூணும் புதுச்சட்டியில் வறுத்துக் கருகி வருகிற வேளையிலே, கற்பூரம் வீ. 1. போட்டுத் தேன்விட்டு அந்த வெண்ணெயை கூடப் போட்டு தூள்பண்ணி நன்றாய்க் கூட்டிச் சிமிழியில் அடைத்துக் கொண்டு தூபம் கொடுத்து வைத்துக் கொள்ளவும். சகலத்திற்கும் திலதம்.

End :

வெள்ளைக் காக்கிரட்டான் பூவும், (காஞ்சி)ரங்காயும், தாமரைக் கிழங்கும், அதிமதுரம் இந்த நாலும் சரிபாகமாய்க் கூட்டி யரைத்து நிழலிலுலர்த்தித் திலதமிட்டுப் பார்க்க நினைத்தவள் வருவாள்.

**சொக்குப் பொடி**

*கழுதைத் தும்பை வேரும், ஆனைவணங்கி வேரும், வட்டத்திருப்பி வேரும் இம்மூன்றும் சாணத்தில் பிடித்துக் காயப்போட்டு, இடித்துந் (காட்டு)த் தீயில் சீர்த்து.........யிட ஆசையாக...........*

---

## 213. நெ. 129. (a) போகர் சுவாமி அருளிய சுருக்கம் எட்டு.

---

*(ஏடுகள் 2; வரிகள் ஒரு பக்கத்திற்கு ஏழு)*

*இதில் அஞ்சனம், ரசக்குளிகை, சவுக்கார சுன்னம், முதலான மருந்துகளுடன் யோக முறைகளும் கூறப் பட்டுள்ளன.*

Beginning:

*ஒன்றான வேதாந்தச் சூத்திரந்தான்*
*ஓதுகிறேன் ஆதியுமை பாதம்போற்றி*
*பன்றான வைப்புமுதல் வாதஞானம்*
*பாங்கான பிறணயங் குளிகைசிற்று*
*நன்றாகக் கருவித்தை யாகச்சொல்லி*
*நாட்டுறேனந் துலாத்தோற்குங் கன்னியோர்க்*
*கன்றான ஆறுதல மக்ஷரந்தான்*
*கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் காணு*
*வீரே. (1)*

End :

ஆச்சப்பா சவுக்காரச் சுன்னந்தானே
அய்யிரண்டு மாத்தாகு மழுரியப்பா
தாமப்பா முறையோடே செய்தாயானல்
சரக்கெல்லா மதனலே சிவப்புமாகும்
ஓமப்பா அதனேடே துருசுசுன்னம்
உத்தமனே கூட்டிவிடப் பதினெட்டாச்சே. (7)
ஆச்சப்பா பெண்தனக்கு உபதேசித்து
அப்பனே அழுரியது வாங்கிக்கொள்ளு
பாச்சப்பா கல்பத்திற் கிதுவே ஆட்சி
பாடியபே ரிக்கருவை மறைத்தாரப்பா
ஓச்சப்பா இந்த உப்புங் குகையினுள்ளே
உத்தமனே துருசிலது சுன்னமாச்சு
மூச்சப்பா கருவெல்லாம் வெளியாய்ப்பாடி
முடித்துவிட்டேன் எட்டினுள்ளே மூட்டுவீரே. (8)
சிவமயம் சிதம்பரம் பிள்ளை.

பிரஜோத்பத்தி வருடம் தை மாதம் 8-ந் தேதி.

---

## 214. நெ. 129. (*b*) அகஸ்தியர் சூத்திரம் முப்பத்திரண்டு.

---

(ஏடுகள் 10 ; ஒரு பக்கத்திற்கு வரிகள் 6)

இதில் வழலைச் சுன்னம், வச்யத்திற்கான தூள், பாம்பைக் கட்ட வேர் (ஸர்பாகர்ஷண வேர்) முதலான

வைகள் காணப்படுகின்றன. வழலையைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசப்பட்டிருக்கிறது. மச்சமுனிக்கு உபதேசம் செய்வதைப் போல் காணப்படுகிறது.

(9-வது ஏடு காணவில்லை)

Beginning :

ஆதியெனை யாண்டதொரு சோதிபாதம்
அப்பரத்தே நின்றதொரு அய்யர்பாதம்
நீதியெனை யாண்ட........ கந்தன்பாதம்
நினைவாக முப்பதிலே நிறைந்து வாழ்க
வாதியென்ற பேர்படைத்த புலத்தியனே அய்யா
வரிசையாய் வழலையுட வகையைக் கேளே. (1)

கேளப்பா வழலையுட வகையைக் கேளு
கெடியான உவர் (மண்ணும்) படியோவெட்டு
காளப்பா கல்சுன்னம் படியோ ரெண்டு
நலமான கல்லுப்புப் படியோ வொன்று
வேளப்பா அமுரிபடி பதினாறுக்குள்
விரவியே யிதுவெல்லாங் கலக்கிக்கொண்டு
கோளப்பா சொல்லுகிறேன் தெளியவைத்து
குறுகவே யடுப்பேத்தி யெரித்திடாயே. (2)

End :

........................ விட்டேன் முப்பதுள்ளே
பத்தியென்று லிதுபத்தி யிந்தநூல்தான்
பாதகற்குச் சொல்லாதே வழலையென்னை
முத்தியென்று லிந்தநூல் முப்பதுந்தான்
மூர்க்கமாய்ச் சரியென்று தொழிலைச்சொன்னேன்

சத்தியென்ற மண்டலியே சர்வசித்தி
சகலருக்கு மென்னும் தாயாரானாள்
பத்தியென்று விதுபத்தி நிலையைப்பாரு
பாலகனே வழலைதன்னைப் பகர்ந்திடாதே. (30)

பகர்ந்திட்டால் ஒருகோடி பாவமாகும்
பரமகுரு சிவகாமிமேலே யாணை
இகழ்ந்திட்டா லிந்தநூலை வெளியிடாதே
பானுமகே சுவரியாள் சொன்னவாக்கு
உகந்திட்டுக் கோடிதன மீந்தாலுந்தான்
ஒருவருக்குங் காட்டாதே வழலைதன்னை
நகந்திட்ட நவகோடி சித்துமாடும்
நலமான தொழிலெல் லாமிதுவே யாச்சே. (31)

ஆச்சப்ப முப்பதிலே வழலை சொன்னேன்
அரகரா யிந்தநூல் போலே காணேன்
நீச்சப்பா ம........ல்கடி சேயாகும்
நினைவாகப் பூரணத்தை வெளிவிடாதே
பேச்சப்பா பேசினல் வருவதேது
பேய்மக்கள் நினைவைவிட்டா லெல்லாம்
மூச்சுப்பா அடக்குமுன்னே சித்தியாகும் [போச்சு
மெய்யான முப்பதுதான் முடிவுமுற்றே. (32)

சற்குருவே துணை.

# 215. நெ. 230. (a) கருவூரார் வாத கற்ப அஞ்சனம் முப்பத்திரண்டு

*(ஏடுகள் 9; பக்கத்திற்கு 7 அல்லது 8 வரிகள்)*

*இதில் மறைப்பு மை, மறைப்பு அஞ்சனம், சிவ மெழுகு, தாமரை அஞ்சனம், மறைப்பு மை, வாதிகளுக்கான மை வகைகள், எலிச்செவிப்பூண்டு மை, (பாதாளம் வரைத்தெரிய) ஸர்வஜன வசியத்திற்கு மை. முதலியவைகள் உள்ளன.*

**Beginning :**

*உரைக்கின்றேன் மறைப்புதன்னைச் சித்திரமாக*
*உலகத்தொர் பிழைப்பதற்கு வகையெல்லாத்*
*திரைக்கிறேன் சிவஞானக் தங்கித்தாஞல்*
*சித்திமுத்தி ரெண்டுமுண்டாம் பாருபாரு*
*துரைக்கிறேன் திரிலோகஞ் செயிக்கலாஞ் சொல்*
*பெரிய அதிசெய்ததின் வித்தைதானும்*
*அரைக்கிறேன் அறிவுடனே செய்துபாரு*
*சாஸ்திரத்தின் கருவையெல்லா மிதிலேபாரே.*
(1)

**End :**

*பாரிலே விளையும் பச்சைப் பவழமும்*
*நீரிலே முத்துங் கூறிய தங்கஞ் (சேம)செம்பு*
*குடவனும் மாருமாச்சு*
*காரியே நாஞலாகல்வார் காணலாமஞ்சு நாத*
*ஆறியே தின்ருஞக்கால் அதில்ரச மாகும்பாரே.*(31)

ஆகுமே வாதகெ... ....ம் அதில் கருவெல்லாஞ் சொன்
ஏகமே லோகசித்தி தம்பினிப் பிறவியெல்லாம் [னேன்
சாகுமே கற்மஞ்சித்தி சதாசிவ நாமங்கேட்டால்
போகுமே பாவமெல்லாம் போக்குடன் செய்யமுத்தே. (32)

## 216. நெ. 131. கெர்ப்ப கோளம் பதினாறு.

(ஏடுகள் 9; ஒரு பக்கத்திற்கு 6 வரிகள்)

மலடாவதற்கான காரணங்கள் 7 வகைகளும், அதற்கான மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

Beginning:

பாரப்பா பெண்மலடாங் கர்ப்பகோளில்
    பருவமறை சொல்லுகிறே னன்பாய்த்தானே
யாரப்பா யாண்மலடே யாகுமல்லால்
    லப்பனே பெண்மலடு லாதுமில்லை
நேரப்பா தபசிருந்து பொருளை யீந்தும்
    நேரான தில்லையது சூலைதானும்
வேரப்பா தேவதையா லாளாங் கற்பம்
    விரித்து நன்றாய்ப் புகலுகிறேன் விரும்பிக்
        கேளே. (1)

End:

மதுவாகும் குளிர்ந்தசலங் கிட்டவாகா
    மைந்தனே கொதித்த தண்ணீர் மிகவுமாகு
கதுவாகும் வேதமுறை நான்கண்டு சொன்னேன்
    சத்தியந்தா னிந்தநூல் சார்ந்துபாரு

யதுவாகு மிதுமிதுவாகு மென்று யெண்ணி
யலைந்தலைந்து திரியாம லருளைநோக்கி
பொதுவாகும் நினைவுகொண்டு யிருப்போராகில்
புத்திசித்தி முத்திமுதல் புனிதமாமே. (16)

குருபாதமே துணை.

பழனியப்ப பிள்ளைக்குக் கண்ணுயிரம் பிள்ளை யெழுதின சுவடி.

முத்துவடிவேல் துணை.

## 217. நெ. 132. வைத்திய அட்டவணை.

(ஏடுகள் 32; ஒரு பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் பூநீறு மாத்திரை, தாளக மாத்திரை, வங்க பற்பம், விரேசன குளிகை, தாமிர பற்பம், மூலிகை, யெடுக்க மந்திரம், கருவங்க பற்பம், தாளகச் செந்தூரம் சுரம், காமாலைக்கு அயக்குளிகை, மலடுக்கு மருந்து, சன்னிக்கு வெள்ளை மாத்திரை, அரிதார பற்பம், வீரிய மருந்து, நாஸிகாபரணம், சந்நிக்கு ஆநந்தபைரவன் அக்கினி குமாரன், நாகபற்பம், த்ாளக செந்தூரம், வெள்ளைப் பாஷாண மாத்திரை, ஆனந்தபயிரவன், கோடாசூழிக் குளிகை, அரிதாரக் களிம்பு, மேகரணக் களிம்பு, அயச் செம்பு முதலான முறைகள் காணப்படுகின்றன. வசன நடையாய் எழுதப்பட்டுள்ளன. ஓரிரு ஏடுகள் மிகவும் சிதைந்துள்ளன.

Beginning:

*பூனீறு வாங்கி சலத்தில் கரைத்துத்தெளிவிறுத்துக் காய்ச்சி வெண்ணிற உப்பெடுத்து வீரம் எடைக்கெடை சேர்த்துக் கல்யாண முருங்கையிலைச் சாற்றில் கல்வத்தில் அரைத்து ஓட்டில் கீழோடு மேலோடுச் சீலைசெய்து குக்குட புடமிடச் சுன்னமாம். சகல வாயு, சூலைக்கும் கொடுக்கவும்.*

End:

## மருந்து வெள்ளைக் களிம்பு

*மருந்து வெள்ளை பலம் 2. எருமை மாட்டு........... ........... கொழுந்து பலம் 2. பசுவின்...........*

---

## 218. நெ. 133. பலதிரட்டு.

*(ஏடுகள் 3; பக்கத்திற்கு 8 வரிகள்)*

*இதில் சிவலோக லேகியம், வசீகரண மந்திரம், வங்க பற்பம், இம் மூன்று முறைகளும் காணப்படுகின்றன. இம்மூன்று ஏடும் தனித்தனியானது, ஆகவே இதை ஒரு தனிச்சுவடியாக சேர்க்கப்பட்டது.*

## 219. நெ. 134. சரநூல் சாஸ்திரம்.

*(ஏடுகள் 15; வரிகள் பக்கத்திற்கு 7)*

*இதில் மூலாதாரம் முதலான 6 சக்கிரங்கள், அதன் நிறம், இடகலை, பிங்கலை, சுழுமுனை முதலான நாடிகள்*

நக்ஷத்திரங்கள், அதில் சூரிய சந்திரன் இவர்களின் அதிகாரம், சூரிய சந்திரர்களின் ராசிகள், சரீரத்தில் பஞ்சபூதங்களின் ஸ்தானம், ராசிகளில் பஞ்சபூதங் களின் இருப்பிடம், சூரிய சந்திரன் நாடிகள் ஓடக்கார ணம் முதலானவைகள் காணப்படுகின்றன.

ஹரி : ஓம் : குரு வாழ்க.

**Beginning :**

சீராழியுலகங் கமலத் திருவடியை வாழ்சாந்தன்
பார்பதி கேழ்கப் பகர்ந்தனன் நூலின் பலனை
ஆராய்ந்து சொல்ல அரியுத்த ஆடானைமைந்தன்
காரானை வெல்கந்தன் காப்பு.

குரு பாதமே கெதி

ஏகமாய் ரூபந்தானே யியல்புடன் ரூபமாகி
ஆகமாஞ் சத்தியாகி அதனுள்ளே வாயுவானூர்
பாகமாஞ் சத்திதானே பரிவுட னுயிர்ப்பைக் கேழ்க்கத்
தாகமாய்ச் சரநூல் தன்னைச் சாத்தினர் அறனுமைக்கே (1)

**End :**

முத்து நற்பிரதமைதான் மோசமா யியங்குமாகில்
தைத்திடுங் கலகஞ்சீமை மன்னருக்கழிவு சொல்லும்
அத்தமாந் துதிகைதப்பில் அளவிலா மனக்கிலேசம்
பித்திய திரிதிகை பிழைத்திடி லுலச்சவென்றே (3)

## 220. நெ. 135. அய்யனையனார் மதிவெண்பா

(ஏடுகள் 13 ; பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் பசு, பதி, பாச விளக்கம், பிறவிப்பிணி நீங்க உபாயம், கடவுள் லட்சணம், மனதை அடக்கும் முறைகள் முதலான வேதாந்த விஷயங்கள் அடங்கியுள்ளது. கடைசீ ஏட்டில் தக்ஷிணாமூர்த்தி வெண்பா என்று காணப்படுகிறது.

மொத்தம் 70 செய்யுட்களேயுள்ளன.

Beginning :

தன்னையறிய வென்றால் சற்குருவைத் தண்டனிட்டு
...............கிறுபை சாற்றுவார் பின்னையுமே
போதாந்தசால.... .. .......மிகுமப்பால்
போதாந்தமான பொருள்

End :

சொல்லும் வெளிபொருளும் வெளிச்சுகமும் வெளி
யல்லும் பகலும் வெளியாச்சுதே—நல்ல
சுத்த பரமாய்ச் சுகத்திலழுந்திநாய்
நித்தம் பரனாய் நீயேசிவம் (70)

## 221. நெ. 136. நந்தீசர் பரிவாசி.

(ஏடுகள் 10 ; பக்கத்திற்கு 6 வரிகள்)

இது இடகலை, பிங்கலை நாடிகளின் வழியே செய்ய

வேண்டிய சாதனைகளைப் பற்றியும், வாசி (ரேசக, பூரக) யோக மார்க்கங்களையும் கூறும் நூல்

Beginning :

அரிமேலாய் நின்றசோதி ஆதாரச் சொரூபமாகிப்
பரிதனை வாசியாலே வருவத்தில் ரூபமாகி
நெறிதனைத் தவருநீதி நேர்மையாய் பணிந்துபோற்றி
உறிமுந்தி லோகமெல்லா முமைபாகன் பறிசெய்த
உண்மையை உரைசெய்வேனே (1)

End :

உன்னைநீ யுத்துப்பார்த்தால் ஓங்காரப் பொருந்
தோணும்
தன்னைநீ தாழ்ந்து பார்த்தால் தாழ்பதி நாமந்
தோணு
மின்னையே தத்தஞ்செய்து மேலிதழ் வாசிபார்த்துக்
கண்ணனே மருகன் தந்தை கருத்துடன் வாசிவாசி

ஹரி : ஓம் : முற்றே.

யேகபரப்பிரும்மமே துணை. நந்தீஸ்வரன் துணை.

## 222. நெ. 137 புண்ணாக்குச் சித்தர் பாடல் (செயநீர்)

(ஏடுகள் 8; பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் ஜெயநீர் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. கல்லுப்புச் சுன்னம், துருசுச் சுன்னம், காந்தச் சத்து,

சாரச்சத்து (சத்வம்) குரு செய்யும் முறைகள் கூறப் பட்டுள்ளன. இதை யன்றி சடலத்தைப் பற்றியும், சிவனைப்பற்றிய விஷயங்களும் உள்ளன. பலவிடங் களில் பொருள் விளங்கவில்லை. தனது குரு நந்தீச்வரர் என்றும், தன்மகன் சட்டமுனி என்றும் கூறுகிறார்.

மொத்தம் 45 செய்யுட்கள் உள்ளன.

சிற்சில இடங்களில் செல்லரித்திருக்கிறது.

Beginning:

ஆதிமயமாம் அரனார் திருவருளால்
சோதிமயமாய் சோமன் தில்லையிலே
போதமயமாய் ..............பூரணமும்
நீதியறியாற் நிலவுப்புக் காலே........ (1)

End:

முப்பூவு முடிந்தபின் முதல்வனை சீவனடா
அப்பூவளர் போதிலே யடக்கலாஞ் சரக்கெலாம்
ஒப்பமான மண்டலத்தில் ஒடுக்கியதென் றூலப்பா
அப்பனே கருக்குரு இரண்டானவாறு சத்தியே, (45)

முற்றிற்று.

ருத்ரோத்காரி வருஷம் கார்த்திகை மாதம் 19௨ குருவாரம்,

# 223. நெ. 138. அகஸ்தியர் மகரிஷி அருளிச் செய்த காவியம் ஆயிரத்திற்குச் சுருக்கம் பதினறு.

(ஏடுகள் 4; பக்கத்திற்கு வரிகள் 7)

இதில் யோக சாதன முறைகள், அகஸ்தியர் புலஸ்தியருக்கு உபதேசம் செய்வதைப் போல் காண்கின்றன.

Beginning:

ஆதிமறை சாஸ்திரங்கள் பிறந்தவாறும்
அடிமுடியின் நடுவாகிப் பொருள் மூன்ருகி
வேதியனு மால்சிவனும் நின்றவாறும்
வேதமுட னகமங்கள் பிறந்தவாறுஞ்
சாதிபல தொழில் முறைக ளானவாறுந்
தன்னுள்ளே அஷ்டாங்கஞ் செய்யும்வாறும்
ஓதியநா லவரவர்கள் செய்தவாறும்
ஓம் மகாராசகண பதிகாப்பாமே. (1)

End:

காணப்பா காவியத்துக் காகவிந்தக்
கருப்பொருளைப் பதினருய்க் கருதிச்சொன் [னேன்
......ணப்பா யென்று சொல்லி யிந்தநூலை
வெளிவிட்டா லுங்களுக்கு யென்மேலாணை
..... மூக்காலும் ஆணையாணை
அறிந்துணர்ந்த ஞானிகளை யடுத்துச்சேரு

பானமப்பா உண்டிருந்தாள் பதத்தைப் போற்றி
பதினாறுஞ் சிவசூட்சுமப் பொருள்தான்
முற்றே. (16)

Colophon :

ஈசுவர வருஷம் சித்திரை மாதம் 24உ சுக்கிர வாரம்,

சிதம்பரம் ஏடு.

தட்சிணாமூர்த்தி துணை.

---

## 224. (b) அகஸ்தியர் மகாநாராயண பூரண சூத்திரம் பதினாறு

(ஏடுகள் 1 ; பக்கத்திற்கு 6 வரிகள் அபூர்த்தி)

இதில் மூப்பு தீட்சை மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. முழுவதும் இல்லை.

Beginning :

பூரணமாம் புங்கவந் தன்பாதம் போற்றி
புகழ்பெறவே சிவகாமி ஆத்தாள் பாதங்
காரணமா மறிவில்நின்று மனத்தைப் போற்றி
கந்தனுக்குக் கருணைபெறச் சிஷனாகி
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வல்லமையா யிந்நூலின் பொருளைக்காண
சீரணமாய்ப் போகாமல் தெளிந்து சொல்வேன்
சித்தர்பத மனதில்வைப்பா யொன்றுங்
காப்பே. (1)

End :

பெருமைதனைப் பாடிவிட்டார் சட்டைநாதர்
பிசகாமல் எள்ளளவும் தப்பில்லாமல்
அருமை யென்ற நூலதனைக் கிழித்தாரய்யோ
ஆகாகா திருமூலர் நாதர்களெல்லாம்
மூறமை.............................................................
............................................................ (4)

## 225. நெ. 139. வைத்தியத் திரட்டு

(ஏடுகள் 70 ; பக்கத்திற்கு 6 வரிகள்.)

இதில் சண்டமாருதச் செந்தூரம், இசிவுக்கு எண்ணெய், சிரங்கு மருந்துகள், வசிய மருந்துகள், இருமலுக்குப் புஷ்ப லேகியம், வெட்டைச் சூட்டிற்கு மருந்து, செம்பு களிம்பு போக்க, வெள்ளைப் பிரமேகத்திற்கு, ரஸம் கட்ட, மூலத்திற்குக் கஷாயம், நீரிழிவிற்கு மருந்து மேகம் 21-க்கும் மருந்து, சட்டநாதன் குழம்பு, சிலாஜித் பற்பம், சூட்டுக்கு மருந்து, வசிய மருந்துகள், மூலிகை சாபம் நீங்கச் சக்கரம், பாம்பு கட்ட மந்திரம், செம்பு தங்கமாக மருந்து, வங்கம் நீத்தமுறை, முட்டை ஊறிப் புதைக்க மந்திரம், வசிய மருந்து முறைகள், சூட்டுக்கும் புண்ணுக்கும் மருந்துகள், பிரமேகம், புண், சன்னிகளுக்கு மருந்து, தாதுபுஷ்டிக்கு மருந்து, கும்மட்டிக்காய் லேகியம், புண்ணுக்குக் களிம்பு, வெள்வங்க பற்பம், ரஸமணி செய்முறை, ரத்தக் கட்டிக்கு மருந்துகள், குன்மத்திற்கு

மருந்து, தாதுபுஷ்டி மருந்து, சூனியத்திற்கு மருந்து முதலான விஷயங்கள் அடங்கியிருக்கிறன.

Beginning ;

## ஆண் பெண்ணிற்குப் பிரிவு

பேச்சிப் பேச்சி பிணம் தின்னக்காளி சண்டாளி பத்திர காளி வீரமாகாளி அடக்கிப் பிரிந்து போகச் சிவா.

End

நல்லபாம்புத் தலையை யறுத்துத்தனக்குவேண்டினவளுடைய சிறுமண்ணெடுத்து அதனுடைய வாயில் போட்டுக் கன்னி நூத்த நூல் கொண்டு கெட்டிக் கயிறு முறுக்கிப் பாம்பு வாயில் கட்டி அவளுடைய வீட்டில் நடையில் புதைக்க பேயெடுக்கும்.

## இதற்கு மாத்து

கன்னியழியாத பெண் பிள்ளை நூத்த நூல், கடல் சத்தம் கேளாத எருக்கிலை நாரும் ஒக்கத் திரித்துச் சந்தம் பூசி, புகை காட்டி ஒரு ஈ பிடித்து ஊசியில் தொட்டி செவ்வாய் கிழமை மூஞ்சூரைப் பிடித்து அதனுடைய அவத்தியில் குத்தி வாங்கி வாசப்படியில் கீழே போட்டுக் 'அழியுதபமது அமைப்புக்கு யித்தா சுவை' யெழுதிக் கரைக் கொடுக்கக் கழியும். அவனைக் காண விட்டால் பேய் கொண்டபோல அவள். இது கைக் கண்டது. இதற்கு சக்கரம்.

## 226. *No.* 140. நந்திக்கும்மி.

(ஏடுகள் 39; ஏட்டிற்கு 7 முதல் 8 வரிகள்)

இதில் குருவின் உயர்வு, கடவுள் குணங்கள், குண்டலினி சக்தியை எழுப்பும் மார்க்கம் முதலானவைகள் கூறப்பட்டுள்ளன,

Beginning :

சத்தியடி மேல்மூல வாசியடி சதா
நந்தியின் மேல்கும்மிப் பாட்டுரைக்க
முத்தியுள்ள மூலவாசலடி நந்தி
மெஞ்ஞான உபதேசமடி
அத்திமுதலா யெறும்புகடை நந்தி
அறிவிலு நித்தபரஞ் சோதியடி
புத்தியுடன் போற்றி வாருங்கடி கணேசன்
பெற்பாத மென்னுளுங் காப்பாமே. (1)

End :

அறிவிலு நித்தவாதி நந்தி
அன்பாய்ப் போற்றி மலர்குவித்து
சீரறிந்து கும்மி பாடல்தான்
சிவசக்தி யுடைய தன்னருளால்
தீர்க்கமுடன் நான்சொல்லி வைத்தேன்
சென்றறிந்து கும்மிதீர்க்க முற்றேன்
தீர்க்கமுற்றே யான்சொல்லி வைத்தேன்
அன்ன செயலறிந்து கும்மிபாடல்முற்றே.

## 227. *No.* 141. திருமூலர் வர்க்கம் கடப்பிள்ளை ஏகாட்சரம் பூரணம் 37.

(ஏடுகள் 13 ; ஏட்டிற்கு 7 முதல் 8 வரிகள்)

இதில் 6 வெற்றேடுகளும் கோர்க்கப்பட்டுள்ளன.

இதில் யோகசம்மந்தமான மார்க்கங்கள், தியானம், சமாதி நிலை முதலியவைகளுடன், குருவின் மகிமை, விபூதியின் மகிமை, கௌன ரஸக்குளிகை செய்யும் முறை, அதனைத்தரித்தால் ஏற்படும் சித்திகள், அஷ்டாங்க யோக முறைகள் முதலானவைகள் கூறப்பட்டுள்ளன.

Beginning :

ஆதியென்ற சுழுமுனையைத் தியானம் பண்ணி
அதின்பிறகு அரிநமோநன் ருகவென்று
நீதியுடன் குருவாழ்க வென்றே சொல்லி
நிரஞ்சனமாஞ் சற்குருவே துணையென் றேதான்
சோதியென்ற கமலமடா அண்டத் தாதித்
துலங்குகின்ற தீபமதைத் தியானம்பண்ணி
ஓதியதோர் மந்திரத்திற் குயிராய் நின்ற
ஓநமோ கணபதிதன் பாதங்காப்பே. (1)

End :

பண்ணப்பா பூசைவிதி நன்ருய்ப்பாரு
பத்திகொண்டு தீட்சையிலே பதிவாய்நில்லு
நண்ணப்பா பட்சணியை நயந்துபாரு
நடுவான தண்டகம் நாடிப்பாரு

விண்ணப்பா தானோக்கி ஞானம்பாரு
மெய்யான வமிர்தபோ தத்தைப்பாரு
முன்னப்பா கண்ணொளி போல் வொண்ணேசூட்ச
மூத்தியே காட்சரபூ ரணந்தான் முற்றே (37)

## 228, *No.* 142. தத்துவ விளக்கம்.

(ஏடுகள் 4 ; ஏட்டிற்கு 4 வரிகள்)

இதில் புலவர் லெட்சணம், ஷடாதாரசக்ர நிருபணம், கடவுளைப் பணிந்தவர் அரசபதவியையும், அடைவர் என்று நந்தி திருமூலருக்குப் பிறவித் துன்பத்தைக் கடக்க உபதேசம் செய்தவாறு காணப்படுகிறது.

Beginning :

......................தெளிந்து கண்டோர்
அனுஷ்டான பூசைமந்திரம்........யுண்ணோர்
ரவெழுத்துகின்ற நிலைதெரிந்து கண்டோர்
ஒருவருடன் வாய்திறந்து பொருளே சொல்லார்
ஊவெழுத்து நின்றநிலை தெளிந்து கண்டோர்
உடலுயிரென் றேயறிந்து உண்ணமாட்டார்
சிவவெழுத்து நின்றநிலை தெளிந்து கண்டோர்
திருவாக்கால் சீயெனவு சொல்வாராதே (1)

End :

அருளது அவ்வும்உவ்வு மடிமுடியாகத் தோன்றும்
பொருளது நிற்குநேர்மை புகல்வது யெட்டெ
ழுத்துள்

மருவிடும் பாகமேலும் அரன்முடி யாகத்தோன்றும்
மிரு.............. ...................................

## 229. *No.* 142. (*b*) சதுரக் கோணமாலை.

(சங்கராச்சாரியர் பதினெட்டு)

இதில் யோகாப்யாஸ முறைகள் கூறப்பட்டிருக்கின்றன.

Beginning :

உத்ததலம் பெருந்துறைநா டென்னுந்தேசம்
உட்புகுந்து சங்குந்தி தீர்த்தமாகு
நித்தவள நாடெனுகி வைகுந்தமேவி
நெடியோனை யடிவணங்கி நினைவினாலே
கர்த்தனையு மந்திசந்தி யுச்சிமூன்று
காலமும்நீ பூசித்துக் கவலைதீர
பெத்தன்னையே நெஞ்சகமே யிந்தப்பேறு
பெற்றவர்க்குப் பிறவியுமுண் டெண்ணலாமோ. (1)

End :

தேடறிய திருமேனி யயனுமாலுந்
தேடியறி யாதபழம் பொருளைநீயுந்
தேடியறிந் தாடியகால் சிவந்தபாதந்
தெரிசித்து சதுர்க்கோண மாவ . ...த்தும்

பாடியிட்டாய் நெஞ்சகமே பத்துங்கத்துப்
படித்தோர்கள் பழவினைகள் ஒழிந்துமேலும்
பாடிவிட்டாய் சுயவாக்குப் பெறுவாரிந்நூல்
பயனறிகில் மெஞ்ஞானத் தலைவராமே. (11)

சதுர்கோணமாலை முற்றும்.

குரு கடாச்சமுண்டாக வேணும்.

## 230. நெ. 142. (c) நாதப் பத்து

(ஏடுகள் 3; பக்கத்திற்கு 7 வரிகள்)

வேதாந்த சாஸ்திரத்தை யனுசரித்து மெஞ்ஞானத்தை உணர்த்தும் நூலாக வுள்ளது. "அல்ல அல்ல" என்று கூறியிருப்பதை "உண்டு உண்டு" என்று கொள்ள வேண்டும்.

Beginning

பாரான நவ்வெழுத்து மவ்வெழுத்து மல்ல
பஞ்சறிவாய் நின்றுவினை யாடியதுமல்ல
நேரான சிவ்வெழுத்து மவ்வெ ழுத்து மல்ல
நெறியான கருவிகர ணாதிகளுமல்ல
சீரான யவ்வெழுத்து ஒவ்வெழுத்துமல்ல
சிறந்தசிதம் பரத்தமர்ந்த சிவனுதவிந்து
பேரான வெளியேகி யுடல்புகுந்து நின்று
பேசிவிடும் பெருமைதனைப் பிரித்தறிகுவீரே. (1)

End:

நாசிநுனி நடுவெழுந்தக் கூத்தைக் கண்டோர்
நாதவிந்தின் செயலறிந்து பொருளைச் சொல்வோர்
பாசியெனு மூலமலத் திருந்தோ ரெல்லாம்
பாட்டிலிட்டத் தத்துவங்கள் தொண்ணூத்தாறும்
பேசிவிஷத் திடுவாரிந்த நாதப்பத்தை
பிரியமு டனெழுதிக் கத்திட்டோர்கள்
காசினியால் மெஞ்ஞானத் தலைவராகி
காலனையும் வென்றுகைலா சமடைவாரே. (11)

நாதபத்து முத்தும்.

குரு கடாச்சமுண்டாகவேணும்.

## 231. நெ. 122. (*d*) ஞானத் தாழிசை.

(ஏடுகள் 4; பக்கத்திற்கு 7 வரிகள்)

வேதாந்த தத்துவங்களடங்கியுள்ளது. பிறவிப் பிணியைப் போக்குவதற்கான யோகசாதனைகளைக் கூறும் நூல்.

Beginning:

சுழியாகிய முனைகண்டபின் உத்தாருர வத்தார்
சூதும்பல பொய்பேசிய தொழிலும் பிறர்க்கிட்டாய்
வழியாகிய துறைகண்டபின் அனுஷ்டானமு மத்தாய்
வழங்கும்பல நூல்சாஸ்திரம் நினைவும்பிறக்கிட்டாய்

விழியாகிய மலர்கண்டபின் உயரர்ச்சனை யற்றாய்
மெய்நீரிடுந் திருமந்திரம் விட்டாய்சிவ மூத்தாய்
அழியாப்பதங் குடியேறிய பின்னச்சமு மத்தாய்
ஆரொப்பவ ரிணையத்தனை யளவத்தனை மனமே. (1)

End:

வருவானது விந்துஞ்செய லருவானது நாதம்
உடலுக்குயி ரானதொடு நாலங்குல முதலும்
குருவானது முனைமீதினில் அறிவாகிய வெளியில்
குடியாகியபதி கண்டனனருள் வாசகனூரி
டிரிவாகன புவிமீதினில் மகிழ்ந்தே யுரைசெய்த
தமிழ்த்தாழிசை நெறியும்பாடி நின்றோர்
கருவாசலை யணுகாமலே பெறுவார் நெறிபெறுவார்
கடவுள்செய லறியாதவர் கருவாசலைப்புகுவார். (11)

ஞானத்தாழிசை முற்றும்.

## 232. நெ. 143. வாதம் முப்பத்தொன்று.

(ஏடுகள் 9 ; பக்கத்திற்குச் சராசரி 6 வரிகள்)

இதில் ரஸக்கட்டு, நாகப்பற்பம் முதலியவைகளுடன் ரஸவேதைக்கான முப்பு முறைகளும் உள்ளன. பரிபாஷையாகக் கூறப்பட்டிருக்கிறது.

Beginning:

மூவாயிரத்தில் முழுப்பாடல் மூந்நூறு
பாவாயுரைத்த நொண்டிபாடல்—மூவான
முப்புவின் பாடலென முக்கியமுடன் வாதவித்தை
முப்பதோ டொன்ருய் மொழி

End:

ஊதுபற்பம் வெள்ளியிலே வொன்பதனை தப்பாது
நீதியடி பூரணத்தில் நேருவாய்—பாதமது
சித்தியாந் தேகமது சீர்முதல் கொள்வாத
முத்தியா முப்பதொன்றே வாதமுன்

குரு பாதம் துணை

பூரணம். வடிவேல் துணை

## 233. நெ. 144. உத்தர கீதை.

(ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ஜுனனுக்கு அருளியது)

(ஏடுகள் 47; பக்கத்திற்கு 7 வரிகள்)

இது பகவத்கீதையை 3 அத்யாயங்களில் விளக்கும் நூல்.

இதில் வாயுத்திராணை லட்சணம், சமாதி லட்சணம், த்ாரணு விசேஷம், ஜீவன் லக்ஷணம், ஜீவன் முக்தநிலை, குண்டலியின் சக்திகளை எழுப்பும் முறைகளையும், இடா, பிங்களா, முதலான நாடிகளின் கதிகளையும், கர்ம யோக, ஞான யோக மார்க்கங்களையும் விளக்குகிருர்,

Beginning :

ஐவகைப் பொருளும் நான்கு கரணமுங் குணங்கள்
மூன்றுஞ்
செய்வினை ரெண்டுமொன்றி யாவருந் திகைப்ப
நின்ற
பொய்யிருளகல ஞானப் பொருள் கதிர் விதித்த்
புத்தேள்
கைவளராழிச் செங்கட்கண்ணனைக் கண்ணுள்
வைப்பாய். (1)

End :

யோகியானவன் மோட்சத்தை எவன் அகாலஞ் சிந்திக்கிருனே அவனுக்குத் தேகம் சம்ரக்ஷணார்த்தம் பிட்சான்னஞ் சித்திக்குமே யல்லாமல், இந்திரியங்கள் பலக்க வேண்டியல்ல, சீதநிவாரணமாக வஸ்திரங் தரிக்கிறதே யல்லாமல் அலங்கார நிமித்தமல்ல; அவருக்குப் பொன்னும் ஓடுஞ்சரி; விருந்தும், கீரையுங் சரி உண்ட அன்னமுஞ்சரி; போகவஸ்துக்கள் வந்ததினுலே சந்தோஷ மில்லை; வராததினுலே விசனமுமில்லை இப்படிக்கொத்த யோகீசுவரனே சீவன் முக்தன்.

இந்த உத்தரகீதை யென்ற 3 அத்தியாயமும் எவன் மனனம் பண்ணி அனுபவித்துக் கொள்ளுகிருனே அவனுடனே கிருதார்த்தனுய் சீவன் முக்தவனுவான். சித்தம் - மூன்று மத்யாயம் முற்றும்.

ஆதிபராபரத்தய்யனே உத்தனே திவ்ய திருவடித் தாமரைகளே துணை - உத்தர கீதை சம்பூர்ணம் முத்தும்.

## 234. 145 நெ. ரோமரிஷி பதினாறு.

(ஏடுகள் 5; வரிகள் 6)

முப்புமுடிக்கும் மார்க்கங்களைக் கூறும் இந்நூல் 16 செய்யுட்களாலானது. பரிபாஷையாக வுள்ளது. பொருள் விளங்கவில்லை. எழுத்துப் பிழைகளும் மலிந்துள்ளன.

Beginning:

மூலதா ரப்பொருளே மூர்த்திகாப்பு
முப்பாழும் பாழான மூர்த்திகாப்பு
.............வளராயி பாதம்
வேண்டிக்கொண் டேன்னும் விழியாச் சொன்
பாலான நூலதிலே சிங்கி [னேன்
...........னே வைத்தியமும் வாதத்தோடே (1)

End:

மணிபூர விறமல் லோக சாசாரம்
மன்னவனுமங்கே....... .......
கேணியாரோ சாந்தமறிந்த பெரியோ
கணேசனுட பட்டணத்தின் கேடிதாமோ
உனக்கு சிலுசிலுப்பேர் பசியமந்தால்
பலனுக்குப் பலித்திடாதோ
வனிகண்டாப் போலே மக்களே
பதினாறு வன்னி முற்றே.

பரிபூரணம் துணை செய்யும்.

# 235. நெ. 146. பலதிரட்டு

(ஏடுகள் 3; ஏட்டின் பக்கத்திற்கு 9 வரிகள்)

இதிலுள்ள 3 ஏடுகளும் தனித் தனியானவை வேறொரு சுவடியிலிருந்தெடுத்துக் கோர்க்கப்பட்டுள்ளன. ரஸபற்பம், வெள்ளீய பற்பம், தாமிரச் செந்தூரம் முதலானவைகள் உள்ள கடைசி ஏடு செய்யுள் ரூபமாக உள்ளது.

Beginning:

ரஸத்தைப் பனமட்டைச்சாறு விட்டுக் குழியம்மியில் நன்றாயரைத்து வில்லையாகப் பண்ணி கிளிஞ்சட்டியில் வைத்து மேலும் கிளிஞ்சட்டி கொண்டு மூடிச் சீலைமண் செய்து குக்குட புடம் போடப் பற்பமாம். எடுத்து வைத்துக் கொண்டு வியாதிக் கேற்ற அனுபானத்தில் ஒரு பணவெடை சாப்பிடவும்.

பந்தியம்:

புளி, புகையிலை விடவும்'

End:

சொல்லுவதாய் பத்தற் சேற்று போட
துணிந்திந்தின பரின் ....... தைப்போல்
வெல்வது போல் புலித்தோலை வரித்துக் கொள்வன்
..........சாதிலிட்டு வெரும் பிலுக்குச்

சொல்லிகல பணத் தோறதனைக் கூரைத்து
யுதாசீ...... டாக மளப்பமென்று யலைவான்
செல்வதொரு சிவஞானக் கருவை ...... [நாய்போல்
கோறுன தெருதோரும் காய்போலத் திரி
வான்பாரே. (19)

## 236. நெ. 147. பரிபாஷை ஐம்பது.

(ஏடுகள் 19; பக்கத்திற்குச் சராசரி 5 வரிகள்)

இதில் 4 முதல் 19 ஏடுகள்வரையுள்ளன. முதல் 3 ஏடுகள் காணப்படவில்லை, காசிக்குத் தெற்கில் பூமி நாதம் விளைகின்றது. அதனை எடுக்கும் விவரம் உள்ளது. ரஸக்குளிகை செய்யும் விதம், செயநீர் செய்யும் விதம். முதலானவைகளுள்ளன.

இதன் நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை ஆகவே இதற்குப் பரிபாஷை 50 என்றே பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது,

Beginning:

பாலாகும் பழமாகும் சீனியாகும்
பனவெல்ல மானாலும் பத்தவேனும்
மேலான பச்சரிசி சிறுப யறுமாகு
மிளகுசீ ரகமாமே வெந்நீராகும்
மாலாக யிப்படியே வாங்கியுண்டு
மாண்டிறந்து போனவர்கள் கோடாகோடி

காலான மௌனமதை யடுத்தபேர்கள்
கருத்தையெவ ரறிவார்கள் கடினந்தானே (1)

End :

உள்ளபடி சொல்லுகிறே னிந்தநூலால்
உத்தமனே துருசுவெள்ளை யாகும்பாரு
வெள்ளையென்ற சுன்னத்தால் ரஸத்தைநீத்தி
மேலான பரித்தகட்டில் பூசிப்பாரு
கள்ளமிலாச் செந்தூரம் சுண்ணம்பாச்சு
கதிரான தாம்பிரத்தில் கொடுக்கச்சொன்
பிள்ளைகளே யிதையெடுத்து வெள்ளிக்கீய [ஞேம்
பிழைப்பதற்கு வழியுண்டாம் பேசில்முத்தே.
(51)

## 237. நே. 148. ஊர்வசி ரத்னச் சுருக்கம்.

(ஏடுகள் 7 ; பக்கத்திற்கு 5 வரிகள் )

இதில் சீவ, பிர்ம்ம விளக்கம், முப்பு முறைகள், குண்டலினி யோகம் முதலானவை கூறப்பட்டுள்ளன.

Beginning

ஏகமாகி யிருந்த பராபரம்
தேக சிவசை தன்னிய சிகாறணை
யோகவாக நினைக்கு மூர்வசி
தொகையான சொலுரத்னச் சுருக்கமே.

End :

இதியின விலாசமிவையான சகப்பொலிவும்
பேதகமாய் தாயிரங்கி பேசுவது முண்டோ

சாதிபல வானவர்பாற் சேகரமிதென்றே
நீதிமொழியான பதினெட்டுமிவை முற்றே.

## 238. நெ. 149. அழுகண்ணிச்சித்தர் பாடல்.

(மூப்புச் சுன்னம்)

(ஏட்டின் ஒரு பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் மூப்பு வைக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன பல இடங்களில் பொருள் விளங்கவில்லை.

Beginning :

மேகத்தால் விந்தாச்சு ஆத்தாளே
விரைரவியால் சுண்ணும்பாய்
ஆகச்சிறுநீரு லாத்தாளே
அஷ்ட சுத்தியாவள் சத்தி. (1)

இரவிமுகத் தாலே யாத்தாள்
யீசனென் றுப்பாச்சு
வருகெங்கை தன்னுலாத்தாளே
டயமாகச் சுத்திசெய்தே (2)

முந்தினவுப் பிரண்டு மாத்தாளே
முழுக்கல்லுப் பொன்றும்
தொந்திக்கையி லவ்விடைக் காத்தாளே
சூழ்சினங் காற்சேர்த்து (3)

End :

சித்திபெற்ற கற்பமிதா மாத்தாளே
தேவவர்ஷமதில்
அத்தியின் றன்பிலமா மாத்தாளே.
ஆயிரமாம் வயது (55)

உத்தமற்குச் சொன்னே னத்தாளே
உசரவெளி கண்டதெல்லாம்
பத்தியுள்ள பத்தர்களுக் காத்தாளே
பதிக்கும் பரம்கண்டாயே. (56)

அழுகண்ணிச்சித்தர் பாடல் முத்தும்.

Colophon :

கடைசி ஏட்டில் பாஷாணக்கட்டு முறை எழுதப் பட்டிருக்கிறது.

---

## 239. நெ. 150 (*a*) மனோன்மணி

(ஏடுகள் 8 ; பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் லிங்கமெழுகு, நாகமெழுகு,சூதபஸ்பம், சூதக் கட்டு, அரிதாரக் கட்டு, வெள்ளை கௌரி மெழுகு அயச் செம்பு செய்யுமுறை, செம்பில் களிம்பை நீக்கும் முறை, வங்க செந்தூரம் முதலியவைகள் உள்ளன

Beginning :

லிங்கம் உருக்கி மெழுகு பண்ணுகிற முறை. குடு கட்டிப்பூண்டுச் சாத்தில் 12 ஜாமம் சுருக்குக்கொடுத்

துக் கரியிலே வைத்து வெங்காரம்கொடுத்து உருக்கினல் உருகி ஆடும். மெழுகாகும் விதம்.

End :

சக்கரம் மூன்றிடத்திற்கு.

பித்தளையும் நல்லது வேணும்.

| | |
|---|---|
| வெள்ளீயம் | கழஞ்சு |
| ரசம் சுத்தி | ,, |
| செம்பு ராவினபொடி | ,, |
| உறுப்பியால் வெள்ளி | ,, |
| தலையீற்றுமாட்டின் சாணி | ,, |
| எலுமிச்சம்பழம் | 50 |
| நெருஞ்சிச்சாறு | |
| ஆடுதீண்டாப்பாளை | |
| வேப்பஞ்சிராய் | |
| நடைவாலெருந்துச்சாறு | |
| குக்குடத்தலைச்சாறு | |
| முலைமுதல் விடவும் | |
| கூகை நீர் | கழஞ்ச் |
| ஆட்டுச்செவிச் சாறு | |

சற்குருபாதம் துணை,

## 240. நெ. 150. (b) பிண்ட வழலை கழற்றல்.

(ஏடுகள் 3 ; பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் 6 ஆதாரங்களைப்பற்றிய விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பரியாசையாக உள்ளது.

Beginning :

*வாகான காயம் வளமாய் நிறுத்திட*
*வாகான நூலத்திற் பாத்திடு நாற்கோணம்*
*தாகா நடுணமயக் தானுறு முக்கோணம்*
*நாதாஞ் சுழியினில் நந்தியா மிலிங்கமே.* (1)

End :

*மயக்கி யிழுப்பாரும் வாய்க்கு ருசிதப்புந்*
*தயக்கிய பெண்மேற் றன்மோக மாசைபோந்*
*துயக்கித் துயர்காணுஞ் சொல்சுழி மேல்விழுந்*
*தயக்கிக் கபாடந் தானே திறக்குமே.* (16)

வழுவிலை கழற்றல் முற்றும்

கற்பகவிநாயகர் துணை.

## 241. நெ. 150. (c) ஞானவெட்டியான் கதை.

(*ஏடுகள் 7 ; பக்கத்திற்கு 6 வரிகள்*)

*இதில் ஷட் சக்கிர நிருபணம், ப்ரும்ம, க்ஷத்திரிய குலத்தின் விளக்கம், கருப்பையில் தேகம் வளரும் விதம் முதலான விஷயங்கள் உள்ளன.*

Beginning :

*இருளதனை அறுத்த சித்தர் நாதர்கள் பாதம் போத்தி*
*திருமேனி அகண்ட..........செகநாத ரருளினாலே*
*விருவிலை நன்னூல் ஞானவெட்டியான்............ய்படா*
*கருவினில் உமையாள் மைந்தன் கணபதிக் காப்புமாமே*

End :

சாதியிற் பெரியவர்காண் சங்கப்
பலகைமே லிருந்தவன் காண்
வேதியர் சாஸ்திரியர் தொழுக
வீம்புபெத்த சாம்பு வன்னனே. (20)

அந்தணர் வேதியர் களென்னை
யசட்டுப் புலையனென்று தள்ளினர்கள்
சத்தியுஞ் சடங்கறுந்த வென்னைச்
சாம்புவ மூர்த்தியென் றேதொழுவார். (28)

## 242. நெ. 151. வாகடத்திரட்டு.

(ஏடுகள் 70.)

பலநீள அகலமுள்ள ஓலைகள் சேர்ந்தது மிகச் சிதிலமானது. ஏடுகள் ஒரே சீராக இல்லை.

இதில் வீரவைப்பு தன்னைக்கட்டு மந்திரம், கோவிந்தபுரம் வேலப்ப முதலியார் சொன்ன காந்தச் செந்தூரம், ரசகர்ப்பூர வைப்பு, குங்கிலிய வெண்ணெய் காரைக்கால் வைத்திலிங்கம்பிள்ளை முறை, வங்கபற்பம் தாமிர நீறு, திருவடமருதூர் கண்ணுசாமி சொன்ன சாரமெழுகு, பல்வலி மருந்து, ரலக்கிண்ணிஎட்டி விதை பாகம், தேளுகொட்டியதற்கு மேலேபூச, திருமூலர் கெந்தகத் தைலம், அருணாசலம், கோபாலஸ்வாமி சொன்ன முறை, புத்திர சஞ்சீவீ எண்ணெய், சண்ட மாருதச்செந்தூரம், வைத்திய சாஸ்திரம், சோதிஷம் முதலானவைகளின் சுவடி அட்டவணை.

முதலானவை உள்ளன.

## 243. நெ. 152. குதிரை வாகடம்.

(ஏடுகள் 61 ; பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் குதிரைகளுக்கு உண்டாகும் பிணிகளின் குறிகுணங்களும் மருந்து முறைகளும் கூறப்பட்டுள்ளன.

Beginning :

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பதத்தைத்
தப்பாமல் சார்வார் தமக்கு.

அத்திமுகத்
துத்தமனை
நித்தம்நினை
சித்தமே. (21)

மட்டி யிரண்டுந் தலைமுகத்திலே
மருவுஞ் சுழிகளொரு மூன்றுங்
கட்டுங் கண்மே லிரண்டாகு
மகடி பவுரத்தி லிரண்டாகும்
தொட்டதுடையி லிரண்டுடனே
சுழிகள் பத்தும் வருமாகில்
வெட்டு முனையில் சயந்தானும்
விளங்கி வாழ்வு மிகுத்திடுமே. (1)

ஏடு 22.

## ஏகாந்த நூலே குணம்.

*மரத்தைக் கடிக்கும், தன்னுடைய சரீரத்தைக் கடிக்கும், தவசம் புல்லுதின்றது, தண்ணீர் குடியாது,*

**இதற்கு மருந்து:**

*புலிமாங்கிஷம், சதுரக்கள்ளிப்பால், கேழ்வரகு, சிவனர் வேம்பு பொடி நாழி.*

| | |
|---|---|
| *வெள்வெங்காயம்* | *பலம் பத்து* |
| *பெருங்காயம்* | *ஒன்று* |

*இவை சேரக்கூட்டி யிடித்து முன் சொன்ன மாங்கிசச் சாத்தில் கூட்டி கத்திரிக்கவும். அரிசிபடி இரண்டு பால் படி நாலு, புண்ணுக்குப் படி இரண்டு, பயறு படி ஒன்று, கச்சல்க் கருவாடு படி ஒன்று ஆக இவை சேரப் பாலுடனே போட்டு வேக வைத்து உள்ளுக்கு மேய்க்கவும்.*

*ஆமணக் கெண்ணெயும், நல்லெண்ணெயும், நெய்யும் சரிபாகமாய்க் கூட்டி ..... லுட தலைமாத்திரமாய் நனைக்க நோவு தீரும்.*

*தண்ணீர் காய்ச்சி வற்றிக் கொடுக்கவும்,*

End :

*கடைசீ ஏடு பாதி முறிந்துள்ளது,*

Colophon :

*இச்சுவடியின் முதல் ஏட்டில் ஏசு மேரியே துணை. என்று உள்ளது.*

| | |
|---|---|
| துகட்டரிதாரம் | பலம் ½ |
| சாதிலிங்கம் | பலம் ½ |
| ரசம் | பலம் 1 |
| வங்கம் | பலம் 1 |
| நெல்லிக்காய் கந்தகம் | பலம் 2 |
| துருசி | பலம் 1 |
| நாலாங்காய்ச்சி வெடியுப்பு | பலம் 5 |
| | ஆக பலம் 10 |

இந்தப்படி மூலிகை முந்திரம் செய்யப் பக்குவமாகும் என்று காணப்படுகிறது,

## 244. நெ. 153. பின்னர் சேரக்கூடியது

## 245. நெ. 154. வாதம் எண்பதற்கும் எண்ணெய்

(ஏடுகள் 122 ; பக்கத்திற்கு 9 வரிகள்)

இதில் வாதம் முதலான வியாதிகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கும் எண்ணெய் வகைகளும், வெளிப்பிரயோகத்திற்கான எணணெய் வகைளும் கூறப்பட்டுள்ளன. இதில் காணப்படும் சில முறைகளாவன, கன்னை எண்ணெய், குமரித்தைலம், சந்நித் தைலம், மாந்த எண்ணெய், மேக வெட்டை எண்ணெய், கெர்ப்ப வாயு எண்ணெய், மயூர்சிகை எண்ணெய் என்பன.

Beginning :

வாதம் 80-க்கும் எண்ணெய்,

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | வராகனெடை | 3 |
| மனோசிலை | ,, | 2 |
| பொன்னரிதாரம் | ,, | 2 |
| துத்தம் | ,, | 4 |
| நெல்லிக்காய் கெந்தகம் | ,, | 2 |
| அதிவிடயம் | ,, | 2 |
| பச்சைக்கற்பூரம் | ,, | 1 |
| அபினி | ,, | 2 |

இதுவெல்லாம் நேகவரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிச் சிவந்த பதத்திலிறக்கி வைத்துக் கொள்ளவும். 25 நாட்கள் ஒரு கரண்டி அந்தியிலும் விடிந்தும் கொள்ளவும். கார்ப்பு, புளிப்புத் தவிரவும், மேனுக்குத்துவலை யிடவும். தலைக்கும் தேய்த்து முழுகவும்,

End :

பிள்ளை தோஷத்திற்கு.

பூவரசுவேர் வடக்கே போகிற வேரும், ஒரு நத்தையும், குளத்தில் நண்டும். உள்ளி, செம்பு கூட்டி நறுக்கி எண்ணெய் விட்டு வெயிலில் வைத்து எரித்து உச்சந் தலையில் மத்தித்து விடவும். வயிறு கழிந்தால் உள்ளே காசெடை கொடுக்கவும். பிள்ளை தோஷம் தீரும்.

## 246. நெ. 155. (a) சல்லிய நூல்.

(ஏடுகள் 31; பக்கத்திற்கு 5 வரிகள்)

பற்பல வசியம், மோகனம், கர்மகாண்டம், உச்சாடன முறைகள், சித்திகளுக்கான முறைகள் முதலானவைகள் கூறப்பட்டுள்ளன. மாந்திரீக முறைகளும் உள்ளன.

Beginning:

ஆதியாம் மாந்திரீக மாயனுன் முனிவர் தம்மில்
நீதிசேர் சல்லியனென்போன் நிலத்தினில் செய்தநூலை
தீதறு தமிழினலே செப்பவே புழைக்கையான் தன்
சோதிசேர் செம்பொற் பாதஞ்சூடினேன் சென்னிமீதே (1)

செப்பிய வெத்தினுலுஞ் சிறந்த மந்திரத்தினுலு
மொப்புறு கருவினுலு முரைக்கின்ற கன்மமெட்டுந்
தப்பிலாமுனிவன் வாகாற் சாற்றிய விதிவழியா
லிப்புவியறிய வேண்டி யியம்பினேன் தமிழினலே. (2)

End:

ஓரொரு கருமங்கற்றோ ருலகெல்லாந் தானுய்நிற்கும்
பாரொரு கருமங்கற்றோ ருயர்ந்த தோர்பெரியோராகப்

ரோரொரு மருமங்கற் றேருறு நரகத்தில்வீழ்வ
ரோரொரு கருமந்தானே உயர்குரு
வருளேவேணும். (99)

குருவருளாலே சல்லியன் கூறிய
தொழில்களெல்லாம்
குருவருளாலே கண்டு குறிப்புடனறிய வேணுங்
குருவருள் தானேதெய்வம் குருவருள் தானேமுத்தி
குருவிரு பாதங்கண்டு கொண்டேனென்
சென்னிமீதே. (100)

முகிந்தது முத்தும்.

Colophon':

33-வது ஏட்டிலும் 34-வது ஏட்டிலும் மந்திரத்துடன் யந்திரம் வரையப்பட்டிருக்கிறது.

## 247. 156 நெ. (b) ஓட்டிய நூல்.

ஏடுகள் 10. (35 முதல் 45 வரை)

ஒருபக்கத்திற்கு 6 வரிகள்.

இதில் வசியம், மோகனம், ஸ்தம்பனம், உச்சாடனம், பேதனம், மாரணம் முதலானவைகளுக்கான மந்திரங்கள், தந்திரங்கள், யந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

Beginning :

சீரணி கொன்றைசூடுஞ் செஞ்சடை யுடையான்
பங்கில்
காரணி கௌரிமுக்கண் ணுயகி புவனம் பெற்ற
காரணி யுமையாள் சோதிக் கருமங்கள்
தாஞயகிற்கும்
பூரணி பெற்றவானை முகவனை போத்தி செய்வாம். (1)

செய்யதோர் வசியமோகந் தம்பனந்
தேசந்தன்னில்
வெய்யவுச் சாடனங்கள் மிகுந்த வெடனைகருணை
வையகம் பேதனங்கள் மாரணங் கன்மத்தோடு
தையலீ ரொன்றுக்கொன்று சாத்திய
மந்திரங்கள். (2)

மந்திர முந்நூலாய்ந்து வழங்கின னெட்டியனென்
போன்
தந்திரங் கருவும் பின்னைசாற்றிய வெழுத்துஞ்
செய்ய
பந்தபின் மனத்தினுற்குப் பகர்ந்தனங் கரு
மந்தோறு
மிந்தனூ லொட்டிய மென்ன யாவரு மியம்பலாமே. (3)

End :

பூசைவிதி :

சந்தனஞ் சிவந்தபுட்பஞ் சாம்பிராணி
செவ்வாது குக்கில்
மூந்திய மதுமாங்கிஷங்கள் முறைறிறை
படைத்துச் சக்கரம்

விந்தையாய் வரைந்து கொண்டு விளம்புரு
லட்சந்தன்னை
வந்தவன் முன்னே நிற்பாள் மகத்தான
கர்மந்தோறும். (28)

கருவன்றி மந்திரமில்லைக் கருது மந்திரத்தையன்றி
யொருகரு வுலகத்தில்லை யுரைக்கு
மோரெழுத்துமில்லை
வரைவது சக்கரமன்றி வழங்கிய கருமமில்லைத்
திருவருள் தேவியன்றிச் செகத்தினிற்
தெய்வமில்லை. (29)

இல்லமும் பிறமுமாகி யெங்குமாய் நின்றதேவி
சொல்லிய கருமமாறுஞ் சூத்திரமாட்டுந் தேவி
யெல்லம்மையான தேவி யிகத்தினற்
கைகண்டவித்தை
புல்லியக் கட்டையொன்றிற் புதுவுருச்செய்ய
வேண்டும். (30)

## 248. நெ. 155. (c) இலக்கினபாவ பலன்.

(ஏடுகள் 46 முதல் 52 வரை ; 7 ஏடுகள் பக்கத்திற்கு 6 வரிகள்.)

இதில் ஒவ்வொரு லக்னத்தில் ஜனித்தவர்களுக்கு ஏற்படும் பலன்களை அறிவிக்கும் சோதிட நூல். நான்கான் பாவபலன் வரை காணப்படுகிறது. அபூர்த்தி.

Beginning :

இலக்கின முதயங்கீர்த்தி மூர்த்திமா னென்பதாகும்
இலக்கினத் ததிபனுட்சி யுட்சநட்பேறி நிற்க
யிலக்கினத் ததிபன்றன்ருேன் கேந்திரத்திரி
கோணமெய்த
இலக்கினங் கன்னையந்த வதிபனையெழிற்கோள்
நோக்க. (1)

கீர்த்தி மென்பாடு முண்டாங் கிளர்வலியுடைய
னுவன்
வார்த்தையில் வழக்கில் யாரும் மதித்திட
வல்லனுவான்
பார்த்திபர் போற்ற வாழ்வான் பண்பின்ன
பலவானுவன்
தோத்திரப் பிரியனுவன் துலங்கிய வடிவனுமே. (2)

* * * * *

மூன்றுடன் பிறப்பு வெற்றி மூன்றுபசயங் கா
தென்ப
மூன்றினுக்கதிபன் செவ்வாய் மூள்நட் பாட்சி யுச்சம்
மூன்றினுக்கதிபன் செவ்வாய் கேந்திரந்
திரிகோண முற்ற
மூன்றினையதிபன் றன்னை முரனேடு நற்கோள்
நோக்க. (16)

* * * * *

End :

பூமித்தானக்கோள் செவ்வாய் பொருந்தநட்
பாட்சியுச்சம்
பூமித்தானக்கோள் செவ்வாய் கேந்திரந்
திரிகோணம்பூணப்

பூமித்தானக்கோள் செவ்வாய் லக்கினப்புணர்
நட்பாகப்

பூமித்தானத்தைச் செவ்வாய் பொருந்தி
நற்கோட்கள் நோக்க. (25)

பூமிதானவர் கட் கெய்துப் பொசிப்........

குறிப்பு:

இச்சுவடியில் நான்காம் பாவ பலனுக்குமேல் ஏடுகள் காணப்படவில்லை. ஆகவே அபூர்த்தி.

## 249. நெ. 156. (a) திரவங்களின் பேதங்களும் குணமும்.

(6 ஏடுகள்; ஓலைக்கு 8 வரிகள்)

குறிப்பு:

இந்த சுவடியின் முன் பாகம் காணப்படவில்லை. 47-வது செய்யுளிலிருந்து 99 செய்யுட்கள் வரை தொடர்ச்சியாகவுள்ளது.

இதில் காடிநீர், தேத்தண்ணீர், கழுவுத்தண்ணீர், ஆகாசத்தாமரைநீர், தாமரைத்தடாகம், அல்லித்தடாகம், செங்கழுநீர் தடாகம், ஆம்பல்நீர், நெய்தல்நீர்—கோரைநீர், செம்பங்கோரைநீர் வாழைக்கிழங்குநீர் தாழை மடல்நீர், அன்னபேதித் தண்ணீர்—வழலைத் தண்ணீர்—மாங்கிஷபேதித் தண்ணீர், மூங்கில்வளைத் தண்ணீர்—சோனைநீர் – தூவானநீர்-கூறைவாரத் தண்ணீர், ஓட்டுக்கூறைத் தண்ணீர்—காரைக்கூறைவாரத்

தண்ணீர் — பழங்கூறைநீர் — கட்டுக்குழி, சுண்ணும்புக் குழி — சாணிக்குழி — கட்டக்குழி இவற்றில் தேங்கிய நீரின் குணங்கள், சிறுநீர் — புழுத்தநீர் — கண்ணீர் — வியர்வைநீர் — அப்யங்கநீர் — வெந்நீர்.

முதலான திரவங்களின் குணங்களைக்கூறும் நூல் கடைசி இரு ஏடுகளில் வாதரோகங்கள், கிராணி க்ஷய வகைகள் போன்ற பற்பல வியாதிகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

Beginning :

............கூட்டி
காலமாங் கோடைக்குன்னறைகண்டு வெந்நீரோடு
சாலநெய் கூட்டியுண்ணத்தாகம்போஞ் சாறு
மின்பம். (46)

## காடிநீர்

சத்தியும் விக்கல்தாகந் தணிவில்லா அஸ்திச்சூடும்
பத்திய கிருகிருப்பும் பகரொண்ணு வுழலைதானு
முத்திய வரோசிகங்கள் முடுகியசயித் தியத்தோ
டேத்திடும் கிராணியெல்லா மேகிடுங் காடிநீரே.
(47)

* * * * *

## வாழைக்கிடங்குநீர்

கோழையும் பெருகுஞ்சாலக் குணங்களாம்
விரோதமாகும்
தாழைநீர்பித்தம் போக்குந் தாதுவும் மந்தமாகும்
வாழையின் கிடங்குநீரை வளமுடன்
கொண்டபேர்க்கு
மூளையில் சார்ந்தசூடு முடுகிடும் புவியுள்ளோரே.
(66)

End :

**வெந்நீர்**

நவசுரம் போகுங்காசம் நசிக்கும் பீனிசமும் வாதந்
தவனம் போமந்தம் பேதி தலைவலி சுவாசகாசம்
பலபல நீர்க்கட்டேகும் பறந்திடுங் குன்மஞ்சூலை
உவமிலாத் திரிதோடங்க ளோட்டும் வெந்நீரைக்
கொள்ளே
(99)

பித்தமும் வாயுவும் பாரு

## 250. நெ. 157. வைத்திய சிந்தாமணி.

(தன்வந்திரி பகவான் அருளியது.)

(ஏடுகள் 13. பக்கத்திற்கு 8 வரிகள்.)

இதில் அஷ்டவித பரீட்சை, நோய் பரீட்சை, நாடி நடைகளின் பேதம், வசனலெட்சணம், நேத்திர லட்சணம், மலம், மூத்திரம், நாக்கு முதலான அஷ்டஸ்தான லக்ஷணங்கள், அசீர்ண நிதானம், சுரநிதானம் 7 வகை, தாதுகத சுரம் – சந்நிவாத சுரம், 13 வகை சந்நிகள். சந்நிக்கு நாளறிதல் – விஷம சந்நிதோஷம் – சிம்மி தோஷங்கள் விபரம் (சிம்மி – சிஹ்வா – நாக்கு) அதிஸார நிதானம் – லங்கனம் செய்யக்கூடாதவர் – சுரபத்தியம், சுரத்திற்கு லங்கன நாள் அறிதல் காலாகாலம் அறிந்து மருந்து கொடுக்கும் விதம் முதலானவைகள் கூறப்பட்டுள்ளன. முழுவதும் வெண்பாக்களால் ஆகியது. சிகித்ஸை முறைகள் காணப்படவில்லை. ரோக நிதானம் மிகவும் சுத்தமாகவுள்ளது.

Beginning :

*சோதி மின்னெளியில் நின்று துலங்கிய*
*முகம்மதாலே*
*ஆதியப் புவனந் தன்னில் அமைப்பித்த*
*ஆதந்தன்னல்*
*சாதி ரெண்டானபோதே சகல நோய்*
*விபரமெல்லா*
*மோதியசிந் தாமணிக்கு உடையவன் காப்புப்*
*தானே.* (1)

*முந்தாரியந் தமிழால் மூதுலகிலே வைத்யச்*
*சிந்தாமணி வெண்பா செப்புதற்கு—நந்தா*
*திருமனு லகாதி யெவ்வுயுர்க்குந் தாயா*
*மொரு வன்றுணை யாகவும்.* (2)

*ஒருவா யினுல்வாய் மதமூன்றி லோரு*
*ரிருதாளி ன்முத்தா ளிசையவரு மோர்*
*களிமத்தை மினிதுரைத்தக் கல்வி யிற்போற்றீர்*
*வெளித்தை யினி துரைத்தவே.* (3)

★ ★ ★ ★ ★

## சுரநிதானம்

*துன்னும் வியாதி நிதானந் தொகுத் துரைத்தாய்*
*பின்னும் வியாதி வகை பேசுவார் முன்னே*
*சுரத்தை யுறைப்பார் சுர மென்பா ருதிற்*
*கரத்த வியாதிக் கரசனே* (24)

End :

## காலா காலமறிந்து மருந்து கொடுக்க.

*தேயமுங் காலமுந் தேகத்தின் கோட்டுநிலை*
*ஆயும்வயசு பிணி ஆய்ந்தறிந்து—யேயும்*

பொருந்து வகையறிந்து புந்தியினு லோறந்தோன
மருத்துவனே யென்பாமம் கிளர்ந்து. (67)

ஐந்தானுளே ஏழாநாளாகு மிரண்டொன் பானுள்
மூந்தானுள் பண்ணொன்றில் மூடிசந்நி—வந்தனெனில்
தீர்ந்தாலும் தீருமது தீராமலே யதனுல்
வீந்தாலும் வீவாம் விளம்பு. (68)

தன்வந்கரி பகவான் அருளிச்செய்த வைத்ய சிந்தாமணி வெண்பா.

எழுதி முடிந்தது முற்றிற்று.

## 251. நெ. 158. வைத்திய அட்டவணை.

(ஏடுகள் 32. பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் பற்பல வைத்ய முறைகளும், செய் பாகங்களும் கூறப்பட்டுள்ளன சுடர் தைலம், நாக பற்பம், சிப்பி பற்பம், தங்க பற்பம், அஞ்ஞசாமி நாக பற்பம், கரியுப்புச் செந்தூரம், (அப்துல் காதர்) அண்டவாதத்திற்கு உண்டை (மஸ்தான் சாது.)

Beginning :

சுவாச காசத்திற்கு நசிய மாத்திரை நசியமிடவும்.

கருஊமத்தைச் சமூலம், அத்திப்புகை கொஞ்சம் சேர்த்து நறுக்கி யுலர்த்திச் சுங்கானில் வைத்து புகை குடிக்கவும். சுவாசம் நிற்கும். வாந்தியாகக் கொடுக்க காட்டாமணக்குப் பால் காலமே கொண்டுவந்து வீசம்

சேர், அரைக்கால் சேர் தேக மறிந்து 3 காலமே கொடுக்கச் சுவாசம் தீரும்.

* * * * *

End :

## சொர்ணலோகச் செந்தூரம்.

| | | |
|---|---|---|
| அயஅரப்பொடி | பலம் | $1\frac{3}{4}$ |
| காரீயம் | ,, | $\frac{1}{4}$ |
| சூதம் | ,, | $\frac{1}{4}$ |
| ஊசிக்காந்தம் | ,, | $\frac{1}{4}$ |
| சாதிலிங்கம் | ,, | $\frac{1}{4}$ |
| பவளப்பொடி | ,, | $\frac{1}{4}$ |
| அப்பிரகச் செந்தூரம் | ,, | $1\frac{1}{2}$ |
| அப்பிரகபற்பம் | விராகன் | $2\frac{1}{2}$ |
| நெல்லிக்காய்க் கெந்தகம் | பலம் | $\frac{1}{4}$ |
| தாளகம் | ,, | $\frac{1}{4}$ |

இவைகளை எல்லாம் நன்றாயரைத்துச் சுத்தி செய்த சூதமும் வங்கமும் தொந்தித்து அரப்பொடி.

குறிப்பு :

கடைசியில் 4 ஏடுகளும், முன்னால் 4 ஏடுகளும் காலியாக விடப்பட்டுள்ளன.

## 252. நே. 159. *(a)* வைத்திய அட்டவணை.

(ஏடுகள் 10 முதல் 37 வரை. பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் சூதக வாயுவிற்கு லேகியம், சூலைக்குடோரி, மேக வாயுவிற்கு எண்ணெய் செய்யும் முறை, வல்லாதி

லேகியம், சயக்குளிகை, தாம்ராதி மாத்திரை, சத்தி விக்கலுக்கு லேகியம், மேகவாயு கடுக்கடுப்பிற்கு மருந்து, சக்கண்ணு சொல்படி பூர்ண சந்திரோதயம், தீபன கிருதம், சர்வாங்க மாத்திரை, தாதுபுஷ்டிக்கு மருந்து தாதுவிருத்தி பேர்ச்சங்காய் முதலான மருந்து முறைகள் உள்ளன.

Beginning :

## சூதக வாயுவிற்கு லேகியம்.

இடுகடு முக்கடுகு பணமோ டோமம்
மியங்கும் கிமிசேதி – யியல்புடன்
பலமரை வயண மோடைந்தும் மிங்குகழுஞ்சுடனே
வருகொடி வேலியின் வேரினின் பட்டையும்
வளருங்கடவுள் மலர்வாங்கிருகழுஞ்சு
மிவெச்சநல்சந்தம்
வருபலம் அயந்தாக தருதிலம்படிகா
லிளவறுப்புடனே
தாங்கியரைத் திடுசோம மோர் நாலும்
அரைத்ததைக் கொடுப்பாய் தான்கழற்காய்-
தேளவு
யிருபொழு தருந்தப் பொருமலுமிரைச்சல்
யேப்பமும்
நெஞ்செரிச்சல் யேகிடுஞ் சூதகவாயுவு
களனைத்துமிது பொதி முனி நாலே.

End :

## ரெத்த மேகம் தந்த மேகத்திற்கு

ஆவாரைப் பஞ்சகம் பலம் 5
இதற்குப்பாதி ஒதியம் பட்டை

இதற்குப்பாதி மரமஞ்சள்
இதற்குப்பாதி அத்திக்கொழுந்து

எல்லாவற்றிற்கும் பாதி சீந்தில் சர்க்கரை சேர்த்துச் சூரணம் பண்ணி நெய்யிலாவது, வெந்நீரிலாவது கொடுக்கவும்.

நீர்க்கட்டுக்குக் குதிரைவாலி, கத்தாழை, வெங்காயம், விளக்கெண்ணெயில் காய்ச்சிக் காரம், பொரி போட்டுக் கொடுக்கவும்.

## 253. நெ. 159 (b) அகஸ்தியர் குழம்பு முதலியன.

(ஏட்டிற்கு 4 வரிகள்)

இதில் அகஸ்தியர் குழம்பு செய்முறை, பிரயோகம், அனுபான பேதங்கள், கிருஷ்ணப்பிரக பற்பம், தாளக பற்பமுறை, நீர்க்கட்டு, வாந்தி இவைகளுக்கான மருந்துகள், ஆக்ராணம், வாணமுறைகள், கர்ப்பஸ்திரீக்கு சங்கம் எண்ணெய், வைத்தியர் அண்ணு நாயக்கர் சொன்ன எண்ணெய் முதலியன உள்ளன.

Beginning :

பேசியே மருந்துகேளாய் பெருங்காயங்
கடுகிந்துப்பு
வீசிய இருதைவெங்காரம் வியமனேசிலை
நல்லோமம்

ஆசரிதாரம் வாளம் மடல்துத்தம் (கருஞ்சீரம்)
ராமபாணம்

வாசிய யிவ்வகை வகைக்கரைக் கழுஞ்சி வாங்கே.

* * * * * *

End :

| | |
|---|---|
| வேப்பெண்ணெய் | சேர் 2 |
| நண்டுணுச்சாறு | சேர் 2 |
| முட்டை மஞ்சள்கரு | இருபது |
| பூஞகமரைத்தது | பழத்தளவு |
| முசுறுமுட்டைச்சாறு | சேர் ½ |

சித்திரமூலவேர் பட்டை பச்சையாய் – பழத்தளவு அரைத்துக் கரைத்து, உள்ளித் தைலம் சேர் ½ எல்லாம் பதமாய்க்காய்ச்சி வடித்து மேலுக்குத் துவளையிட்டு உள்ளுக்கும் 1 வராகனெடை வீதம் கொடுத்து வரவும். சகல சந்நி, சைத்யம், பிரவீச்சு, பட்சவாதம், மேகச்சூலே, மாந்தம், சூலேகளிவை தீரும்.

* * * * *

தாளகம் 5 வராகனெடை ஒரே கட்டியாய் வாங்கி நீர்மேல் நெருப்புயிலே யரைத்துக் கவசங்கட்டிச் சீலேமண் செய்து 2 சாண் புடம் போடவும். பற்பமாகும். ரோக கொடுக்கவும்.

Colophon :

கடைசி ஏட்டில்

கட்டெறும்பு
பேய்க்காலெறும்பு

செங்காலெறும்பு
சிற்றெறும்பு

என்று காணப்படுகிறது.

---

## 254. நெ. 159. (c) பலதிரட்டு.

(ஏடு 11. ஏட்டிற்கு 6 வரிகள்)

இதில் அரத்தைச்சூரணம், மேகப்புண், அரையாப்புக்கு மருந்து முறைகள், திருவிடமருதூர் லேகியமுறை, காரீயபற்பம், சிங்கிபற்பம்.

(திருவடமருதூர் காலேஷா பக்கிரி சொல்லியபடி) படர்தாமரைக்குப் பூச்சு மருந்து, பீனிச ஆக்ராணம் – வளவிக்கார பாவா முறை. அச்வகெந்தி நெய், கிரந்திக்குக் கோரோசனை மாத்திரை, சின்னத்தாத்தா முறை. முதலானவைகள் உள்ளன.

Beginning :

**சூதக வாயுவிற்கு அரத்தைச் சூரணம்.**

அரத்தை
கிராம்பு
சுக்கு
மிளகு
திப்பிலி
ஆயில்யப்பட்டை
குமிழத்திப்பட்டை
சாதிக்காய்
இலவங்கப்பட்டை

இலவங்கப்பத்திரி
ஏலம்
கச்சோலம்
சீரகம்
சடாமாஞ்சில்
சன்னலவங்கப்பட்டை
நரிவிளாப்பட்டை
சதகுப்பை
புங்கம்வேர்

ஆக சரக்கு 18 வகைக்கு ½ வராகனெடை, பரங்கிப் பட்டை விராகனெடை 7. ஆக 19 நன்றாக இடித்து வஸ்திரகாயஞ்செய்து, ராயபுரிச் சர்க்கரை வராகனெடை 90 கூடச்சேர்த்து அம்மியில் வைத்துத் தேன் விட்டரைத்து லேகியபதமாயெடுத்துக் கொண்டு வேளைக்குப் பின்னைக்காய் காலை மாலை யிருநேரமும் பசுவின் பாலிலாகுதல், நெய்யிலாகுதல், குழைத்துக்கொடுத்து வரவும்.

தீரும் வியாதி :

சூதக வாயு எந்த வகைக் கழிச்சலுஞ் சகல ரோகமுந்தீரும்.

பத்தியம் :

புளி, கடுகு, பூசினிக்காயாகாது, மற்றதெல்லாங் கூட்டவும்.

End :

சேலைவிளங்கிடுங் கன்னிக்கி தென்போருக்குச்
சேனைமஞ்ஞோர்

சோலைவிளக்கிடும் நாகத்தைநாட்டிய
சொரிமிஞ்ஞோர்

மாலை விளக்கிடு மாணிக்கமே யம்மாணிக்கத்தை
காலைவிளக்கிடுங் கங்காளமேகங்களுக் குண்டமே.

குறிப்பு :

கடைசி ஏடு இந்நூலைச் சேர்ந்ததல்ல.

---

## 255. *No.* 160. அகஸ்தியர் சுவாமி தீட்சை விதி.

(ஏடுகள் 48. ஏட்டிற்கு 7 வரிகள்)

இதில் எந்த ராசி, எந்த நட்சத்திரத்தில் ஜனித்தவர்களுக்கு சித்தி உண்டாகும் என்றும், கல்பம் உண்ணும் காலம், பிராயணுயாம விதிகள், 11 வித சிவதீட்சை, 11 வித சத்தி தீட்சை விபரங்கள், சக்கரங்கள் வரையும் முறை, (நாற்பத்தி முக்கோணம்) அந்தந்த தேவர்கள் இருப்பிடம், தேவி சக்கர முறை—நிவேதனங்கள் தீபாராதனை முறை, சிவசத்தி சக்கரம் – சித்தர் நூல் விபரம் கூடாத பதார்த்தங்கள் – மூதண்ட லேகியம் – வழலை விபரம் – வாலை பூசை முதலியன காணப்படுகின்றன.

Beginning ;

வானைத்தாவிய பொதிகை
மகத்தான ரிஷியினும் வாக்கின் நேர்மை
பானைத்தாவிய பூஜை
பரிவான சிவயோக முறையைக் கேளீர்

மீனைத்தாவிய ராசி
விளங்கிநின்ற கன்னிமுதல் வில்லுமேஷம்
சேனைத்தாவிய தால
ரத்தின சென்பற்குக் கருவைசெப்புறேனே (1)

★ ★ ★ ★ ★

காணடா அர்ச்சனையைத் திறந்துபின்பு
கைமுறையாய்ப் பாத்திரங்கள் வைத்தும்பூசி
பூணடா அன்னமொடு பலகாரங்கள்
புகழான சத்தியொடு போதவைத்துத்
தோணடா மணியோசை சங்கிேசை
துடந்துநின்ற செகண்டி ஞேசையாட
ஆணடா நிவேதனஞ் செய்துநீதான்
அரகராசிவசிவா அம்மாவென்னே (100)

★ ★ ★ ★ ★

End :

பணிமாறு காலத்தே மணியின் ஓசை
பாங்கான செகண்டி நாதத் தோசை
பணிமாறு காலத்தே மவுன தோத்திரம்
பத்தியுறு வாலை கையில் லேகியத்தையீந்து
பணிமாறு காலத்தே சகல சித்தும்
பரிவாகத்தா வென்று கையில் வாங்கி
பணிமாறு காலத்தே பணிந்து கொண்டு
பண்ணுவாய் பூசைவிதி தீட்சை முற்றே (120)

# 256. *No*. 161. திருமந்திரம்

(ஏடுகள் 58. பக்கத்திற்கு 4 வரிகள்)

இதில் கருப்பையில் சிசுவளரும் விதம், நாடி நிதானம், நாடி பார்க்கும் விதம், நடை பேதங்கள், நிறங்கள் – பஞ்சபூத விவரம், வாத, பித்த, கபக்குறிகள், மரணக் குறிகள், ரோகநிதானம், மந்தம் சேறும்வகை, மேகவரலாறு, சுரத்திற்குப் பத்தியம், சுகசந்நி வரலாறு, மூலத்தின் குணம், குன்ம உற்பத்தி – சூலை குணம், மலட்டின் காரணம், சோணிதசந்நி குணம், கண்ணோய் வரலாறு, குஷ்ட வரலாறு முதலானவைகள் காணப்படுகின்றன. அச்சிடப்படவில்லை.

பிசுமில்லா ஹிற்றகமா நிற்றகீம்

ஆதியுமருளிச் செய்தான் அகமதற் கறிவுதன்னால்
நீதியாய் நிறைத்துநின்ற நிர்மல வடிவதாகும்
ஓதியே யறிந்தோர்க்கெல்லாம உகந்திடு
மென்றுசொன்ன
காதியாயுயிர்கட கெல்லாங் கர்த்தனே
காப்பதாமே.

**அல்லாவுதவி.**

ஐந்து கரன்றனை ஆனைமு கற்றனை
யிந்து யிளம்பிறை போல வயிற்றனை
நந்தி முகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே. (1)

★ ★ ★ ★ ★ ★

உண்மைகே ளின்ன முமிழ்ந்திடும் நோயுள்ளேன்
தண்மையாய்தூரம்போய் தாக்கிடில் சாவில்லை
கண்மையாய் வாயுவு கழன்றிடிற் கிட்டும்
வண்மை யாய்ப்பார்த்து வகுத்தனர் நந்தியே. (45)

* * * * *

## தத்துவமுறை

வியாதிகள் போக வெகுநாள் செடமுற
பயாதித் திறைமுரை பாங்காய் தவிர்ந்திட
கயாதிக் கவனங் கழன்றேகுஞ் சுத்திட
வியாதியாம் ஞானமஞ் சாகுஞ் சித்தியே. (113)

திருமூலர் முற்றிற்று.

Colophon :

விக்ரம வருஷம் ஆவணிமாதம் 5வ மகம்மது இப்புரகீம் சாயபுக்கு திருமந்திரம் எழுத துவற்கம் (துவக்கம்) செய்தது.

## 257. *No.* 162. (*a*) பிரம்ம முனி சூத்திரம் முந்நூற்றுறருபது

(ஏடுகள் 57 ; பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் மேகராஜாங்க லேகியம், முக்கூட்டுத் தைலம், மேகராஜாங்க எண்ணெய், சேங்கொட்டை லேகியம், சண்டமாருதக் குழம்பு, அஞ்செண்ணெய்

தைலர், வில்வாதி லேகியம், ஆக்ராணம், விஷமுஷ்டித் தைலம், சயத்திற்கு ஆடாதோடை லேகியம்,பவழ, சிங்கி பற்பவகைகள், கெர்ப்ப நோய்க்கு எண்ணெய், சிவன் வேம்புச்சூரணம், பரங்கிப்பட்டை ரசாயனம், காள கண்டசூரணக்குடோரி, வாதத்திற்குவேது, கஸ்தூரி எண்ணெய், ரசசெந்தூரம், தசமுகக்குரு, பாஷாணக் கட்டு, மூலிகை உச்சிதம், சாரக்கட்டுச்செயநீர், தேசி விதை முதலியன.

Beginning ;

சீருளானசோதி சின்மயஞானசோதி
தாரணி கொன்றை சூடித் தாரணிந்தரனைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வைத்ய நூலைக்
காரணமாகப் பாடக் கணபதி க்காப்புத்தானே. (க)

செப்பரிய சூதசெந்தூரங்கேளு
திறமான சூதமது பலந்தான்பத்து
யொப்பரிய கெந்திபலம் ரெண்டரைதான்
யோட்டிலிட்டுக் கெந்தகத்தை யுருக்கிக் கொண்டு
யப்பரிய சூதமதுவிட்டுக் கிண்ட
மணல் போலே யாகுமதைக் கல்வத்திட்டு
யப்பரிய காட்டுசேம் பதன் சாற்றாலே
யரைசாமம் பொடியாக்குக் குப்பிக்கேற்றே. (285)

End :

புடமான குகைத் திட்டஞ் சொல்லக் கேளு
புகழான கமுதைலத்தி யிரும்புக்கிட்டம்

வடமான வுமிக்கருகல் சீலை சுட்டசாம்பல்
வகைக்கிரண்டு பலமெட்டுக் களிமண்ரெட்டிக்
குடமான கடுக்காயின் கஷாயம்விட்டுக்
குமுறவே யாட்டுமைபோல் குகைதான் பண்ணு
மடமான மேற்சில்லு மதிலேபண்ணு
மற்றகுகை யுருக்கினத்தி லழிந்து போமே. (365)

பிரம்மமுனி 360 எழுதிமுகிந்தது முற்றும்.

## 258. நெ. 162. (b) நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதி பிரிவு.

(ஏடுகள் 4 ஏட்டுக்கு 8 வரிகள்)

இதில் 4448 வியாதிகளின் தொகை கூறப்பட்டுள்ளன. பச்சிலைச்சாறு இடப்படவில்லை

Beginning:

வரப்படைத் திலங்குங் கீர்த்தி மண்ணுலகேழும் வண்ணம்
தரம்படைத் திலங்கமென்ப முண்மையாம் மனிதர் தங்கள
சிரங்கலீராயத்தானே செப்பி நோயின் பேரெல்லாம்
பிறந்த நற் கல்வியோடு பண்பிறு லுரைக்க லுற்றேன். (1)

உரைக்குமி க்குணத்தின் வண்மை யுண்மை
வாகடத்ஙதயெல்லா
தரைக்குமே னுரைப்பதென்று சாத்துவதேதுக்
கொக்கும்
வரைக்கியல் பிரமன் சொன்ன மாமறை நூலை
மண்மேல்
உரைக்கியல் குழலிசொல்லு மூமனர் விரவிற்
கொக்கும்

End :

செப்புக விரண்டு மூக்கில் செறிந்த கன்னத்தில்
நாலு
மெய்ப்புறு மிரண்டுநெற்றி விளங்கிடும் பிடரி
லொன்று
ஒப்பு கண்டத்தி லேழு அரைத்திடும் வாதபித்த
தப்புறு வாத சந்தி, தானொரு பத்து மூன்றே.

## 259. நெ. 162. (c) பலதிரட்டு.

(ஏடுகள் 3; பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் சுயமக்கினிசெந்தூரம், பூபதி மாத்திரை, இவ் விரண்டு மருந்துகளும் உள்ளன. சுவடிக்குப் பச்சிலை சாறு இடப்படவில்லை.

Beginning :

போமப்பா சுயமக்கினி சொல்லக்கேளு
புகழான ரசமூணு நாதம் ரெண்டு

காமப்பா காந்தச் செந்தூரம் நாலு
கலங்காதே சிலைரெண்டு சிநப்புரெண்டு
காமப்பா தீக்ஷண செந்தூரம் சேர்த்து
தவராமல் குமரிச்சாறரைப்புக்கேளு
ஆமப்பா பட்சமொன்று அரைத்துருட்டி
அப்பனே யிஞ்சிரஸம் திரிகடுதாளே. (1)

End :

பாரப்பா பூபதியை யிஞ்சிச்சாற்றில்
பரிவாகத் தேன்கூட்டி கொடுக்கில் கேளு
சாரப்பா சவமாகப் போனாலுந்தான்
சாத்திரியப் பிராணன் வந்து சற்றேபேசும்
ஆரப்பா பிரும்மலபி யிவளவேயாகில்
ஆசித்துப் பேசிவிட்டு மரணமாவான்
சாரப்பா பூப யைச் சொன்னேன் சொன்னேன்
(சா)திச்சு வைத்தியஞ்செய் தர்மமாமே (2)

## 260. நெ. 162. (*d*) அகஸ்தியர் வல்லாதி 18.

(ஏடுகள் 2. பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் ஆரம்பத்தில் திருமூலர் வல்லாதி என்று காணப்படுகிறது. செங்கோட்டை லேகியம் முறை உள்ளது. இதிலும் பச்சிலை தடவப்படவில்லை.

Beginning :

தேசலங்கிய செம்பொனின் பலர்ந்
　　தீசனின் புத்திருக் குமியல் புகன்
ஆசையோடுமை அயம் பொன்னிரஞ்சியே
　　பேசினுலகம் பிழைப்பெய்தவே. (1)

End :

இளந்தையாகுவ ரிம்மருந்தினல்— (17)

பேசிலின்பம் பிறக்கு மருந்தினை
ஆசையோடுண ரன்பு செய்வாருக்கு
வாசமிக்க முசு மமதைப் பேர்த்திடு
ரோசு மிய்யரன் தனக்கு மூர்த்தியால் (18)

அகஸ்தியர் வல்லாதி முற்றும்.

## 261. நெ. 162. (e) பலவகை

(ஏடுகள் 3 பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் மருந்து சாப்பிட நாளறிதல்: — நட்சத்திர பலன் அறிதல் — ருதுவாகிற நாள் பலன் — போராத நட்சத்திரபலன் அறிய — வீடுகட்ட நாள் பலன் — தலை முழுகுநாள் பலன், விருந்து வைக்கநாள் — வாழுமனை யில் வைக்கக்கூடாத மரங்கள், அங்கீகாரஞ் செய்யப் பட்ட தினிசு — உத்தமதாரம் அறிய—மாடு ஈனுகிற நாள் முதலானவைகள் உள்ளன. இதற்கும் மை பூசப்பட வில்லை.

Beginning :

**மருந்து சாப்பிட நாளறிதல்**

உத்தமமாம் வியாழன் ஒங்குகதிர் வெள்ளி
மத்திமமாம் திங்கள் புதன்மானே! கேள்
மெத்தவும் நோய் செவ்வாயில் ரெட்டிக்கும்
சேர்ந்தசனி மரணமிவ்வா றறிந்தவிழ்த மீயே (1)

* * * * *

செந்தமி ழடக்காய் நீருஞ்
சிவிகை பொன்னுர மாடை
சுந்திர வனிது மாது சுகந்தமிவ்
வகைகளெட்டு.
வந்தபோதணையை வேணும்
மறுத்துமே வணவோமென்ருல்
செந்திரு தனக்கு மூத்த
சேட்டையுஞ் சேறுவாளே.

* * * * *

கட்டுரையாந் தமிழ் வல்லவரே யிகன்விதா நன்னூல்
யெட்டு மிரண்டு மிருவது யோதுமீர்—வந்து
மூட்டியதிக் கெண்வேஸாம முணர்ந்திங் குறைத்திடுவார்
சட்டன் மெய்த்திரு நல்ல நாக்கண்டறிந்திடுமே. (30)

## 262. நெ. 163. (*a*) இரத்தினச் சுருக்கம். (முந்நூற்றுபது.)

(ஏடுகள் 32 ; ஏட்டின் பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் நாடி லெட்சணம், கிருஷ்ணுப்ரகச் செந்தூரம் – லங்கனவிதி குன்மக்குறிகள் – சூலைக்குறிகள் 80 வாத நோய்களின் குறிகுணங்கள் முதலானவைகள் காணப்படுகின்றன.

Beginning:

பூரணமாய் நிறைந்த குருபரை தாள்போற்றி
புகலுகிறேன் வைத்யரத்னச் சுருக்கந்தன்னை
வாரணமுகத்தோனைப் பணிந்து வாழ்த்தி
வைத்தியந்தா னிந்தமுந் நூற்றறு பத்துக்குள்
காரணமாம் செந்தூரம் பற்பம் லேகியம்
கருவான தைலமொடு கிருதம் எண்ணெய்
சூரணமாம் னேமமொடு கலிக்கமாத்திரை
சுளுக்குரு நாடிமுதல் சொன்னோம் பாரே. (க)

உண்மையாய் உடம்பெல்லா வாயுவாகி
உயர்கின்ற நாடியது அசைவுமண்டி
கண்மையாய்க் காயமீதி லேயேறி
கசகியே யிழிந்துமே வலித்துக் காணும்
பண்மையாய்ப் பக்கத்திலிசுவு முண்டாய்ப்
பாரித்துப் பனைக் கையுங் காலுங் கோணும்
வெண்மையாய் உடம் பெங்கும் வேர்வை காணும்
மெலிவு பக்கவாதத்தின் விபரந்தானே. (270)

End:

சோதியாய் சிறுகுதிரைப் பாய்ச்சலாகி
செடமெல்லாம் மிகக்குலுங்கிக் கோட்டிபண்ணி

மேதியாய் மேலேறி கீழேநோக்கி
    வெறிகொண்டாப் போல்மிறண்டு அண்டம்வீங்கி
யேதியாய் இரண்டுவிரை யுள்ளேபுக்கி
    யினேலிங்கம் உட்சுருக்கி யிழிந்துநோவாம்
ஆதியாம் அடிவயறு மிசிவுகாணும்
    அணியசுவ வாதமென்றே அறியலாமே. (308)

குறிப்பு :

முதல் 5 ஏடுகளில் வைத்திய ரத்தினச் சுருக்கம். நாடியில் 30 செய்யுட்கள் உள்ளன பின்னர் 2 ஏடுகளில் கிருஷ்ணப்பிரகச் செந்தூரம் செய்யும் முறை குணங்கள் உள்ளன. கடைசியில் 53 நெ ஏட்டிலிருந்து ஆரம்பித்து 68 நெ. ஏடு வரை செய்யுட்களுள்ளன. (209 முதல் 308 வரை)

## 263. நெ. 164. யூகிமுனி வைத்திய சிந்தாமணி.

(ஏடுகள் 15; பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் பஞ்சபூதகூறு, சக்கிரங்களின் அதிதேவதை இடை, பிங்களை நாடிகள், தசவாயுக்களின் இருப்பிடம், கருவளரும் விதம், தோஷங்களின் கால விபரம் தச இந்திரியங்களின் விபரம், சுவாச எண்ணிக்கை பஞ்ச கோச விவரணம் முதலியவைகள் உள்ளன.

Beginning :

ஆனைமுகன் றன்பாதம் முருகன்பாத
    மத்தியுரித் திடைதரித்த அய்யர்பாதம்

வானையுமையாள் பாதம் மாலின்பாதம்
வயிரவன் தன் பாத மகாலெட்சுமிபாதங்
கானைய நாதாக்கள் ரிஷிகள்பாதம்
கமலத்தில் வீற்றிருந்த வாணிபாதம்
கோனைய குருமுனிதன் பாதம்போற்றி
கூறுகிறேன் ஆயுருவே தத்தைத்தானே. (1)

தானான நால்வேதத் தொப்பாய் நின்ற
தக்கான ஆயுருவேதத் தோடஞ்சாஞ்
தேனான சிருட்டிகுலத் துற்பவித்துத்
தேவனாந் தன்வந்தரி சொன்னநீதி
வானான வாகமத்தை மேதினிக்குள்
மருவியே யுரைத்திடவே வண்மையாக
வேனான வயித்தியசிந் தாமணியின்
விபரமெல்லாம் வெளியாக விளம்பிச்சொல்
வோம். (2)

End :

காரமா மட்சரந்தான் விஷ்ணுவாகும்
மகத்தான வவ்வதுதான் அப்புபீஜம்
விகாரமாம் வேதமதுவே சர்வமாகும்
மெய்நிறைந்த கவுஸ்துவமணி பஞ்சவாயும்
நிகாரமாம் லெட்சுமிதன் பக்கமாகி
நேர்மையாய் வாசியைத் தான்மங்கொன்றி
[ருத்தி

உகாரமா யூதினால் உலகவாழ்க்கை
ஒருநொடியில் வெளியாகு ஊணிப்பாறே. (61)

## 264. நெ- 165. தட்சிணாமூர்த்தி (நடுக்) காண்டம் எண்பது (வாத எண்ணெய்)

(ஏடுகள் 8 ; பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் சந்திக்குச் சுடர்த்தைலம், புங்கெண்ணெய் தைலம், வசியம், வயிற்றிலிறந்த பிள்ளை விழ, மஞ்சக் காமாலைக்கு மருந்து, பால் சுரக்க, பீனஸம், மண்டைக் குத்தலுக்கு, கண்ணோய்க்கு மாத்திரை, காது நோய்க்கு சூடாதோடை யெண்ணெய், இருமல், வாயு, கிராணிக்கு, கல்லடைப்புக்கு, குன்மம் முதலான ரோகங்களுக்கான மருந்து முறைகள் உள்ளன.

Beginning :

செப்பவே சந்தியென்ற தெல்லாய்போக
திறமான யெண்ணெயொன்று சொல்லக்கேளு
அப்பனே யரிதாரம் வெள்ளை கெந்தி
அழகான மனோசிலை சூதங்காந்தம்
பய்யவே திரிகடுகு பவளப்புத்து
பாங்கான வீரமுடன் லிங்கம் நேராய்
மையாக வேயரைத்துக் குமரிச்சாற்றில்
வகையாகப் பசுவினீர் சாமமொன்றே (1)

ஒன்றான சிறுக்கீரைச் சாமமொன்று
உத்ததோர் கஷாயத்தி லரைத்துப்போடு
நன்றான சீலைக்குள் திரிபோலூட்டி
நலமான வேப்பெண்ணெய் தன்னில்தோய்
வொன்றாகச் சுருட்டியே கதிர்முனைக்குள் [த்து
வீராகச் சுவத்துக்குள் பதுக்கிவைத்து
பன்றானச் சுடர்கொளுத்தி வேப்பெண்ணெய் விட்
பரிவாகச் சுடர்தைலமிறங்கும் பாரே. [டால்
(2)

*   *   *   *   *

End :

வெண்பா

தேர்ந்த கொத்தமல்லிசுக்கு சீரிலாம்பிச்சம்
சார்ந்த வில்லைப் பிஞ்சுசமனுக—கூந்தலினய்
சலம்விட்டுக் காய்ச்சியுள்ளே சாந்தமாய்க்கொள்ள
பலத்துப் போங் கிராணிபேசு (70)

குறிப்பு :

20-வது செய்யுள் முதல் 34-வ செய்யுள் வரை இல்லை. 2-ம் ஏடு சிதைந்திருக்கிறது.

## 265. நெ. 166. அகஸ்தியர் ஸமுத்திரம் நூறு

(ஏடுகள் 17 ; பக்கத்திற்கு 10 முதல் 12 வரிகள்)

இதில் துருசுக்குரு, தேவி பூஜை, சூதமணி, வழலை கிடைக்கும் இடம், வங்க நீறு, வங்க சுத்தி, பற்பம்,

சாறக்கட்டு, நவலோக மாரணம், பச்சிலைக் குரு, கட்டு வகை, ஜெயநீர், மெழுகு வகை, லேகிய வகை, செம்பு சுத்தி, உப்புக்கட்டு, தாளகக்கட்டு, நாகபற்பம், சூதக் கட்டு, ரஸக்களங்கு பாஷாணக்கட்டு சித்தர் லட்சணம், பூனீர் சுன்னம் லிங்கக்கட்டு முதலான ரஸவாதத்திற் கேற்ற மருந்து முறைகள் உள்ளன.

Beginning :

பூரணமாஞ் சுழினை நடுக் கமலமீதே
புகழ்பெரிய மூலகண பதியேகாப்பு
(கா)ரணமா யெனையாண்ட பராபரனைப்போற்றி
கட்டாக வாதத்தில் லட்சங்காப்பு
தாரணமாய் படுபாதி குறுக்கிச் சொன்னேன்
சார்வாக ஆயிரத்திருநூறு சூத்திரம்
வாரணமாய் குறுக்கிவைத்த சூத்திரம் நூத்தில்
வகைதோண கருக்குருவும் வெருத்தேன்பாரே. (1)

பாரப்பா கட்டுவகை செந்தூரங்கள்
பண்பான செயநீர்களங்கு மெருகுசுத்தி
சீரப்பா வழலைக்கி யிடைபாகங்கள்
திரமான வுள்கருவு மேகமூலிக்
கூறப்பா மித்திரங்கள் தேவிபூசை
குறுக்குவழி பரிசினங்கள் கோடாகோடி
ஏரப்பா தொந்தங்கள் விபரமாக
யியம்புகிறேன் துருசுப்புச் சுன்னப்போக்கே. (2)

எய்துமென்ற சாஸ்திரந்தான் நூறுங்கேளு
யிடும்பான மடையருக்குக் கிட்டாதப்பா
எய்துமென்ற வுலகத்தில் கோடிக்கொன்ருய்
இருக்கின்ற பெரியோர்கட் கெய்துமிந்நூல்
எய்துமென்ற சாஸ்திரத்தைக் கேட்டாலுந்தான்
இல்லையென்று ஆணையிட்டு இருப்பார்தானே. (30)

End :

மனம்வேறு பூரணமே யென்றுபூண்டு
வாழ்வதெல்லாம் மத்தொன்றுஞ் செய்யாதய்
மனம்வேறு தட்டுண்டா லெல்லாம் போச்சு [யா
மாய்கையுத்துத் திரிந்தலைவான் மாள்வாரப்
மனம்வேறு சாதகமாய் சாஸ்திரம்பார்த்து [போ
மனம்பலக்கக் குருவினிடம் வணங்கின்ருல்
மனம்வேறு வாராது சித்திமுத்தி
வாய்க்கர்ம் சூஸ்திரந்தா ஞாறு முத்தே. (100)

தேவிசகாயம்; குரு முன்னிற்க வேணும்.
ஸ்ரீ ராமஜெயம்.

## 266. நெ. 167. திரட்டு வாகடம் (ரஸ ஔஷதங்கள்)

(ஏடுகள் 11; ஏட்டிற்கு 6 வரிகள்)
அபூர்த்தி, சாறு பூசப்படவில்லை.

இதில் கோடா சூழி மாத்திரை, பேதிக்கு லிங்க மெழுகு, ஆனந்தபைரவ மாத்திரை, சந்நிபாத பைர

வன், தோஷ சாந்த பைரவன், மெச்சிய வயிரவன், வைரவன், சுர மாத்திரைகள், (வெள்ளை மாத்திரை) சந்நி ஜ்வராங்குசம், குன்மக்குடோரி, சலோதாரி மாத்திரை, ஏலாதி உருண்டை, சுர கபாடமாத்திரை, கபாட மாத்திரை, கிராணிகபாடம், சூலை, கிராந்திக்கு, காசம் புண்ணுக்கு, கண்டவிழ்தம், குன்மத்திற்குப் பற்பம், பஞ்ச செந்தூரம், வங்க செந்தூம், நடுக்கல் ஜ்வரத்திற்கு அரிதாரச் செந்தூரம் முதலானவை உள்ளன.

Beginning :

கெந்தக மிருவிநாபி கேடில்லா வாளந் தாரம்
வந்தவெங் காரஞ்சுக்கு மருவிய மிளகுதான்றி
தந்தருளி லரமநெல்லி திருகடு திப்பிலியோ
டிந்தமா முருக்கிலைச்சா றிதுகோடா சூழியென்றே.
(1)

End :

## நடுக்கல் ஜ்வரத்திற்கு அரிதாரச்செந்தூரம்

அரிதாரம் பலமோரஞ்சு ஆவின்மோர் கோமியம் பின்
உரியசுண் ணம்புநீரால் ஊறியொவ் வொருநாள் நீக்கி
பெரியகாய் வேளைச்சாத்தால் பலப்பட வரைத்துத் தட்டி
நெரியகாய் வேளைச்சாம்பல் நேர்ந்த பானையில்மண் போடே (50)

## லோகச் செந்தூரம்

போட்டபின் னரிதாரத்தைப் பொருந்தவே சாம்பல் தன்னை
வாட்டமாய் நீக்கிமூடி மறையவே சீலைசெய்தே

## 267. நெ. 168. திருமந்திரம்.

(ஏடுகள் 9; பக்கத்திற்கு 10 வரிகள்)

இது சுவடி நெ. 161-ஐ போன்றது.

Colophon :

வைய்யாசிமீ 21உ வியாழக்கிழமை 15 நாழி யெழுதி முடிந்தது. முற்றும்.

கா. மஹம்மது அலி சாயபு சுவடி, என்று எ தப் பட்டுள்ளது. சுவடியின் ஆரம்பத்தில் ' பிசுமில்லா யிறகிமா நிறகிம் '' என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

## 268. நெ. 169. (a) ஆணிக்கோர்வைக்குச் சூத்திரம் மூன்று.

(1 ஏடு ; பக்கத்திற்கு 8 வரிகள்)

ரஸ வாதஞ் செய்ய உதவும் நூல். 3 செய்யுட்களே உள்ளன, பரிபாஷையாகவும் உள்ளது. கவுபால சித்தரால் பாடப்பட்டதாகத் தெரிகிறது.

Beginning :

கொடுத்தமுறை தனிலுரைக்கும் வேதைமார்க்கம்
சொல்கையல்லா முப்பூவுங் காரசாரத்
தொடுத்திதனைச் சத்திவித்து சூதமென்றுஞ்
சூட்சமுள்ள நாகரஸங் கெந்தி யென்றும்

படுத்தியண்ட பிண்டமென்றுங் கோசபீசம்
பசந்தமண் தண்ணீரென்றும் பாடிவைத்தார்
வடித்தசிவ சத்தியுப்பு செம்புவெள்ளி
வாய்த்தபரி கூட்டுமகுத்துவந் தானே. (1)

மகத்தான வித்தொன்று வங்கமொன்று
தாட்டியே சரியிடையா யிரவி கூட்டிப்
பருத்தாகக் கண்டயிடை யெவரும்பேசார்
சரமகுரு கற்பூரக் கிராசமூட்டித்
தொகுத்தேகச் சத்தொன்றுக்கிடை மூன்றாகத்
தொந்தித்து வெள்ளி மறுபடி நால்கூட்டி
வகுத்தோதி வைத்தகுரு கிருசமிய்ய
மாத்தாளும் குருடருக்கும் மாய்க்கும் பாரே.
(2)

End :

பாரப்பா சிவசத்தி யப்புவித்தை
பரியிரண்டுக் கெட்டாகக் கிராசமூட்ட
வேரப்பா வுண்டாச்சு பொன்பிறக்க
விளைவிக்கச் செய்தறுத்துக் களஞ்சியத்தில்
சேரப்பா சேரிட்டே வென்னுளுக்கும்
திரமன்றி முழுங்கி வைக்க யென்னலாகா
நேரப்பா சாக்குமேப் பிரதமைக்கும்
தெறியென்று கண்டுகன மகிழ்ச்சி கொள்ளே.
(3)

முற்றும்.

சற்குரு கிறுபை.

கவுபாலச்சித்தர் ஆணிக்கோர்வை 51-க்கு சூத்ரம் 3 ஆக பாட்டு 54 சிவமயம்.

## 269. நெ. 169. (b) ஆணிக்கோர்வை அகவல்.

(ஏடுகள் 2 ; ஏட்டிற்கு 8 வரிகள்)

இதிலும் ரஸவாதத்திற்கான முறை பரிபாஷை யாகக் கூறப்பட்டுள்ளது.

Beginning:

கண்ணுதலோன் பெத்த கணபதியையான் வணங்கி
மண்ணுள்ளோர் தன்முன்னே வாழ்த்துங் கால்—எண்
ணறிய
பொன்னுளிக் கோத்திரத்தைப் புகழ்ந்துரைப்பன்
பூதலத்தின்
யென்னுரு மேலோரெல்லாம் மதிக்க—மின்னே
உரையாத பொன்னுக் கரை யறிய ஆணி
விரையாது கண்டறிய வேண்டில்—நிறையகா.

* * * * *

End:

வெண்பா

கல்லின் மேலெண்ணெய் கசியாமல் காயாமல்
வல்லிரோ பொன்னுக்குறைத்த வல்லீருய்-மெள்ள
இருபத்திரு காலுரை யிழைப்பீருமாகில்
லொரு வருக்குக் தோன்ரு துரை
கைதைக் கரிகளஞ்சுகந்த லற்ற தேன்மெழுகு
பைய விருகளஞ்சு பாரித்து—நெய்யு

மரைக்கழுஞ்சு கூட்டி யரைத்துண்டை செய்தால்
உரைக்கு மெழுகா முரை.

முற்றிற்று. சிவமயம்.

---

## 270. நெ. 169. (c) கவுபாலர் ஆணிக்கோர்வை. ஐம்பத்தொன்று.

(ஏடுகள் ; பக்கத்திற்கு 6 வரிகள்)

Beginning :

..................று கிரிதானென் று
ஆட்சியாந் தேவமுனி யதிலிருப்பா
அரிதான சித்தரெல்லா மங்கேவாசம்
காட்சியாய் ..........ரு வரைக்கான
வெண்டாலக.................. ..........
......................................................................
குளிகையிதைக் கண்டத்தாக்கி
தீட்சையாய்ப் போவென்றார் குளிகையாலே
தட்சணத்திலே சொர்ண கிரிமுடி கண்டேனே (12)

End :

குடுத்திட்டச் சித்தாதி சித்தரெங்கள்
குலதெய்வமாக யெல்லாக் குறிப்புங்காட்டி
யடுத்திட்ட யென்னம்பன் யென்னையாண்ட
ஆண்டவனார் தேவமுனி யருளினாலே

யெடுத்திட்டே லோகவுப காரமாக
இசைந்தொரு நூலாணிக் கோர்வைநூலே
முடித்திட்டேன் பாடலது அன்பத்தொன்றாய்
மொழிந்த கவுபாலசித்தன் முடித்திட்டேனே. (61)

முற்றும். தேவிஸஹாயம்.

கவுபாலர் ஆணிக்கோர்வை அன்பத்தொன்றும் மேலக்காவேரி மிசியோன் தருமப் பள்ளிக் கூடத்தில் எழுதினது. (1834). சதாநந்தி கிருபை.

குறிப்பு :

இதற்குப் பின்னர் பல ஏடுகள் முறிந்தும், வரிசையாக இல்லாமலும் இருக்கின்றன. ''மூலிமைவன்மம்'' என்ற சுவடியிலிருந்து 2 ஏடுகளும் அச்வகந்தி சூரணம், சம்பாதி சூரணம், பூதாப சூரணம் இவைகள் எழுதப் பட்ட ஏடு ஒன்றும் உள்ளன.

---

## 271. நே. 170. வாதமெண்பதற்கும் பெயர் வெண்பா-

(ஏடுகள் 5 ; பக்கத்திற்கு 10 வரிகள்)

வாதரோகங்களின் குறிகுணங்கள் கூறப்பட்டுள்ளன. ஆமில வாதம், சந்தீ வாதம், தனுர்வாதம், உதர வாதம், போன்றவை.

Beginning :

வெண்பாவைப் பண்பாவை வெரியன் பிறைமயில்
கண்பாவைபோல வெனக் கன்பாவை— நண்பர்க்கு

மாலயனும் சங்கரனும் வாழ்த்திபிடப் புண்டரீகம்
வாலேயத்தின் வாழு மனம் (1)

சொல்லு ரத்த வாதகுணந் தாங்கு மேன்மூச்சிருமல்
பொல்லா வருசி பொருமல் மிகும்—அல்லாமல்
மந்த அனல பந்தமல வாங்குமு பரோகந்
தந்துமன மிச்சை செயாதால் (2)

End :

கன்மவாத பாதகமாம் கன்மத்தி லுண்டாகும்
வன்மமுது நாமயத்தின் வாதந்தான்– பன்மையாம்
கொட்டுகையாற் பாடுகையாற் கோலஞ்செய்
தானோ யோர்
துட்டநோய் வாதமிகுஞ்சொல். (63)

## 272. நெ. 170. (b) பித்தரோகப் பெயர் வெண்பா.

(ஏடுகள் 2 ; பக்கத்திற்கு 10 வரிகள்)

இதில் அசீரண பித்தம், சூரியாவரண பித்தம், காமாலைப் பித்தம், அம்ல பித்தம், ரத்த பித்தம், கிர பித்தம், புண்டரீக பித்தம், புசங்க பித்தம், கபால பித்தம், சீத பித்தம், சிலேத்ம மூர்ச்சை பித்தம், குரோத பித்தம் முதலான ரோகங்களின் குறிகள் உள்ளன.

Beginning :

தீருமப்பரிய விழிதான் சுழலுந் தேகம்
வோதந் நடுக்குஞ்செய் மூர்ச்சை—தாகமுறும்

மெத்தமலம் நீர் கழிச்சல் மேவுமசீர்ண
பித்த மெனத் தேர்ந்தறியப் பேசு. (1)

★ ★ ★ ★ ★

வாந்திய ரோசகமும் வாய்நீர் தலைச்சுற்றல்
மாந்தி வாய்தித்தித்தல் வன்மூர்ச்சை—காந்தி புக
முய்யுடல் ரோமங் களுசிபோ லேசிலுத்தா
லைய்ய மில்லை மூர்ச்சை (புண்டரீகம்) (14)

★ ★ ★ ★ ★

எண்ணுமிருபத்தோ டீரிரண்டு பித்தமென
மண்ணிற் பெரியோர்கள் வகுத்தார்கள்— கண்ணி
இந்த குணங்க ளிசைந்தால் பித்தமெனத் [யறி
தந்துரைத்த நல்லோரதர்க்கு. (21)

## 273. நெ. 170. (c) திருமந்திரம்.

(ஏடுகள் 8 முதல் 18 வரை ; ஏட்டிற்கு 10 வரிகள்)

சுவடி நெ. 161 போன்றது.

## 274. நெ. 170. (d) அகஸ்தியர் திரட்டு (வாதத்திற்கு)

இது ஏற்கனவே "திரட்டு வாகடம்" என்ற பெயரில் உள்ளது.

# 275. நெ. 171. குணவாகடத் திரட்டு

(ஏடுகள் 19 ; ஏட்டிற்கு 6 வரிகள்)

செய்யுட்களாக உள்ளன

Beginning ;

கஸ்தூரிக்குணம் விஷத்திற்குக் குழம்பு, பூதநாபகயச் சூரணம், பூபதி மாத்திரை, இஞ்சி ரஸாயனம், பூரணாதி லேகியம், அரையாப்பின் வரலாறு, அரையாப்பின் விபரம், மாங்கிஷ அரையாப்பின் குணம், ரெத்த அரையாப்பின் குணம், நரம்பரையாப்பின் குணம், மூளையரையாப்பின் குணம், தாம்பிரக்களங்கு, ரசக்களங்கு துரிசுக்கட்டு, பாலசஞ்சீவி மாத்திரை, உடுப்புச் சூரணம் கருங்கோழிச் சூரணம் முதலியன.

## கஸ்தூரியின் குணம்.

வில்புருவ மின்னே விளம்பக்கேள் கஸ்தூரி
நற்சிகப்பு ரஞ்சிதத்தில் நாவிரண்டு - தற்சுரூபம்
உண்டால் குணமுளதே உண்டாலறும் ரோகஞ்
சென்டாற்மூலை மாதே தெளிந்து கேள்—கொண்
டால்

வாயுபித்தம் வாதம் வகைமூன்றி லொன்றான
நோயுஞ் சிலேத்மனுட் புகையுந்—தோயவே
கண்டசுர சந்நி கபாலவலி தாதுநஷ்டம்
அண்டவாதங் குன்மமணுகாதே—யொன்
டொடியீர்

* * * * *

## மஞ்சட்காமாலையில் குடிநீர்

மஞ்சக்காமாலை கண்டவர்களின் சிறுநீரை ஒரு போத்தல் அல்லது கிளாசில் பிடித்துக் கொண்டு வரச் சொல்லி அதைப் பார்வையிட்டுக் கொண்டு அதில் ஒரு அவுன்ஸ் மற்றொரு கிளாசில் போட்டுக் குளவிந்தப் பொடியில் ஒரு பணவெடை போட்டுக் கலக்கிக் குடிக்கக் கொடுக்க. இந்தப்படி காலையில் 3 நாள் அல்லது ஆறு நாள் கொடுக்கக் குணமாகும் இது கைகண்டது. புளி தவிர்க்கவும்.

* * * * *

End :

உரோமரிஷி 500-ல் 47-வது ஏட்டில் அறுவகை செயநீர்.

கேளடா வெடியுப்புப் பலமோபத்து
கிருபைபெற வேணுமென்று வைசட்டிலிட்டு
தேளடா கொட்டுதற் போல் சுண்ணமாக
செப்புகிறேன் தேசியுட கபாலம் வாங்கு
கேளடா வாராமலிருந்து கொண்டு
கூட்டுவாய் பலமொன்று விள்ளக்கேளு
காளடா துரிசோடு சீனிக்காரம்
நலமான வெங்காரம் பூனீர் கூட்டே.

## 276 நெ. 172. குணவாகடம்.

(ஏடுகள் 70; பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் வாதரோகம், பித்த ரோகம் கபரோக வகைகள், க்ஷயரோக நிதானம், நீர்க்குறி, சூதகவாயு,

காமாலை நிதானம், விக்கல் முதலான ரோகங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

பூர்த்தியாக இல்லை. ஏடுகள் சிதிலம். 438 செ. செய்யுள் முதல் 801 செய்யுள் வரையுள்ளன.

Beginning ;

சந்நியீதென்றே

கடம்பமலரின் குழல்மாதே கருதிச்சொன்னே மறிவீரே
........து கேளாதிருத்தல் காலெரிவு கையெரிவு
போது சுவாச காசமுட்டணமும்...........  ........

End :

வாயுமுடம்பில் விஷம்போல ஏங்கிச் செல்லும் தந்தானே. (811) ஈசுர வருஷம் மாசி மாதம் 1ஹ குணவாகடம்...............எழுதின நன்மைக்கு மாங்கனி ராவுத்தர் குமாரன் சின்னயிசுமாலன்.

## 277. நெ. 173. நயன சாஸ்திரம்.

(ஏடுகள் 31 ; பக்கத்திற்கு 8 வரிகள்)

ஏற்கனவே " அகஸ்தியர் நயன விதி 500" என்ற பெயரில் அச்சிடப்பட்டுள்ளது. இதில் கண்ணோய் களும் அதற்கான மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

Beginning :

அல்லா உன் உதவி செய்ய. நாயனே உன்உதவி செய்யவும்.

தூரிதனை பகுந்தநூறு மகம்மது ஒழிவாலெல்லாம்
தேரினர் ஆதம்தன்னை திரிதின்ன ரோகந் தன்னல்
ஏறின வியாதிக் கெல்லாம் மருந்துண்டு லுக்குமானெனன்
றோதின ரகிமான் ஆதியொரு பொருள் காப்பதாமே.

அம்மானல்லா கிறுபை செய்யவும்.

கார்நிறை வண்ண மாலுங் கயிலையாங் கடவுளாலும்
தார்நிறையான வேலன் தந்திமாமுகனும் வேத
சீர்நிறை வடநூல்தன்னில் செப்பின நிதானங் கண்டு
பார்நிறைத் தமிழினலே பகர்ந்திடக் காப்புத்தானே. (1)

End :

## பஞ்சாதி மாத்திரை

பூலாவேர் தன்னுடனே பொன்பவழம் வெள்ளிமுத்து
சீலார்திப் பிலிபூரஞ் செம்புதுத்தம்—மேலாந்
தலையோடு ரோகணியுந் தானிம்பச் சாற்றிலுண்டை
விலகி விடுங்கண்ணோய்கள் விட்டு. (225)

கடைசி ஏட்டில்

சலியாதே மனமே அல்லாவுண்டு
சலியாதே மனமே அக்கெனுண்டு
சலியாதே மனமே
நிசலல்லா மருகேசற் அலியாற் குதவிசெய்த
அல்லா ஒருவனுண்டு
வலிதாயொரு மகனல் வய்யகம் யிளெந்து
(வையகம் இழந்து)
மிகமிகவே மனைவிதந்தை வீணில் பரிகொடுத்து

புலிபோலே முதலைவாயில் புடிபட்டு போன அந்த அலிபத்துச் சாயபின்னும்.

## 278. நெ. 174. வைத்திய அட்டவணை.

(ஏடுகள் தொடர்ச்சியாக இல்லை. பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் பித்தத்திற்கு மருந்து, ராசபூபதி, நாமவினோதம், சிந்தாதித்தைலம், பிரமியம், பிரமியக் கிரந்திக்கு மருந்து, தாதுவேளைச்சூரணம், இளம்பிள்ளைவாதத்திற்கு எண்ணெய், சொர்ணச் செந்தூரம், சிறுபிள்ளை ஏங்கல் குரைப்பிற்கு, படவாக்னி சூரணம், பரங்கிப்பட்டைச் சூரணம், சந்திகசந்நி லட்சணம், அஜீர்ண ஜ்வர நிதானம், துவங்கா சுர நிதானம், மாங்கிஷ சுரத்திற்கு அரக்கெண்ணெய், விரோசனத்திற்கு மருந்து, வெள்ளை விழுகிறதற்கு மருந்து, வாதகுடைச்சலுக்குத் தைலம், பருவாய் எண்ணெய், அமிர்தாதிக் கஷாயம், ஆனந்தபைரவன், திரிபலா தைலம், முகவாதத்திற்கு முட்டைத் தைலம், காதுவலி, சந்நிக்கு எண்ணெய், மூலவாயுக் கழிச்சலுக்கு மகோதரத்திற்கு, வயத்துக் கடுப்பிற்கு மருந்து முறைகள் முதலியவைகள் உள்ளன.

Beginning:

...... வைத்துச் சாறு பிழிந்து கொண்டு மென் பொடி சுக்கு மிளகு, திப்பிலி, போடச் செய்து அந்தச் சாற்றில் கலக்கிக் கொடுக்கவும். நிற்கும். மூன்று நாளே கொடுக்கவும். பத்தியமாக இருக்கவும்.

* * * * *

ஏடு 84

ஆட்டியே வழித்ததனைப் பாண்டத்தி லிட்டு
அப்பனே யமுரியதிலே பதக்கு விட்டுக்
கூட்டியே தேசியுட பாலும் நீரும்
குறையாமல் குறுணியதற் குள்ளே விட்டு
காட்டிலேவளர் கழுதைவண்டு சிவந்தபுள்ளிக்
கருகவது முப்பதுதான் கசக்கிச்சேரு
மூட்டியே கருநாவிச் சரக்கை யெல்லாம்
முப்பதுநாள் பணவெடையே பொடித்துப்
போடே. (22)

End :

காணப்பா திரண்டரச மெடுத்துக் கொண்டு
கலந்திடுவாய் வெள்ளியிலே நூற்றுக்கொன்று
பூணப்பா கலந்துகொண்டு தாமரை யினீராற்
பொருந்தவே சிலைகூட்டி யாட்டிக்கொண்டு
யூணப்பா குழிகெல்லி மெழுகிநன்றாய்
யுட்குழிந்து வலிந்திருந்த சூதம்வைத்து
தோணப்பா மருந்துவைத்து மூடிக்கொண்டு
சுகமாகச் சில்லிட்டுச் சீலைசெய்யே (98)

குறிப்பு :

செய்யுள் 22 முதல் 98 வரை தொடர்சியாக உள்ளன. நூலின் பெயர் விளங்கவில்லை.
கடைசி ஏட்டில்

வாகையிலை கொண்டுவந்து சாறுபடி வாங்கிக் கொண்டு சாவித்துட்டு, அந்தச் சாற்றிலே சாவித்துட்டு

இரண்டு தட்டு போட்டு, சீலே மண் செய்து கசபுடம் போட்டு மறுநாளேடுத்துக் கொண்டு, வெண்ணத்தூது வனை கொண்டு அரைச்சுக் கவுசம் கட்டி, சில மண் செய்து கிசபுடம் போடவும். மலந்து சுண்ணும்புபோல் நீறும். அதை ஈயத்திற்கு கொடுத்தால் மாத்து பத்து ஆகும்.

அல்லா துணை. பிசுமில்லா விற்றகிமானிற்றகீம்.

## 279. நெ. 175. அகஸ்தியர் குருநாடி.

(ஏடுகள் 35; பக்கத்திற்கு 9 வரிகள்)

இதில் நாடி நிதானம், வாத பித்தச் சிலேத்ம நாடி, நோய் விபரம், சயரோகக் குணம், சூட்டின் குணம், குன்மம், நீரிழிவு குணம், சோகைக் குணம், தச நாடி, குரு நாடியின் குணம், பூத நாடி, குருத்யானம், சீஷன் குணம், நாடி சூட்சம், நாடிப் பிரிவு, சீஷனுக்குப் புத்தி, சத்ததாது, பிராணக்குறி, கிராணி நிதானம், சந்நி நிதானம், சுரோணிதவாத நிதானம், மூர்ச்சை நிதானம் கிரிமி நிதானம் முதலியவைகள் உள்ளன.

Beginning :

திருவளரும் பொதிகையிலே சிறந்துமேவும்
சிவஞான தேசிகஸ் தீசர்பாடல்
குருநாடி நேர்மைதனை உரைக்க வேண்டிக்
குகநமசிவாயம ஞேன்மணித் தாயீன்ற

முருகர் சரவணப வன்றன் றுணைவனும்மும்
மதமும் முருகுலையுஞ் செறுகண்ணையிந்தும்
கரமுடனே அடியவர்கள் கருத்தில் மேவும்
கணபதிகா னனுதினமும் காப்பதாமே (1)

தேவிசகாயம்.

ஓங்காரங் கொண்டெழுத்தே பிரணவத்தின் செய்கை
யுடனிருந்து சூத்திரமா யுரைத்தவாரு
மாங்காரங் கொண்டதொரு மனத்தைத் தேர்ந்து
மருவுருவு மஞ்சரூப மென்னும் மாந்தநேர்மை
பாங்கான நாடிநரம் பானவாரும்
பழமறைதா னாராய்ந்து பாடிவைத்தே
நீங்காத கணபதியும் கந்தன்றானும்
நிசமாக வந்துதவும் காப்புத்தானே. (1)

End :

பண்புவன வாயுவெல்லாம் போகினு
நாளும் போகா ரன்புசெய் நல்லோர்
போல் நின்றுடல் வீக்கங் கட்டிவெந்தால்
வெண்டலை விட்டுப் போமே. (312)

முற்றும்.

## 280. நெ. 176. அறுசுவை ரஸவர்கம்.

(ஏடுகள் 46. பக்கத்திற்கு 5 வரிகள்)

இதில் பதார்த்தங்களின் குணம் செய்யுள் ரூபமாகச் சொல்லப்பட்டுள்ளது. தண்ணீரின் குணம், உலோக

பாத்திரத்தில் சாப்பிடுவதனலேற்படும் குணம், மூத்திர வர்க்கம், பால் வகைகள், தயிரின் குணங்கள், வெண்ணெய் குணம், நெய்யின் குணம், எண்ணெய் வகைகளின் குணம்,தேனின்குணம் - தானியவர்க்கம் - அரிசிகுணம், அவைகளின் வகைகள், கேழ்வரகு, பயறு, மொச்சை முதலான தானியங்கள் குணம், புஞ்சையில் நவதான்ய குணம், வெல்லம் சர்க்கரை, கல்கண்டு குணம், பழங்களின் குணம், காய்களின் குணம் முதலானவைகள் உள்ளன.

Beginning :

உலகமும் யாவையும் முணர்ந்து படைத்திடு
நு...............லையாயுரு வேதமும்—நேர்பகருந் தமிழாலே
சலமுடனறுசுவை ரசமெனும் வர்க்கஞ் சாத்திடவென்னுவில்
கலகலெனப் பதம்நடன மிடத்திரு கணபதி காப்பாமே. (1)

சொல்லிய மூலிகை பலவிதவர்க்கந் துடரும் அறுபதினல்
வல்லவராமேல் லவணமும் லோகமும் வளர்நவரத்னமும்
புல்லிய நாபிவிழ மதுவாகும் புகழும் பாஷாணம்
நல்லித குணமும் சொல்லியு நாவலர் நற்பதமென் துணையே.

ஆதிமுதல்வன் துணை.
முகைதீன் ஆண்டவர் துணை.

திருமணி மார்பன் தங்கை சகமருள் பொருட்டாலோக
திருவினை நீக்கியுண்ண இறங்கியே சிவனைக்கேட்க
அறுசுவை ரஸவர்க்கத்தை அறனும்மைக் கருளிச்செய்த
குருவெனும் நந்திகேட்டுக் குவலயந்தன்னிலீந்தார். (1)

பூமியில் முல்லைநெய்தல் புகழ்ந்திடும் மருதம்பாலை
நாமிது குறிஞ்சியைந்தில் சனிக்குமா காசப்பூண்டு
காமிது வருணன் தோன்ற கடாட்சித்த பரத்தினாலே
நேமிது சலமேவிந்தாம் நிறைந்திடும் பூமியெங்கும். (2)

* * * * *

End:

அரோசகம் பித்தம்வாந்தி அளவில்லா வெட்டைதீரும்
தராதர முருக்குமேகம் சாந்தமாம் மரவள்ளிக்கு
விரோதமாங் கிரந்திசூலை மெய்யெல்லாம் வலியுங்குத்தம்
மிராதிலே சேம்பைக்கந்தம் பெருத்திரும் பலனே
வுண்டே. (221)

தள்ளிய கரப்பான்சூலை துடித்தெழும் கபாலரோகம்
முள்ளிய நரம்பு சினண்டகாமாலை தீரும்
முள்ளிடும் மேகக்கல்லு... ... ... ...

## 281. நெ. 177. ரஸௌஷத மருந்துகள்.

ஏடுகள் பல காணப்படவில்லை.

(17 ஏடுகள் ; பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் ரஸவாத வித்தை, சீதஜ்வரத்திற்கு இராம பாணம், மிருத்திகா குளிகை, மகாசுரக் குளிகை, மகா ராமபாணக் குளிகை, சுராங்குசக் குளிகை, கனகசுந் தரம், யோகானந்த பைரவம், அத்தஹுதிச் சுரகுளிகை, உதயபாக்கரரஸம், ராஜம்ருகாங்க ரஸம், நித்யானந்த பைரவம், பிரதாபலங்கேச்வரம், கஸ்தூரி குளிகை, மகா சுக்கிர குளிகை, அக்னிகுமார ரஸம், அமுதேச்வர

ரஸம், சங்குபற்பகுளிகை, வடவானல குளிகை, நவலோ காக்னி குமாரன், சங்கார வைரவன், தாபச்சுரக் குளிகை சுரச்சூரணம், நவசுராந்தகம், ராஜமார்த்தாண்டம், அமுதானந்த வைரவம், மகா வீரபத்ர ரஸம், வீரபத்ர குளிகை, ஏலாதிக் குளிகை, சந்நிபாத அஞ்சனக் குளிகை சர்வச்சந்த பைரவம், நஸ்யம், அஞ்சனம், தேவாஞ் சனம், சந்நிபாத அஞ்சனம், அரிதாரக் குளிகை, ஏலா திக்குளிகை என்பவை.

Beginning :

சுத்திபண்ணின ரஸம் ஒரு தோலா, இந்துப்பு ஒரு தோலா, எலிப்பாஷாணம் ஒருதொலே, நவச்சாரம் ஒரு வராகனெடை, சவுக்காரம் ஒன்றரை வராகனெடை இது கூட்டி கருஊமத்தையிலைச் சாறுவிட்டு அரைக்கவும் ஒரு நாழி அரைத்து வழித்து, உண்டைபண்ணி பூதப் பல்லாகையிலே போட்டுப் பல்லாகைக்கு சாரிபத்துச் செப்புகின்றி போட்டு மூடி அஞ்சுசீலை மண்காட்டி பதி லசமாய் கோழிப்புடம் வைக்கவும். புடம் ஆறின பெடுத்து மருந்து எல்லாம் மேல் கின்றியிலிருக்கும். அந்த மருந்தை சூரிகத்தியினுல் வாழித்துக் குகையில் வைத்துருக்கினுல் மணியாம். ஒரு தொலே செம்புக்கு அஞ்சுபணவெடை கொடுத்தக்கால் வெள்ளி 5 மாத்துக் காணும்.

End :

## ரஸசெந்தூரம்

ரஸம். மனேசிலை, அருதாரம், கெந்தகம், நமச்சா ரம், நாகபற்பம் இவையெல்லாம் சமன் கூட்டி எருக்கம் வேர் கஷாயம், கொடிவேலி வேர் கஷாயம், வெள்ளெள் கஷாயம், திரிபலை கஷாயம், இஞ்சிச்சாறு, வெற்றிலைச்

சாறு இதுகளிலே ஒவ்வொரு நாளரைத்து எடுத்துக் காசிக்குப்பியிலடைத்துச் சீலமண் செய்து வாலுகாயந் திரத்திலே பதிஞ..............

## 282. நெ. 178. வால்மீகர் உறுப்புச் சூத்திரம்.

(ஏடுகள் 4 பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் மரணத்திற்கான லக்ஷணங்கள், உறுப்புகளில்காணப்படும் பேதங்களிலிருந்து இத்தனை நாளில் மரணமேற்படும் என்றும் அறிந்து கொள்ள உதவும நூல்.

Beginning :

உள்ளங்கால் புறங்கால் பள்ள முகத்திடுமுள்ளங்கையு
மெள்ளவே முழங்கைபள்ள மிகுங்கழுக் கூடுரெண்டுந்
துள்ளிய பிடரிதொண்டை சுற்றிய நெற்றிமூக்குத்
தெள்ளிய உச்சிசூத்திரஞ் செப்பவால்மீகர்தானே. (1)

இடதுள்ளங்காலே நீருமிசைந்திடும் வலதுகாலில்
சுடுவது நெருப்பதாலுல் தோன்றிய குளச்சல் தண்ணீர்
விடுவது போலேகண்டால் மிகும்பிணி தீராதென்னப்
படுவது திட்டம் சொன்னேம் பத்துநாள் சாவுத்தானே. (2)

End :

சூரியரோக மெல்லார் சூடதுபோல கண்டால்
பாரியுங் கையுங் காலும் பஞ்சதாய் வெதும்பிநின்றல்

சீரிய முழங்கால் நெற்றித் திறமுடன் காய்ச்சலுண்டாய்
ஆர்யமாலினுனே அவர்பிழைத்திப்பார் கண்டாய். (1)

முற்றும்.

குறிப்பு :

இதேபோல இன்னொரு பிரதியும் இதிலிலேயே உள்ளது.

## 283. நெ. 179. அகஸ்தியர் மூலிகை வர்மம்.

(ஏடுகள் 11. பக்கத்திற்கு 6 வரிகள்)

மூலிகை மருந்துகளை உட்கொள்ளுவதால் உண்டாகும் குணங்களைக் கூறுவது. முதல் நூல் அகஸ்தியரா லியற்றப்பட்டது. "மூலிகை பல மருந்தின் குணங்கள்" என்ற தலைப்பின் கீழுள்ள செய்யுட்களில் சட்டமுனி யுரைத்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளதால் இதனைத் தனிச்சுவடியாகவும் வைத்துக்கொள்ளலாம்.

Beginning :

தனதானதானன தனதானதானன தனதானதானன
தனதானதானன

தத்தன தனத்தன தத்தன தனத்தன
தத்தனதனத்தன தனதான

ச(ம்)த்தியுடனே வேர்விரையை உண்பவர்க்குக் கிராணி
மூலம்

தென்புடனே தீருமென்று கும்பமுனி தானுரைத்தார்

சித்திரபியதுமூலம் மெத்தாவலாயுலர்த்திக்
கந்தாகிலுங் கிஷாயம் வைத்தாகிலுங் குடிக்கில்

பித்தமொடு சீதமும் பெருத்ததொரு மேல்வயிறும்
அத்திசுரதாபமுட னித்தினைநோயேகிவிடும்.
நிலவாகை வேர்நுணுக்கில் மலைபோலு மூதும்வயிறு
குலைவாய் குலைந்துமது நிலையது போகும்நிசம்

★ ★ ★ ★

## மூலிகை பல மருந்தின் குணங்கள்

நடக்கினேன் நாலாயிரத்தி நானூறோடு
நாற்பத்து நாலுமூலி வகையைச்சொல்லி
கிடக்கினேன் கர்ப்பத்துக் கடுத்தமூலி
கலங்கினுய் புறுசொல்லக் கேட்டுக்கேட்டுத்
துடங்கினேன் வகைவிபரம் எளியதாக
தோருமல் கைமுறைகள் தப்பாவண்ணம்
முடக்கினேன் முத்துப்பேலொருகயிற்றில்கோத்தேன்
முதுமையாய் நிகண்டுக்குள் திறந்திட்டேனே. (1)

★ ★ ★ ★ ★

எரித்தெடுத்தால் சூதமதுங் குருவுமாகு
மிதுவழித்து எடுத்துடனே கல்வத்திட்டு
யெரித்ததொரு கஷாயமதை விட்டேயாட்டி
வில்லைபண்ணி பிராய்ச்சாம்பற் குள்ளே
பிரித்திடவே புதுவகலில் வைத்துமூடி [வைத்து
பிலக்கவே மண்செய்து காயவைத்து
நரித்தடவே நாற்பத்தோரு புடத்தைப்போட
நண்டாகும் (நன்றுகும்) சூதமது நயந்து
காணே. (15)

மூலிகை வன்மம் முற்றும்.
அல்லாவுதவி செய்யவும்.

End :

**சகல விஷத்துக்கு மருந்து**

| | |
|---|---|
| வெங்காரம் | பெருங்காயம் |
| தாளகம் | ரஸம் |
| இந்துப்பு | |

எல்லாம் சமநிறை பேய்ப்பீர்க்கஞ்சாறு விட்டு அரைத்துப் பயறளவுண்டை பண்ணிச் சகலவிஷத்துக்கும் கொடுக்கவும். தீரும்.

## 284. நெ. 180. வாகடத் திரட்டு

(ஏடுகள் 30. பக்கத்திற்கு 5 முதல் 7 வரிகள்)

இந்நூலில் 35-வது செய்யுளிலிருந்து 177 செய்யுட்கள் வரையுள்ளன. இந்நூல் இயற்றினவருடன் நூலின் பெயரும் தெரியவில்லை. புலத்தியருக்கு உபதேசம் செய்யப்பட்டவாறு உள்ளது.

இதில் பல அருமையான மருந்து முறைகள் உள்ளன. அவை பின் வருமாறு. இதில் பஞ்சதீபாக்னி லேகியம், பூமணிக் குளிகை, அர்த்தநாரீச்வர மாத்திரை, கோரோசனைக் குளிகை, கபாட மாத்திரை, சுயமக்னிக் குளிகை, ரஸசிந்தாமணிக் குளிகை, ஜலோதாரிமணி, கண்டங்கத்தரி லேகியம், சிந்தாதி லேகியம், மகா வில்வாதி லேகியம், சரயங்க வில்வாதி லேகியம், மகாகண்டகரீ லேகியம், திப்பிலி ரஸாயனம், அக்கினிமுகச் சூரணம், தாளீசாதி சூரணம், பஞ்சதீபாக்னிச் சூரணம், வல்லாரைச் சூரணம், ஏலாதிச் சூரணம், குமரித்தைலம், அச்வகந்தி பலா லாக்ஷா தைலம், வில்வாதித் தைலம்,

கொம்பரக்குத் தைலம், சந்தனாதித் தைலம், பிருங்காமலகத் தைலம் முதலான முறைகள் உள்ளன.

Beginning :

**வாதராக்ஷஸ மாத்திரை.**

போமப்பா வாதராக்ஷதனைக்கேளு
புதுமையாம் வேந்தனோடு நாதங்காந்தம்
சேமப்பா அப்பிரகம் தாம்பரபற்பம்
திறமாக அஞ்சுவிதம் சமனாய்க்கூட்டி
சாமப்பா வெள்ளைச்சா றணையின் சாற்றால்
தளமாக நால்சாம மரைத்தபின்பு
வேமப்பா சீந்தியுட கிசாயந் தன்னால்
வெகு சுறுக்காய் நால்சாம மரைத்திடாயே (15)

அரைத்திடுவாய் கொடிவேலி கஷாயந்தன்னால்
அப்பனே துளச ர திருபலைகிஷாயம்
அரைத்திடுவாய் வெவ்வேறே சாமமொன்று
அப்பனே மொத்தையாய் யுருட்டிக்கொண்டு
அரைத்திடுவாய் சாரணையி னிலையரைத்து
அப்பனே மருந்துள்ளே வைத்துமூடி
அரைத்திட்ட பாலைக்கே புடத்தைப்போடு
ஆகாகா பின்னெடுத்து வகையைக்கேளே (36)

End :

ஓடுமடா பிரமியங்களரிக் கிரந்தி
யுத்தமனே கத்தாழை நாற்றந்தீரும்
சாடுமடா அத்திசுரம் அஸ்திவெட்டை
சரீரத்தில் மயக்க மெல்லாம் சாந்தமாகும்

போகுமடா யித்தாயாலுல் புண்புரைகள்
புழுவெட்டுக் கண்டத்தின் மாலைதீரும்
தேடுமடா பொன்மேலே மோகமெத்தச்
சிக்காதே வலையினுள்ளே தெளிந்துநில்லே.
(177)

## 285. நே. 181. பதார்த்த குணம்.

(ஏடுகள் 13. பக்கத்திற்கு 6 வரிகள்)

பதார்த்தங்களின் குணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. காய்கறிகளின் குணங்களைத் தெரிவிக்கும் நூல்.

Beginning :

............................................ க்கும்
நெல்லிக்காய் செய்யும் நெறி. (5)

### அருநெல்லிக்காயின் குணம்

பெருத்திடு மரோசிதாகம் பிளைந்திடுங் காசம்விக்கல்
அறுத்திடுமரு நெல்லிக்கா யளைந்திடும் சந்நிவாதம்
பொருந்திடுஞ் சுரமும்பித்தம் போக்கிடும் வில்வப்பிஞ்சு
விரித்திடு முடல்நோயெல்லா மீண்டுமே நுணைக்காய்
தானே. (6)

End :

### மொச்சைக்காய்க் குணம்.

அனிலபித்தஞ் சிலேத்மங்கள் அத்தனையு முண்டாக்குந்
தொனியெடுத்த வாயுதுடருமே பிணியுலகிற்

கச்சப்போற் வென்றமுலைக் கன்னியரே! கேளுமியல்
மொச்சக்காய் செய்யுமுறை. (81)

## 286. நெ. 182. சட்ரச நிகண்டு

(ஏடுகள் 44. பக்கத்திற்கு 7 வரிகள்)

அறுவகைச் சுவையுள்ள பதார்த்தங்களையும் தனித் தனிவர்க்கங்களாகப் பிரித்து அவைகளின் வேறுபெயர் களைக் கூறும் நூல்.

அவையாவன

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மதுரவர்க்கம் | 1 | முதல் | 10 | ஏடுகள் | வரை |
| அம்லவர்கம் | 11 | ,, | 15 | | ,, |
| லவணவர்கம் | 16 | ,, | 19 | | ,, |
| கசப்புவர்கம் | 20 | ,, | 31 | | ,, |
| உரைப்புவர்க்கம் | 32 | ,, | 43 | | ,, |
| துவர்ப்புவர்க்கம் | 44 | | | | |

Beginning:

வையகத்திலுள்ளோர் வழங்கு பதார்த்தங்க
ளுய்ய வறுசுவையாயோதவே—பையவுமே
மெத்தவுமே நாடியுங்கள் மேவும்பதம் பணிந்தேன்
கத்தான நீ யிதற்குக் காப்பு.

பூவார் சிரகிரியிற் பொன்னிவர வழைத்த
மாவாரணமுகனை வாழ்த்தியே—நாவா
ராறுசுவை தேர்நிகண்டின் றரியத்தைச் செந்தமி
தேறுசுவை செய்தேன் தெளிந்து [மூல்

End :

**சித்திரமூலம்**

வன்னிகொடி வேலிவன்சித் திரமூலமா
மூன்னு மழற்கடவு ளொப்பாகுத் தூன்னி
வகை வகையாம் வாதங்கள் மால்விசர்ப்பி சேத்துமம்
பகை பகையாமென்றே பெயர் (42)

உறைப்புவர்க்கம் முற்றிற்று.

ஆக செய்யுள் 147

**குறிப்பு :**

இந்த சுவடியை சுலைமான் சாயபு எழுதியதாகக் காணப்படுகிறது. (ஏடு 10)

## 287. நெ- 183. கொங்கணர் நாயனர் பிற்காண்டம்.

(ஏடுகள் 50. பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் ஞான ஆதாரவகை, தேவி பூஜை, ரேசக, பூரக முறைகள். ரஸ வாதத்திற்கான ஞானபுத்தி மார்க்கங்கள், பெண் மாய்கை, சுக்லபஞ்சபூதம், யோகம் பழகுகிற வரிசை, பூஜாவிதி, பூசை மகத்துவம், வேதாந்த அனுபவம், வேதாந்த மவுன உபதேசம், பெண் பழித்தல், வாசிக்கரு ஞானம், வாசிசித்தி, வயசுநிர்ணயம், குளிகை, பஞ்சஇந்திரிய ஞானம், வஸ்துவினல் வஸ்துவிடுதல், தத்துவ வகை விபரம் முதலியன.

ஹரி ஓம் நன்ருகக் குரு வாழ்க. குருவே துணை.

Beginning :

பின்னை ஆயுதத்தை விரித்துச் சொல்வேன்
பேரான தொழில்கோடி வள(ழ)க்கங்கோடி
மன்னை குருகோடி களங்ககோடி
மருவியதோர் மெழுகுமுதல் குளிகைகோடி
தன்னை வதாரணச்சொல் விதிலே கோடி
தயங்காதச் சத்துவகைத் தொழிலோ கோடி
அன்னை பிறகாண்டம் பாதமென்றேன்
அதுவிட்டால் நடப்பேது அசடர்பாரே

மேருவின் கிழேநின்று விளங்கிய பொன்னைக்கேளு
காருவின் சம்புநீளக் கனியாலே பத்துமாச்சு
கோருவி னிணங்கன் தொட்டுக் கொள்கிய தொழிலைப் போலே
பாருவின்ஞான மார்க்கம் பகருறேன் கேளுகேளே. (க)

* * * * *

End :

பாடினதோ ராயிரத்தால் சித்தர்கோத்தார்
பலநூலையார் பரார்பரத்திறகிட்டார்
கூடினதோர் நந்திசொன்ன குறிநடிச்சுக்
குறையாகப் பூரணத்தின் குணமோவய்யா
ஆடினதோர் கண்டத்தில் கபடேயாளு
லாகாகா வாச்சரியம் மம்மாகேளாய்
தேடினதோ ரென்னூலில் சித்தவேயானல்
சீயென்பார் சித்தரென்று செப்பினேனே.
(124)

* * * * *

End :

உண்மையொத்த அப்பிரகச்சத்துக் கொக்க
ஆகோகோ யென்னசொல்வேன் சூதம்நேர்
வண்மையொத்த ஆத்தாள்க்கு மூத்தாள்நாத[தான்
மறுநாளில் பிறந்ததுதா னிமிஷயாச்சு
தன்மையொத்த மூணுநாள் கெந்தியாச்சுத்
தனிமூன்றால் சிவனடங்கித் தயங்கிச்சேர்ந்தார்
வண்மையொத்த வாதியென்றலறிந்து கொள்ளு
.............. ...................... ....... ............ (228)

## 288 நெ. 183 (b) கொங்கணர் வைத்யம் நாற்பத்தைந்து.

(ஏடுகள் 14. பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் அகஸ்தியர் மெழுகு, குமரகண்டவலி குணங்கள், பாண்டுவிற்கு, நீராமைக்கு, மேகநீர், குட்டநோய்க்கு மருந்து முதலானவைகள் உள்ளன. சுவடியில் 45 செய்யுட்களும் உள்ளன. கடைசியில் 47-வது செய்யுள் அபூர்த்தி. பொருளும் விளங்கவில்லை.

Beginning :

பூவுலகிலெந்தனுக்கு ஆசானை
புண்யகுரு போகருட பாதம்போற்றி
மூவுலகுந் தானறிய முன்னிதாக
மொழிந்ததொரு பூசைவிதி முதலதாக

சாவுடைய சாத்திரங்கள் சரக்குவைப்புத்
தயவுடைய தாயறியச் சாற்றினோம்நாம்
வாவுடைய வைத்தியந்தா னூற்பத்தைந்தில்
வனுவாகச் சொல்லுகிறோம் வகுத்துக்கேளே. (1)

கேளப்பா வைத்தியத்தில் ரெண்டுலட்சங்காப்பு
கெடியான பொதிகைஅய்யா சொன்னார் சொன்னார்
நாளப்பா அவனியுள்ள வைத்தியர்க்கு ஞாலமுடன்
பார்ப்பதற்கு நாட்டான் செல்லும்
தாளப்பா தரணியுள்ள மானிடர்க்குச்
சாற்றுகிறேன் தயவுடனே நோயின்கூறு
ஆளப்பா அறியாதோர் ஈசன்சொன்ன
அழகான வைங்கரத்தோ னடிதான்காப்பே. (2)

End :

கேள்ப்பா யேலமொடு சூதங்கெந்தி
கெடியான காக்கனூன் வித்துவாழு
கூர்மையுள்ள வீரனும் விராகன்ரெண்டு
ஓமமொடு குரோசானி விராகன்ரெண்டு
உன்னுதலை யரத்தையது விராகன்ரெண்டு
சேமமெனும் வகையது தானெல்லாம்வாங்கி
சிவந்நிற மாய்வறுத்துப் பொடிதான் செய்து
சொக்காமல் சொக்கிக்கொள்ளுபல
மூன்பறின்சத் தாகுபைமு அரிபிராமாரியோன்
சண்டலதலறில் முலறல்

முறுமைமுரு மையதனை முய் தன்னதோ
அஞ்சுக்கு பயம்சோதிநு மனுல்லாசேற்
சோருமை நோலியினள் கேளு

---

## 289. நெ. 183. (c) திருமூலர் தீட்சை பத்து.

(ஏடுகள் 14 முதல் 10. பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் திருமூலர் தீட்சை பத்து, திருமூலர் தீட்சை மூன்று. கௌசிகர் மாமுனி குழம்பு, சில்லரை அட்டவணை வைத்தியம், கொங்கணர் ரண காண்டம் முதலியவைகள் உள்ளன.

Beginning :

ஆதியென்ற குருமூல நாதர்தானும்
அருள்பெற்ற தீட்சையது சொன்னார்சொன்னார்
போதியென்ற அடிதெடுத்து உள்வையென்று
போதித்தார் மனமகிழ்ந்து கூறல்செய்தார்
வேதியென்றே கடலுப்பை யுபரியாச்சு
வேதாந்த சாரமதே சாரமாச்சு
சாதியென்ற குலமென்று ஒன்றுநாலே
சகலமுதற் றிருமூலர் காப்புத்தானே. (1)

தானென்ற ரெண்டைத்தா னேட்டிப்பாற்கில்
தயங்காது சிரோமென்று வகாரமென்றும்
ஊனென்று ரெண்டைத்தா னிருக்கிப்பார்த்தால்
ஒகோகோ தசதீட்சை யதுகாணுங் காணும்

பானென்ற யிவ்வெழுத்தை ஓட்டிபார்க்கில்
பாரெழுத்து மூனுங்காணும்
வானென்ற ஆகாசங்கட்டிக் கட்டி
வாகான யீரெழுத்தும் நாலுமொன்றே. (1)

End :

முத்தென்ன தேகமது அழியாதப்பா
முகமான தசதீட்சை பத்துக்குள்ளே
சித்தென்ன தேகமகா மேருக்கொப்பாய்
சிவசிவா வென்றெல்லோ தெளிந்துபாரு
குத்தென்ன வெழுத்ததுவே சொல்லப்போகா
குருமொழியா யறிந்தவனே காணவேணும்
பத்தென்ன ஆஊ ரெண்டு மொன்ருய்
பார்த்துரைத்து மனத்தேறிப்பாரே. (1)

திருமூல சுவாமியார் தீட்சைமுத்தே

ஏடு 47.

## திருமூலர் சுவாமி சூத்திரம் மூன்று

ஆவென ஊமமந்த தேகாபத்தாம்
ஈவென்ன வென்று யிசைந்தோர்நாலு
ஊவெனக் கொண்டுபொய்யுள் ளறிவாளற்கு
சீயென யீசன் றெளிந்துரைத்தாரே (1)

உரைத் தோரஞ்சு பூதத்தினுறவே
மறைத்தது வென்று மறைத்தார் பெரியோர்
கரைத்தது வென்று காணவல்லோர்க்கு
நிறைத்தது வாகுநீள் சடையொக்குமே (2)

ஒக்குமே சூத்திரம் ஒரு மூன்று பாட்டில்
தக்குமே வாசினி தெளிந்துரைத்தேன் (3)

## குழந்தை மாத்திரை

சுத்திசெய்த வாளமொன்று வேம்பாடத்தோல்
சொலுங்காயம் வகைக்கரையாம் பலஞ்சாதிக் [காய்
நத்தரைக்கால் பலங்கருஞ்சீ ரகம்கஸ்தூரி
நாமமஞ்சள் வகைக்கேகால் பலமதாகு
மித்தனையு மேனிச்சாறு விட்டுநன்று
யிரண்டுசாமங் களரைத்து மிளகுநேரா
யுத்தஉண்டை செய்துநிழ லுலர்த்திப் பின்னை
கொங்கனுபா னமங்களறிந் துண்மையாய் செய்யெ.

* * *

End :

## வலிப்புக்கு

| | |
|---|---|
| கெந்தகம் விராகனெடை 1 | |
| மனோசிலை | ,, |
| துருசு | ,, |
| லிங்கம் | ,, |
| தாரம் | விராகன் 1 |
| துத்தம் | ,, |
| ஊசிக்காந்தம் | ,, |

அரைப்பு : குமரிச்சாறு

நாள் : 15.

குளிகை: பணவெடை தேனில் கொடுக்கவும்.

குறிப்பு :

சில்லரை அட்டவணையில் கீழ்க்கண்ட மருந்துகள் உள்ளன.

கொடிவேலி எண்ணெய், நாரிமேகத்திற்கு அப்ரகச் செந்தூரம், அஷ்டாக்னி பூபதி, தொப்புளில் தடவப் பேதியாகும் முறைகள், பூச்செண்டில் முகரப் பேதியாகும் முறைகள், காரீய பற்பம், ஈசுரபூபதி, தாளக பற்பம், ரசச் செந்தூரம், நாகச் செந்தூரம், ரஸ செந்தூரப் பிளாஸ்திரி, மந்திரம், சலகுலாந்தகன், ரஸப்பதங்கம், குருபற்பம், கௌசிகர் குழம்பு (ஏடு 62 முதல் 68) தட்சிணாமூர்த்தி எண்ணெய், கண்ணோய்க்கு மருந்துகள், அயமுருக்கு முறை,முகவங்குக்கு மருந்து,சிவசிங்கய்யாத்தாதுபுஷ்டி லேகியம்,சூலைக்கு,பேதிக்கு,கர்ப கேசரி, வயிற்றுக் கட்டிக்கு, லகுசிந்தாதி லேகியம், விஷ பாண்டுவிற்கு அயனாதி வடகம்,பாசுபதாஸ்திரக் குளிகை, கெந்தக பற்பம், சீனச்சுன்னம், ரஸக்கட்டு, பல்லசைவுக்குப் பொடி, (ஏடு 81), கிராணி, மூலத்திற்குத் தயிர், மதன சேரக் குளிகை, சூர்ண ராசன், வெள்ளைக்கு, பேரண்டச் சுன்னம், தெற்குத்திக்கண இழுப்புக்கு (95) வல்லாதி லேகியம்,அந்திரவாதத்திற்குப் பத்தியம், காதுசீழுக்கு, சலமஞ்சரி, தாளீசபத்திரிச் சூரணம், திலகம், தொண்டைக் கம்மலுக்கு, அஸ்திஜ்வர கஷாயம், குந்துருக்க மாத்திரை, லிங்கபற்பம், கல்நார்பற்பம், தாளக பற்பம், சூடன் வைப்பு, கைகால் பிடிப்பிற்கு, வஜ்ஜிர கபாடம், வெட்டுப் பெருமாள் சூரணம், சுரவீரபத்திரன், குக்குலாதி வடகம், பஞ்சாக்னி பூபதிச் செந்தூரம், முதலான முறைகள் உள்ளன.

கடைசி 2 ஏடுகளும் இந்த சுவடிக்குச் சம்பந்தமில்லை

# 290. நெ. 184. வைத்தியத்திரட்டு

(ஏடுகள் 228. பக்கத்திற்கு 8 வரிகள்)

குறிப்பு :

5-வது ஏட்டிலிருந்து 172 ஏடு வரையில் ஒரு பகுதி. அதற்குப்பின் 1 முதல் 24 ஏடு வரை மற்றொரு பகுதி. பின்னர் எல்லா ஏடுகளும் ஒரே பகுதியாகவும் காண்கிறது

இதில் சூலை, குன்மம், வெப்புப்பாவைக்குச் சூரணம் தாளக பற்பம், இருமல், காசத்திற்குத் தைலம், மாவலிங் கத்தைலம், சோகைக்கு மருந்துகள், கண்களுக்கு மருந்து முறைகள், சிலேத்மப் பிடிப்பிற்கு, நீர்க்கட்டுக்கு, வயிறுஉப்பி, இசிப்பு சன்னிக்கு, எலிகடிக்கு, கருங் கோழிச் சூரணம், (21), காதில் ஈ புகுந்தால் மருந்து (23) பெரும்பாட்டிற்கு, அக்கினி குமாரன். தாமிரச் செந்தூரம், துறைமுகம் காணுதாருக்கு மருந்து, (பிரவிடையாக) நஞ்சு தின்றோருக்கு. ஆசனகண்டமாலைக்கு (28). செங் குட்டத்திற்கு, வெண்குட்டத்திற்கு, மலட்டுவகைக் குறிப்பு அறிய (53), தந்தவாயு. மூலகிராணிக்கு, மலட்டிற்கு மருந் துகள், தன்னைக்கட்டு மந்திரம் 87, பாம்புத்தடை தீர மந்திரம், விஷங்களுக்கு மருந்து, படுவனுக்கு மருந்து, களிம்பு வகைகள், சுரத்திற்கு (குளிர்), நாராயணத் தைலம் (114) கக்குவானுக்கு, குக்கிலாதி, கர்ப்பூராதி சூரண வகைகள், தேள் கொட்டிற்கு நசியம், (128) இலைக்கள்ளி கற்பம்,குழந்தைகள் தோஷங்களுக்குச் சக் கிரம் (132), பெரும்பாட்டிற்குச் சக்கிரம், வச்சிரவல்லித் தைலம், சந்நிக்கு மருந்து, கெந்தகபற்பம், மேகநாத உருண்டை, மாந்த எண்ணெய், பிள்ளைப்பிணிக்குக் குடி

நீர், நீராமைக்கு மருந்துகள், கடுகு வகைகள், பிள்ளைப் பெறக் குளிசம் (15) விளைதம் தேங்காய் உடைய (12), விநாயகத் தோத்திரம் (21), தாமிர பற்பம், வெட்டைக்கு நெய், சுளுக்கு சக்கரம், வலிப்பிற்கு மருந்து முதலியவை கள் உள்ளன.

Beginning :

அளந்து சின்னச்சட்டியில் வைத்து மிதக்கத் தேன் வார்த்து மூடிச் சீலமண் செய்து அடுப்பில் வைத்து வெந்த பிறகு எடுத்து நாக்கில் தேய்க்கவும். நாவறட்சி தீரும். வேறு.

கொடிவேலி நாயுருவி புரசம்பட்டை
குலைவாழைச் சருகுடனே குப்பைக்கீரை
நெடிதான பிரண்டையுடன் எள்ளுச்சக்கை
நீர்முள்ளி புளியந்தோல் நிகரில்சங்கு
வடிவாக வெவ்வேறு சுட்டசாம்பல்
வனங்காட்டுக் கறணையறிக் கறணைமூலங்
கடிதான பழுபாகல் கண்டங்கத்திரி
சிவதைமுள்ள வேர்வேரன்னப் பெருமருந்து

* * * * *

End :

அந்திசந்தி மூனுநாள் கொடுக்கவும்.

**பத்தியம் :**

புளி, புகையிலை விடவும். 3 நாட்கள் சென்ற பிறகு பால்,நெய், தயிர், கூட்டவும். மருந்து விலை 12 வாங்கிக் கொள்ளவும். வாதசுரத்திற்குத் தேனில் கொடுக்கவும். பித்த சுரத்திற்குப் பொடுதலைச் சாத்தில் கொடுக்கவும். புளி, புகையிலை....... ..........

## 291. நெ 185. (a) அகஸ்தியர் குருமுப்பு ஐம்பது.

(ஏடுகள் 17. பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் லிங்கக்கட்டுச் செம்பு, முப்பு எடுக்கும் முறை, இதன் மூலம் வைத்தியம் செய்யும் முறை, அயம், காந்தம் அப்பிரக நவநீதம், கெருடக்கல், கல்நார், அண்டக்கல், சங்கு, சலாசத்து, நவரத்னங்கள், மனித அஸ்தி, மான் கொம்பு, ஆமையோடு இவைகளை மணியாகச் செய்யும் முறை முதலானவைகள் உள்ளன.

Begiuning :

வானும்புவியும் மதியுங்கதிரொளியுந்
தேனுள்ளிருந்த சிவகுருவே - மிவைதானுந்தான்
நான் மறையுமா ராய்ந்து நன்னூலன்பதையும்
கோலமுடன் கணேசரருள் கூறு. (1)

மயமான முப்பூவின் மார்க்கந்தன்னை
வைத்தியத்திற்காதியாய் விரித்துச்சொல்வேன்
செயமான கணபதியும் கந்தன்தானும்
சிவனோடுமை பார்வதிநிர்வாணி தானும்
நயமாக வெப்போதும் முன்னேநின்று
நாடியே முப்பூவை நயந்துகேட்க
மயமாகச் சொல்லுகிறே னென்பதற்கு
வைத்தியர்காய் யெப்போதும் வணங்கிக்
கேளே. (1)

வணங்குவது யாரையென்றால் குருவின்பாதம்
வாலையுடன் சிவன்பாதம் நிர்வாணிபாதம்

வணங்குவது கணபதியுங் கந்தன்தானும்
வாகாகப் பூசிக்க வரிசையாகும்
வணங்குவது அன்பதற்கும் முப்பூவப்பா
வாதத்திற்காதியிது வைத்தியத்திற்காகும்
வணங்குவது அன்பதையும் வணங்கவேணும்
வைத்தியத்திற் குயிரிதுதான் வாதிகாணே. (2)

End:

காலான வைத்தியத்தை உறுதியாகக்
கைமுறைகள் தப்பாமல் கருவாய்ச் செய்தால்
பாலான நிறமுடைய பிரமனுவான்
பாரிலே வாழ்வதற்குக் குருவுமாவான்
சேலான திருவுடைய செல்வனுவான்
சிந்தையிலே களங்கமத்தால் சித்தனுவான்
நாலான மணிபோத்தும் பிரமன்சொன்ன
நலமுடைய முனிவன்மொழிநாடிமுத்தே. (50)

## லிங்கக்கட்டுச் செம்பு

இரும்பு, செம்பு, காயாம்பு ரெண்டு குத்துப் பழச் சாறுவிட்டு, அரைத்து, அரப்பொடியில் பிசறி மூன்று நாள் வைத்துக் கழுவிப் போட்டுக் குகையிலிட்டு வெங் காரங் குடுத்துருக்கும் செம்பு-ஆவின் வெண்ணெய் பலம் 30ம் நன்ருய் சுத்திபண்ணி லிங்கம் விராகனெடை 5சேங் கொட்டை விராகனெடை 20 நன்ருய் யிடித்து வெங் காரம் லிங்கத்திற்குக் கவசம் கொடுத்துச் சேங்கொட் டைக்குள் வைத்துச் சட்டியில் வைத்து வெண்ணெயிட்டு அடுப்பெரித்துத் தீக்கொளுத்தி வந்தால் கட்டும்

## 292. நெ. 185. (b) அகஸ்தியர் பச்சை பதினறு.

(ஏடுகள் 18 முதல் 22 வரை ; பக்கத்திற்கு 7 வரிகள்)

இதில் அரிதாரபற்பம்,வெள்ளைப் பாஷாணப்பற்பம் காந்தச் செந்தூரம், ஆவாரங்கரி, லிங்கச்சூரணம்,மூலத்திற்கும்,பவுத்திரத்திற்கும் புகை சங்கிக்கு மூச்சிலிழுக்கும் புகைவகைகள், வல்லாதிச் சூரணம், கெந்தித் தைலம் முதலியவைகள் உள்ளன.

Beginning ;

அரிதாரம் பிரிதிவி யாகிநிற்கும்
ஆனதொருசவ்வீர மப்பூவாகும்
பெரிதான கௌரியது வாயுவாகும்
பின்னுமொரு வெள்ளையுமோ தேயுவாகு
மரிதான லிங்கமது ஆகாசமாகும்
அப்பனே பச்சையுட னுடலாகும்
தெரியாத வைத்தியரே யின்னூலப்பா
சித்தரய்யா சொன்னவித்தை சகத்தில் காணேன். (1)

செகத்திலுள்ள வைத்தியரே செப்பக்கேளு
திறமான அரிதாரக் கட்டிவாங்கி
சகத்திலே சுண்ணாம்புக் குள்ளேவைத்து
சுத்திசெய்து தானெடுத்து வைத்துக்கொண்டு
அகத்திலே மனிதருக்கு ஈளைகாசம்
எலிகடிகள் விஷபாக பித்தம் பாண்டு
மகத்தான குளிர்காய்ச்சல் மருளக்கொண்ட
வரப்பட்ட நோய்களுக்கு வையே சுக்கில். (2)

End :

தாரமும் ரஸமுங் கெந்தி
சரியதாய்த் தூளேசெய்து
பாரமாஞ் சீலேதன்னில்
பரப்பியே திரியுருட்டி
வீரமாம் விளக்கில் போட்டு
வேப்பெண்ணெய் தன்னைவார்த்து
கோரமாம் விளக்கில் வந்த
கொடுபுகை மூச்சிலேத்தே. (15)

ஏத்திடில் சந்நிதோஷம்
யெழும்பிடில் குஷ்டரோகம்
பார்த்திடில் பரங்கிச்சூலே
பலகடி முதலாயுள்ள
பேர்த்திடில் தீருமென்றே
பொருப்பின்மே லிருந்தோர்சொன்னர் (16)

குறிப்பு :

கடைசி ஏட்டில் "வல்லாதிச் சூரணத்தின் முறையும், கெந்தித் தைலம் செய்யும் முறையும்" தனியாகக் கூறப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் காலியான ஏடுகளில் ஒன்றில் கீழ்கண்டவாறு காணப்படுகிறது.

ஏயல் விசுமீல அல்லா உதவிசெய்யவும்.

வாகடநிகண்டு

அடையெலி - கடுக்காய்
அரிதகீ - கடுக்காய்
அமுகங் - கடுக்காய்

ஆமதனங் - கடுக்காய்
ஆனைந்தா - தான்றி
அம்பலத்தீ - தான்றி
அந்தகோர் - நெல்லி
அருக்....காணி - சுக்கு
அரும்பா - மிளகு
ஆலினந்தானே - திப்பிலி

## 293. நெ. 186. தன்வந்திரி சிந்தாமணி.

(ஏடுகள் 10. 8 முதல் 9 வரிகள்)

ஒவ்வொரு அவயவங்களிலும் உள்ள நாடிவகைகள் - நாடிபார்க்கும் விதம் - திரிதோஷங்களின் குணங்கள். காலக்குறியறிதல் - அவத்தை பேதம் - அறுசுவைக் குறிப்பு - நீர் குறியறிதல் - தந்தக்குறியறிதல் இவைகள் உள்ளன.

Beginning :

செப்பிய மாதுக் கிறைவன் முன்செப்பிய
துய்யவாயுள் மறைபெற்றிலங்கிய
மெய்ய மாதவர்க் கெய்திய மெய்பொருள்
அய்யன் தன்வந்தரிக் கருள்கூறினரே. (1)

ஓதுநாடித் துகையு மதிலுறு
வாதப்பித்தச் சிலேற்பன வண்மையும்
பேதமான வியாதியிற் போகமும்
ஆதியான அருந்தவனோதினன் (2)

End :

**தந்தக்குறியறிதல்**

விளங்கி வாதரோகித் தந்தமே கறுத்திருக்கும்
பளம்படு பித்தரோகி பல்லுமஞ்சணிக்கும் மானே
உளங்கள் சேர்பன்னரோகிப் பல்வெழுத்திருப்ப துண்மை
துழங்கிடா தறிந்து கொள்ளுங் குறிகண்டு சாற்றலாமே. (55)

தன்வந்திரி சிந்தாமணி முற்றும்.

## 294. நெ. 186. (*a*) காவ்யத்திற்குச் சுருக்கம் பதினாறு

சட்டைமுனி புலத்தியருக்கு உபதேசம் செய்வதைப் போன்றது. யோக சாஸ்திர விபரங்களும், ஞான காண்டம், ராஜயோகம், அடயோகம் முதலானவை களும் உள்ளன.

Beginning

ஆதிமறை சாஸ்திரங்கள் பிறந்தவாறும்
அடிமுடியின் நடுவாகிப் பொன்மூன்கிற
வேதியனும் மால்சிவனும் நின்றறுவாறும்
வேதமுத லாகமங்கள் பிறந்தவாறும்
சாதிபல தொழில்முறைக ளானவாறுந்
தன்னுள்ளே அஷ்டாங்கஞ் செய்யும்வாறும்
ஓதிய நூலவரவர்கள் செய்தவாறும்
ஓமகா ராசகண பதிகாப்பதாமே. (1)

காப்பான கணபதியை யெழுப்பி மேலேக்
கருத்தினால் மனம்மகிழக் கருதியுள்நீ
செப்பான தீபமதிவச் சாற்புண்டு
சிவசிவா நடுவாகி நிலையில்நின்று
கொப்பான புலத்தியனே நாதத்தூங்கும்
கும்பகமே சதாநித்தியம் மனதில்பூண்டு
வாய்ப்பான லதுவல்லோ மௌனயோகம்
மத்ததெல்லா யோகமில்லா மடையர்தானே. (2)

End :

காணப்பா காவியத்திற் காகவிந்தக்
கருப்பொருளை பதினாறாய் கருதிச்சொன்னேன்
வீணப்பா யென்றுசொல்லி யிந்தநூலை
வெளிவிட்டால் ஒங்களுக்கு யென்மேலாணை
ஆணையப்பா முக்காலு மாணையாணை
அறிந்துணர்ந்த ஞானிகளை அடுத்துச்சேரும். (16)

குருபாதமே சக்தி - காவியத்திற்குச் சுருக்கம் எழுதி நிறைந்தது. 994 வருஷம் மாசி மாதம் 12உ. தேவி சகாயம்.

## 295. நெ. 186. (b) பதார்த்த குணம்.

(ஏடுகள் 7. பக்கத்திற்கு 6 வரிகள். அபூர்த்தி)

இதில் முதல் ஏடு காணப்பட வில்லை. 10 வரை யுள்ளது. இதில் கடை மருந்தின் தொகுப்பு 64. அவற்றின் குணம், குரு பற்பம் செய்யும் முறை முதலானவை அடங்கியுள்ளன.

**Beginning :**

வெடியுப்புக்கட்டிப் போகும்.

தேமேதான் சீரகந்தான் பித்தத்தையறுக்கும்
சிறந்தகருஞ்சீரகந்தான் கிருமிபோமே (3)

போமென்ற சதகுப்பை யுதிரவாதம்போம்
புகழ்கின்ற கானகத்தின் சதகுப்பைதன்னால்
கோமென்ற குட்டங்கள் குடியள்போகும்
குணமான வெந்தயந்தான் எரிவுபோகும்
தேமென்ற கொத்தமல்லி சிலேற்பனத்தை
யுருக்குஞ்
சிறப்பான வசம்புதான் கிராவணத்திற்காதி
காமென்ற கடுக்காய்தான் ஆடிக்கல்பமாகும்
கருதியதோல் நெல்லிக்காய் உஷ்ணம்போமே.
(4)

**End :**

ஆமென்ற கடைமருந்தின் தொகுப்பைச்சொன்னேன்
அறுபத்து நாலுடப் பேரைச் சொன்னேன்
கோமென்ற குருபற்பம் முறையாய்ச் சொன்னேன்
கொடுக்கின்ற வயணமொடு குணமுஞ்சொன்னேன்
காமென்ற காயசித்திக் கெடுத்தமூலி
கலந்துநின்ற பேரையெல்லாம் கருவாய்க்கேளு
தேகமென்ற சிவ................................................ .. ... ....

**குறிப்பு :**

இதற்குப் பின் தனியான ஏட்டில் கீழ்கண்டபடி எழுதப்பட்டுள்ளது.

எண்மூன்று ருத்திரனிருமூன்று சத்தியு
மண்ணை யளந்தான் மனைப்பாகம் நாலுமாய்
கண்ணான பெண்ணால் கலந்தரைத் தேத்திட
ஒண்ணாஞ் சிகப்பு உறுதியாம் பாரே. (I)

கணபதியே நம: சரசுபதியே நம: குருவே துணை. குமரன் துணை, வேலுண்டு விடயில்லை, மயிலுண்டு மலை யில்லை, கணபதியே சரசுபதியே நம, குருவே துணை உண்டாக.

## 296. நெ. 186. (c) பூரணச்சாத்திரம்

(ஏடுகள் 53; ஏட்டிற்கு 8 வரிகள்)

இதில் சவுக்காரம் செய்யும் முறை, சரியை, கிரியை, யோகமார்க்கங்கள், பூனீர்வித்தை, குண்டலிச் சக்தியை எழுப்பும் விதம், ஆறு ஆதார சக்கரங்களின் விவரணம், சிவதீக்ஷா விபரம், (11) வாலை தீட்சை, சுப்ரமண்ய தீட்சை, மூதண்ட லேகிய கற்பம் முதலானவை, வல்லாரைச் சூரணக் கற்பம், காந்தகிண்ணி முறை, ரஸமணி செய்யும் முறை, சித்தரின் முத்திரைகள், முப்பூ எடுக்கும் விதம், சவுக்கார வைப்பு, கற்பம் சித்திக்கும் தலங்கள், பூமிநாதம் கிடைக்குமிடம், சிலாஜித்து விளையுமிடம், அப்ரகம் கிடைக்குமிடம், சோதிவ்ருட்சம் இருக்குமிடம், கொங்கண சித்தர், பிள்ளைச் சங்கிலி சித்தர், சித்தர் தங்குமிடம்,கருநெல்லிக்கற்பம்,வசியம்,கழுதைக்கொழுப்புக் குணம், குழிக்கல் செய்யும் விதம், ஜபமாலைக் கணக்கு, முதலானவைகள் காணப்படுகின்றன.

**Beginning:**

நன்ருகக் குருபாதமே கெதி

கார்சொறி மெய்யன் வெண்மைக் கடவுளுங்
காணுப்பாதம்
போர்பொரு ளுண்மைதன்னைப் பூரணநூலி
லொத்தத்
தார்செறி கொன்றைச்சூடித் தாயசர் சோதிக்
கந்தன்
ஆர்மத வானைப்பிள்ளை யார்பதங் காப்பதாமே.

தேவி சகாயம்.

ஒன்ருன பூரணமு மாருதார
முரைத்ததற்கு மேலாறுந் தொண்ணூற்ருறு
பன்ருன தீட்சைபதி னென்றுரட்டி
பத்துடனே முப்பத்துரண்டுதீட்சை
என்ருன சமாதிகற்பம் வாசிநேர்மை
இயல்பான சிவயோகம் பிராணயந்தான்
நன்ருன வாதத்தின் தீட்சையோடு
நலமான சவுக்காரத் திறவுகோலே. (1)

**End:**

மாளாமல் மாண்டிருந்தால் யோகியாச்சு
மார்க்கமந்தப் படிதானே மெஞ்ஞானிக்கு
ஆளாம லாண்டிருப்ப ரானுந்தாயு
மதிவஸ்து அனுதிவஸ்து ரண்டுந்தானுங்
கேளாமல் கேட்டிருப்பார் நடனவோசைக்
கிரிகையென்ன மனமங்கே புக்கிப்போகு
வாழ்வான வாழ்வுசிவ யோகவாழ்வு
மற்றதெல்லா மாய்கையென்ற வாழ்க்கையாமே
(214)

## 297. நெ. 186- (*d*) அகஸ்தியர் பூரண சூத்திரம். பன்னிரண்டு.

(ஏடுகள் 7 வரிகள் 9.)

இதில் அகஸ்தியர் புலத்தியருக்குத் திராவகமுறையைக்கூறுகிறார். வாதியின் லெட்சணம், பூனீறுதீட்சை, சூடன்னீறு, கல்சுண்ணை உப்பு முதலியவைகள் உள்ளன.

Beginning :

பொன்னான திராவகமாங் குருமுறைக்கும்
புகலவில்லை பதினென்சித் தாதியெல்லாம்
பன்னான சூடனொடு எவச்சாரஞ் சீனம்
பாரன்ன பேதிவகை பலந்தானென்று
தன்னான வெடியுப்புப் பலந்தானுலுச்
சாதகமாய்ச் சாரமது பலந்தானனு
மின்னான மந்திரமோ படினுலுக்குள்
விளங்கவே மருந்தையெல்லாம் பொடித்துப் போடே. (1)

போட்டேதான் கிண்டிநன்று யுறவேசெய்து
புகழான யெந்திரத்தி லடைத்துக் கொண்டு
மாட்டவே திருகுகள்ளி விறகால்கிண்டி
மாட்டுவாய் சாமத்துள் வருநீரெல்லாம்

* * * * *

End :

கட்டியதோர் வில்லைதன்னை ரவியில்போடு
காய்ந்தபின்பு சுண்ணத்தி லெரித்துவாங்கு

அட்டியென்ன புரியட்டம் பூரணத்திேைடு
அஜோந்தரசாய் சுழிமுனேயில் நந்திமுளப்
பட்டினல் பலனிதுவே சூத்திரமே யானல்
பலிக்குமடா வாதமொடு வாசிபோகம்
விட்டகுறை பூரணத்தைப் பாடப்போய் நான்
வேதாந்த வார்த்தையை வெளிவிட்டேனே.
(14)

பூரண சூத்திரம் முற்றும்.

குருபாதமே கெதி.

## 298. நெ. 186. (e) சுறுக்கம் பன்னிரண்டு.

(ஏடுகள் 5 முதல் 7 வரை. பக்கத்திற்கு 9 வரிகள்)

கடுங்காரம் செய்வகை (வாதத்திற்கான) துரிசுச் சுன்னவைப்பு, உலோகங்களைக் கட்ட, ஈயம் செய்யும் விதம், வெள்ளிவேதை செய்யும் முறை இவைகள் உள்ளன.

Beginning :

காரமென்றல் பல்லியுட கல்லேகாரங்
காரத்தில் கடுங்காரம் மெத்தவென்றல்
சாரமது பூகை மெடுத்துவந்துச்
சாதகமாய் சலிலத்தாலே யெழுசுத்தி
வாரமுடன் சிறுநீரா லேழுசுத்தி
மகத்தான வஸ்துவிலே யெழுசுத்தி

சீராகத் தேசியுட அமுரிநீரில்
சிறப்பாக யேழுசுத்தி செய்துபாரே. (1)

End :

செந்தூரங் கொடுப்பதற்கு வகையைக்கேளு
செயப்படுத்த வீரமுடன் பூரங்கூட்டி
மந்தமாஞ் சரக்கு ரெண்டும் பொடித்துக்கூட
அப்பனே கூடவிட்டுக் கலந்துகொண்டு
தந்திரமாய் வெள்ளிக்கொன் ருருமாப்போடு
தாரணியில் வயதுபாதி ஞறுபிள்ளை
நலந்துலவு மாத்தாளைப் பூசித்தாக்கால்
நாட்டுவாள் வேதையிட்டு நடத்திப்பாரே. (12)

சுறுக்கம் முற்றும். குருபாதமே கெதி.

## 299. நெ. 186. (*f*) போகநாதர் சூத்திரம்.

(ஏடுகள் 11. பக்கத்திற்கு 8 வரிகள்)

வாலைச் சக்கிர நிர்மாணம் (ஸ்ரீ சக்கிரம் அதாவது வாலை = பாலா) இப்பூஜா விதி வந்த பரம்பரை, பூஜை செய்யும் முறை, (13 செய்யுட்களில்) பிராணயாம முறைகள், போகர் பெயர்வரக் காரணம், குளிகை செய்முறை ஞானத்தின் கரு, அப்பிரகச் செந்தூரம், பூரணத்தின் பல்வேறு பெயர்கள் முதலானவைகள் உள்ளன.

Beginning :

பாரப்பா வாலைதன்னைத் தியானம் செய்யப்
பாங்கான நவகோண மிட்டுச்சூழச்

சேரப்பா யிருவளையம் வாசல்நாலு
சிறப்பாக றீங்கார மிட்டுநன்றாக்
காரப்பா கீழ்வாசல் கணபதியுங் கந்தன்
கருணையுள்ள சயவீரப் பாகுத்தேவன்
ஆரப்பா அறைகளிலே கிழக்குத்தொட்டு
அகரமுட னுகாரஞ்சவ்வு மகாரம்போடே. (1)

End:

பெருமையென்ற மனந்தானே சித்தத்தில்சென்று
பெருகியுட னென்றாகிப் புத்தியுடன்கூடி
யுருமையென்ற குண்டலியாள் யோகத்துள்ளே
ஊடினு லப்பிறம்போம் மூலத்துள்ளே
அருமையுடன் வீற்றிருக்கும் கலைகள்ரெண்டும்
அப்போது சுழியென்று மருமைகேளு
பருமையுட காயத்தில கத்திநேரேப்
பாயுமடா பாயுருவின் ஞானங்காணே. (43)

## 300. நெ. 186. (g) திரட்டு வாகடம்.

(ஏடுகள் 18. பக்கத்திற்கு 8 வரிகள்)

இது ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளது. கடைசி 2 ஏடுகளில் உப்புக் கட்டுமுறை, கிரிச்சனம், துருசு பற்பம், சுரத்திற்கு மருந்து, சுயமக்னி, ஊறலுக்கு மருந்து வெள்ளைக்கு மருந்து முதலான முறைகள் வசன நடையில் உள்ளன.

## 301. நெ. 186. (h) அகஸ்தியர் திருநடனம் 48.

(ஏடுகள் 18. பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் ரஸவாதம், ஞானசித்தி இவைகளுக்கான முறைகளுள்ளன. அரிதாரக்கட்டு, கெந்தகக்கட்டு, பாஷாணக்கட்டு, நாகவெள்ளிமுறை, நாகக்கட்டு முறை, மந்தாரகாசத்திற்கு லேகியம், அரைப்பிற்கு மருந்து, துருசுக்குரு முறை, வைரவன் பூசை, வாந்திக்குக் கிராம்பு லேகியம், அஷ்டலேகியம், வாடைச் சூரணம், (வாசனைப் பொடி) லிங்கச் செந்தூரம் முதலான முறைகள் உள்ளன.

Beginning :

நாடியதோர் பூரணமாம் வேதாந்தத்துள்
நடனதிரு சூத்திரத்தைப் பாடுதற்கு
ஆடியதோர் கணபதியுங் கந்தன்காப்பு
அருள்பெருகும் ரிஷிகள்முதல் சித்தர்காப்புக்
கூடியதோர் ஞானபர வாலையாலே
கூறுகிறே னகாரமுடி ரீங்காரத்தால்
பாடியதோர் பலநூல்கள் பொய்யாய்ப்போக
பாலாகு மெந்தனுட னூல்கள்தானே. (1)

End :

தானென்ற லிங்கச்செந் தூரஞ்சொல்வேன்
தாம்பூலம் பொடிவெங்கருவா லரைத்துப்பூசி
மானென்ற வளகில்மூலை பயிலுமேலே
மடல்துத்தம் யெருக்கம்பா லதற்குமேலே

காவென்ற சாம்பிராணி கூடமொன்று
ஞானுசீலை மண்செய்து காடைமூன்று
வேனென்ற சாதிலிங்கம் வெகுநோய்க்காகும்
விளம்புறேன் நாற் பத்தெட்டுச் சூத்திரந்தான்
முற்றே.

கணபதி துணை.

குறிப்பு :

இதற்குப்பின் 6 ஏடுகளில் அடியில்கண்ட விபரங்கள் உள்ளன.

ரக்தகணைக் குணம், சத்தி குன்மத்திற்கு மருந்து, சத்திகுன்மக் குணம், விஷத்திற்குக் குளிகை, விஷத்திற்கு நசியம், நாலுநாள் முறை ஜ்வரத்திற்கு மருந்து. சுரத்திற்கு, உருண்டை முதலியவைகள் உள்ளன.

பின்னர்

விநாயகச் சக்கரம், ஆறு ஆதாரங்களின் சக்கிரம், நித்திரையில் பல் கடிக்கிற பிள்ளைக்குக்கட்ட, ராத்திரி மூத்திரம் பெய்தபிள்ளைக்குக்கட்ட, பிள்ளையில்லாதவளுக்குக்கட்ட, தனக்கு வேண்டினவள் வர, பிள்ளை தோஷத்திற்குக் கட்ட முதலானவைகளுக்கான பற்பல சக்கிர முறைகள் எழுதப்பட்டுள்ளன.

## 302. நெ. 186. (*i*) சங்கராச்சாரியார் நாதாந்த விளக்கம்.

(ஏடுகள் 2. பக்கத்திற்கு 8 வரிகள்)

ஞானிகள் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது.

Beginning :

சற்குருவை வணங்காமற் தள்ளிவைத்துத்
தனையறியாற் குருக்களையே சார்ந்துகொண்டு
பொய்க்குழியால் நரகத்தில் விழுந்துபோகும்
புருஷருக்குப் பொருளுரைத்தாப் புகலுண்
சற்குருவாம் கல்லுகளைத் தொழுதுநின்று [டாமே
கைகட்டி வாய்ப்புதைத்துக் கள்வர்போல
வற்குருவாஞ் சமயமதஞ் சார்ந்துகொண்டு
வகையறியாப் புல்லருக்கு வண்மையுண்டோ.

End :

ஞானியாம் நாதன் பாதம் நலமுடன் வணங்கிக்கேட்டால்
ஞானியாம் பேருமுண்டாம் நாதாந்த வீட்டைச்சேர்வீர்
நாதாந்த வீடுகண்டான் ஞானியென்றுரைக்க லாகும்
நாதாந்த வீடுகாணுற் நலமில்லாப் பொருள்களாகும்
நாதந்த வீட்டைத்தானே நற்குருவருளால் கண்டு
நாதாந்த வீட்டைத்தானே நாடுவீர் ஞானிமாரே.

---

## 303. நெ. 186. (j) சங்கராச்சாரியார் நாதாந்தச்சாரம்.

---

(ஏடுகள் 2. பக்கத்திற்கு 7 வரிகள்)

குருவின் லட்சணம் கூறப்பட்டுள்ளது.

Beginning :

கல்வியைப் பெருமையாகக் கதறியேதிரிவார்புலவர்
சொல்லிய ஞானநூலின் சூட்சத்தை யறியமாட்டார்

வல்லவர் நாங்களென்று வாதுகள் மிகவேபேசி
யெல்லையில்லாத கர்மத் தெய்திடே முழுகுவாரே.

End :

குருக்கள்மார் யென்றுரைப்பார் பொருளுங்காணர்
குவலயத்தி லுபதேசங் கூறிநிற்பார்
மருடர்களாய் சிஷனுக்குப் பொருள்கள்சொல்வார்
மாசத்த சோதியுடை வடிவைத்தேரார்
பொருள்களாம் போதமொரு சத்துமில்லை
பொய்களே மிகப்பேசிப் பொருள்பறிப்பார்
அருள்களா யாகமத்தி னடவுகாணர்
அறிவில்லாக் குருக்களென்றே யரையலாமே.

## 304. நெ. 186. (k) பலதிரட்டு வைத்யம்.

(ஏடுகள் 12. பக்கத்திற்கு 6 வரிகள்)

இதில் செம்பு சுத்தி, பாஷாணக் கட்டு, மகா சிந்தாதி எண்ணெய், கெந்தகத் தைலம், பழத்தெண்ணெய் கலிங்காதி யெண்ணெய், வாதத்திற்கு எண்ணெய், இஞ்சி லேகியம் முதலானவை உள்ளன.

Beginning :

அறிந்துமே தாமிரத்தின் சுத்திகேளு
அரிதப்பா சொல்லுகிறென் தகடுவாங்கிப்
பரிந்துதான் பழச்சாறு புளியிலையின் சாறு
பசுவின்கோ மியத்தில் பத்துநாளூறி

பொரிந்துதா னெடுத்ததனைப் புளியிட்டுத்தேய்த்து
 பொதிந்துசெம்பில் புளிநறளைக் கிழங்குநெய்
 கொட்டான் பட்டை
செரிந்து தா னெடுத்தனைப் பொதிந்து செம்பில்
 திறமாகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே.
(1)

End :

## கழற்சி எண்ணெய்

கழற்சியிலைச் சாறு, செம்முள்ளிச் சாறு, சுடுதுரத் திச்சாறு, சங்கங்குப்பிச் சாறு, நொச்சியிலைச்சாறு, கவுழ்தும்பைச் சாறு, சிவந்த கண்டங்கத்தரிச் சாறு, நிலப்பனைக்கிழங்குச் சாறு, ஈருள்ளிச்சாறு, கழுதையுடகத்தைச் சாறு வகைக்கு நாழி, கழுதை மூத்திரம் கூட ஏரண்டெண்ணெய் நாழி, பாண்டத்தூத்தி, மதுரம், முத்தக்காசு, ஜாதிக்காய், கிராம்பு, கோஷ்டம், ரோகிணி சுக்கு, கர்போகரிசி, ஏலம், வகைக்கு வராகன். முன் சாத்திலரைத்துக் கலக்கி எண்ணெய் மெழுகுபதம் வடித்துக் கொண்டு, கறண்டி எண்ணெய், 7 நாட்கள் கொள்ளக் கருங்கிரந்தி, செங்கிரந்தி,கள்ளிப்பூக் கிரந்தி மேகவெட்டை, மேகவாயுவு, மேகமிருபத்தொன்றும் போம். கடும் பத்தியம்.

## 305. நெ. 187. சட்டை முனிவர் ஞானம் நூறு.

(ஏடுகள் 25. பக்கத்திற்கு 8 வரிகள்)

இதில் ப்ராண லக்ஷணம், பஞ்சபூத லட்சணம், வைராக்ய லக்ஷணங்கள், சட்சக்ர நிரூபணம், குண்டலி சக்தியை எழுப்பும் விதம், வாஸனைபலத்தை அடக்கும்முறை சுந்தரானந்தரும், கொங்கணரும் சந்தித்தல், தசதீட்சை விபரம், பெண்ணாசை விலக்கல், வாதி லட்சணம் முதலானவை உள்ளன.

**End :**

தாங்கிநின்ற சரிதையிலே நின்றசெடம் வீழ்கில்
தப்பாது கிரிகையுள்ளே சாரம்பென்னு
வாங்கிநின்ற கிரிகைதனைவிட்டு வீழ்ந்ததானல்
மகத்தான வுடலெடுத்து யோகம்பண்ணு
மோங்கிநின்ற யோகம்விட்டு வீழ்ந்ததானல்
வுத்தமனே வுசந்து நின்றஞானத் தேத்தும்
பாங்கிநின்ற அச்சின்ன மவுனமுத்திப்
பரிவாக வாய்த்தவர்கள் அறிந்துகொள்ளே. (1)

**End :**

ஆகவப்பா யிருபத் தஞ்சுநூறு
அரைந்திட்டேன் வாதவித்தை யறிந்துகொள்ளு
மாகவப்பா யிதற்குள்ளே ஞானம்நூறு
மப்பிறத்தே சொன்னதொரு ஞானம்நூறு
மாகவப்பா யிருபத்து அஞ்சுநூறு
அறிந்தமட்டும் சொல்லிவந்தேன் வல்லோருண்டா
லாகவப்பா பார்த்துரைத்தா லிகபரமுஞ்சித்தி
ஆதியென்ற குருவருளால் சொன்னேன்
முற்றே. (101)

சிவமயம்.

சட்டைமுனியார் ஞானம் நூறு முற்றும்.